Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 14 | வெள்ளி - 42 | 12 - 18 - டிசம்பர் - 2003



## தீர்வு வெகுதூரமா?

## சமாதானத்தின் அநாதைகள்

## ரஜீவ்-பிரபா

## இரகசிய ஒப்பந்தம்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 12.12. 2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# புலிகள் விரும்புவதால் மட்டும் சமாதானம் காப்பாற்றப்படாது!

யாழ்ப்பாணத்தின் நகர மையத்தில் வைத்து பத்திரிகை விற்கும் நபர் ஒருவர் இராணுவத்தால் சுடப்பட்டிருக்கிறார். இத் துப்பாக்கிச் சூட்டிற்கு பிறிதொருவரும் இலக்காகியிருக்கிறார்.

நகரத்திற்கு பல்வேறு அலுவல்களுக்காகவும் வந்த மக்கள் இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினரையும் அவர்களது வாகனத்தையும் சூழ்ந்து கொண்டு சட்டவரைமுறைக்கு இதனை உட்படுத்தாது நகரமுடியாதென கோசமிட்டிருக்கின்றனர். அங்கு மேலும் குவிக்கப்பட்ட சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கிப்பிரயோகம், அடிதடிமூலம் இராணுவம் இந்த முற்றுகையை முறியடித்து விலகிச்சென்றிருக்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிந்தனாவாதி அரிஸ்ரோட்டில் கூறிய வார்த்தை ஒன்று உண்டு. "புரட்சி அற்பமானதல்ல ஆனால் புரட்சிக்கான காரணம் அற்பமானதாக இருக்கலாம்."

ஆக்கிரமிப்பாளர்களுக்கு மண்டையில் உறைக்காத விடயம் இது. இதனாலேயே யுகம் யுகமாக புரட்சியினாலேயே மனிதவரலாறு நகர முடிந்திருக்கிறது. ஒரு வகையில் பார்த்தால் இந்த யுத்தமும் அந்த ஞான வார்த்தைக்கு பொருந்தும்.

முன்பு தம் அண்டை அரசாக இருந்த தமிழர்களுக்கு சிங்களவர்கள் இத் தீவில் அவர்களின் மொழிக்குரிய அந்தஸ்த்தை அனுமதிக்காததன் விளைவே இன்று பிரிவினைக்கான யுத்தமாக பூதாகாரம் பெற்றதெனலாம். வாகனத்தில் பொறிக்கப்பட்ட சிங்கள சிறி எழுத்து தமிழர்களின் மொழியுணர்வை அதிகம் தூண்டியதெனலாம்.

இந்த மொழிப்பிரச்சினையைத் தொடர்ந்து வந்த அரச பயங்கரவாத வன்முறையில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்கூறிய தன் சுய கதையை கேட்ட ஒரு பாலகன் ஒரு புரட்சிக்குத் தலைமைதாங்க நேர்ந்தது.

ஆயினும் அரிஸ்ரோட்டிலின் ஞான வார்த்தை உறைத்தபாடில்லை. சமாதானம் புலிகள் தாம் பொறுமையோடு இருக்கவேண்டும் என விரும்புவதால் மட்டும் காப்பாற்றப்பட்டுவிடாது. புலிகள் பொறுமையோடிருப்பது சரியென்று மக்கள் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். புறச்சூழல் புலிகளுக்கு இடமளிக்கவும் வேண்டும்.

ஒரு ஆங்கிலப் பொன்மொழி ஒன்று உண்டு. "பொல்லுடன் நிற்கும் சமாதானம் யுத்தத்தை விடவும் பொல்லாதது" என்று. இந்த யுத்தத்தின் களம் அதிகம் வடக்கு கிழக்கு என்பதால் யுத்தத்தின் அனர்த்தத்தை அதன் தீ கங்குகளின் அகோரத்தை அதிகம் அனுபவித்தவர்கள் தமிழ் மக்கள்தான். எனவே சமாதானத்தின் உருசியை தமிழர்களை விட வேறுயாரும் விரும்ப முடியாது. சமாதானத்திற்காக எத்தனை பொறுமையைக் கடைப்பிடிக்கவும் சகித்துக்கொள்ளவும் தயாராகமாட்டார்கள். ஆனால் சமாதானம் பொல்லுடன்தான் நிற்கிறது என்பது திரட்சி பெற்று ஒரு அலையாக அதன் ஆபத்து எழாதவரைதான் இது சாத்தியம்.

சமாதானம் பொல்லுடன்தான் நிற்கிறதென்பதை சிங்கள இராணுவம் மக்கள் மீது புரிந்த சமாதான வன்முறைகள் பல உணர்த்தியிருகின்றது. அந்த வடுக்கள் திரட்சி பெற்று ஒரு அலையாக எழும் வாய்ப்பு மேலெழுந்து வருவதை சிங்கள தேசம் உணருவதாயில்லை.

காந்தி இந்திய சுதந்திரப்போரின்போது சொன்ன - தீயதற்கு ஒத்துழையாமை என்பது மனிதனின் புனிதக்கடமை என்று. வேற்றுமொழி பேசுகின்ற, வேற்று நிலப்பரப்பிலிருந்து வந்திருக்கின்ற, எமது வாழ்வை வெறுமையாக்கிய, யுத்தத்தின் வெம்மையில் எம்மைக் குளிக்க வைத்தவர்கள் துப்பாக்கியோடு எமது தெருவில் நின்று ஒரு இளைஞனிடம் அல்லது சிறுவனிடம் நீ விற்கும் பத்திரிகையை பணமின்றிக்கொடு என்று எதன் அடிப்படையில் கேட்கமுடியும். ( பத்திரிகை விற்பதோ அல்லது அப்பத்திரிகையோ சட்டத்திற்கு முரணானது என்றால் கூட வேறுவிடயம்.) அதனைப்பறித்து எதனடிப்படையில் கிழிக்கமுடியும். எதனடிப்படையில் அவனை மிரட்ட முடியும். அவர்களது மிரட்டலுக்கு எதனடிப்படையில் அவன் பணியவேண்டும்.

கடைசியாக ஒரு ஸ்பானியப் பழமொழியை மேற்கோள்காட்ட விரும்புகிறோம். "ஒரு மோசமான சமாதானம் சமாதானத்தை விடவும் கொடூரமானது."

தமிழ் மக்கள் யுத்தத்திலிருந்து விடுபடவிரும்பியே சமாதானத்திற்காக பொறுமை காக்கவும், விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவும், தியாகங்களைப் புரியவும் இசைவு பெற்றனர். இது மோசமான சமாதானம் என்று உணர்த்தப்பட்டால் அதிலிருந்து தப்பிப்பதற்காகவே யுத்தம்வரும். அது சமாதானத்தின் முரணாக இருக்காது. இன்றைய சமாதானத்தின் வளர்ச்சி விதியாக இருக்கும்.

## தூரனின் பார்வையில்

# 'மகேஸ்வர ஜாலம்' ஒரு அரசியல் நாடக நோக்கு

யாழ் பலாலி வீதியில் சிறிலங்கா அரசின் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஒரு மறியல் போராட்டத்தை பாதுகாப்புப் படையினருக்கு எதிராக, அவ்வழியால் படையினரின் வாகனப்போக்குவரத்தை தடுக்கு முகமாக நடத்தியுள்ளார். ஊடகங்கள் ஊடாக பரபரப்பான செய்திகளாக வெளிவந்து எல்லாராலும் பேசப்பட்ட இந்தச் சம்பவத்தின் முடிவு வழமைபோல ''அரசியல் தனமான பேச்சுவார்த்தை'' என்ற நாடக அரங்கேற்றத்தின் பின் மகேஸ்வரன் புகழ் என்ற மங்களம் பாடி முடிவுற்றது. கிட்டத்தட்ட ஒரு தமிழ் திரைப்படத்திற்கேயான சகல அம்சங்களையும் கொண்டதாக இந்த நிகழ்வின் சகல காட்சிகளும் ஒரு திட்டமிட்ட ஒழுங்கின்படி சுமுகமாகத் தொடங்கி சுறுசுறுப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு பரபரப்பாக நகர்ந்து எல்லாரும் எதிர் பார்ப்பதுபோன்று ஒரு உச்சக்கட்ட காட்சியையும் உள்ளடக்கி இறுதியில் "சுபமாக" முடிவடைந்தது. ஒரு தற்போதைய சினிமாபடத்தைப்பார்த்து வெளியேறும் ஒரு தேடல் உணர்வு மிக்க ரசிகனின் மனதில் ஏற்படும் வெறுமை உணர்வையே உணர்வெழுச்சி மிக்க தமிழ்மக்களின் மனங்களில் ஏற்படுத்தியது.

காட்சி ஒன்று

குடாநாட்டின் பிரசித்தி பெற்ற அந்த முருகன் ஆலயக்கோபுரம் கம்பீரமாகத்தெரிய பின்னணியில் ஆலய மணியின் ஓசை ஒலிக்கிறது.

கோவில் நுழைவாசலிலும் முன் புறத்திலும் பக்தர்கள் பலர் குழுமியுள்ளனர். கோவில் முன்புறம் அலங்கரிக்கப்பட்ட நிலையில் அங்கு விழாவொன்று நடைபெறுவதற்கான சூழல்களை கட்டத்தொடங்குகிறது.

அந்தக் கோவிலுக்கு நீண்ட காலத்தின் பின் மின்சாரம் வழங்கும் நிகழ்வு நடைபெறப்போகிறது.

சாதாரண ஒரு சிறு நிகழ்வு தான். ஆனால் அதையும் பெரிதாக்கி பரபரப்பையுண்டுபண்ணி ஒரு சாதனையாகக் காட்ட முயலும் அரசியல்த் தனம் தெளிவாகத்தெரிகிறது.

அந்த நிகழ்வுக்கு அமைச்சர் மகேஸ்வரனே வருகை தந்து இராணுவ பாதுகாப்பு வலயத்தை அண்டி அமைந்துள்ள அந்தஆலயத்திற்கு ஒளியேற்றும் நிகழ்வை ஆரம்பிக்கப்போகிறார் என்றால் அதனூடான அரசியல் முக்கியத்துவ பிரசாரத்தினை உணரமுடியும்.

காட்சி இரண்டு

அமைச்சரின் விஜயத்திற்கேயுரிய சகல ''பந்தா''பரிமாணங்களுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி ஒவ்வொரு கட்டமாக நகர்கின்றது.

இராணுவ வலயப்பகுதிக்குள், இராணுவக் கண்காணிப்பு நிறைந்த சூழலில், இராணுவ மற்றும் ஏனைய அவரின் பாதுகாப்புக்குரிய அனைவருடனும் வந்துசேரும் அமைச்சர் தனது கடமையை பக்தி சிரத்தையுடன் மேற்கொள்வதான காட்சியை ஊடகங்களின் ஒளிப்பதிவுக்கருவிகள் உள்வாங்கிக் கொள்கின்றன.

எல்லாம் சுமுகமாகவே நடக்கிறது.

ஆலய நிகழ்வொன்று அரசியல் நிகழ்வாக பதிவுசெய்யப்படுகிறது.

காட்சி மூன்று

அமைச்சரின் மாவிட்டபுர விஜயம் பக்திபூர்வமாக முடிய, அவர் அதற்கப்பால் சற்று தூரத்தில் அதாவது கீரிமலையிலுள்ள நகுலேஸ்வரர் ஆலயத்திற்குள் செல்ல விரும்புகிறார்.

அது இராணுவ அதியுயர் வலய பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் அமைந்திருப்பதால் அதற்குச்செல்ல இராணுவம் அனுமதிக்க மறுக்கிறது. (இந்தக் கட்டத்தில் கதையில் சூடேறத் தொடங்குகிறது)

அமைச்சருக்கும் இராணுவத் தரப்பிற்குமிடையே கடுமையான வாதப்பிரதிவாதம் நடக்கிறது. இராணுவம் - அதுவும அவரும் அமைச்சராக இருக்கும் அமைச்சின்கீழ் இயங்கும் இராணுவம் அமைச்சரின் அபிலாசையை நிறைவேற்ற மறுக்கிறது.

இராணுவம் பெரும் பான்மை இனத்தின் காவல்படை.

அமைச்சர் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதி எனக்காட்டிக்கொள்ள விரும்புபவர். (ஆஹா என்ன அருமையான அரசியல் கதைக்கான களம்!)

(அமைச்சரும் அதே பேரினவாத சிந்தனையாளர்களால் சிறுபான்மையினத்தவருக்கு விரோதமாக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கு விசுவாசமாக இயங்குவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பதவியேற்ற ஒருவர்தான் என்பதை பக்தர்கள் (அதாவது ரசிகர்கள்) நினைத்தால் காட்சியும் சுவாரஸ்யம் கெட்டுவிடும்.)

வாதம் தொடர்கிறது -

தான் அமைச்சர் என்கிறார் மகேஸ்வரன்.

மகேஸ்வரன் என்ன அந்த மகேசனே வந்தாலும் விடக்கூடாது என்பது உயர் அதிகாரிகளின் உத்தரவு என்கிறது இராணுவம்.

இப்பாதை தமிழ் மக்களின் பாவனைக்கு மூடப்பட்டுள்ளது. நீங்கள் அமைச்சரானாலும் தமிழர் என்ன தொனிப்பட இராணுவம் இறுக்கமாக நிற்க.... அதே சமயம் அப்பாதையூடாக கீரிமலைப்பக்கம் போகவந்த பெரும் பான்மையோரின் வாகனத்தை இராணுவம் அனுமதித்துவிடவே அமைச்சர் கொதித்துப்போகிறார்.

படையினருடன் வாக்கு வாதத்தை அமைச்சர் தொடர்ந்தபோதும், அவர்கள் அவரை எந்தவகையிலும் பொருட்படுத்தவில்லை.

ஆத்திரமடைந்த அவர் சேந்தாங்குளம் பாதை வழியாக கீரிமலை சென்று திரும்புகிறார்.

காட்சி நான்கு

அமைச்சர் இராணுவத்திற்கு ஒரு பாடம் புகட்ட நினைக்கிறார்.

பலாலி வீதியில் அவரது வீடு உள்ளது. அதனைக் கடந்து செல்லும் இராணுவ வாகனங்களை அப்பகுதியால் செல்லவிடாது மறியல் போராட்டம் ஒன்றை நடத்துகிறார். அவரின் ஆதரவாளர்களும், பொதுமக்களும் அதில் கலந்துகொள்கிறார்கள்.

இராணுவ வாகனங்களை பொதுமக்கள் செல்லவிடாது தடுக்கவே அங்கு ஒரு பரபரப்பான சூழல் ஏற்படுகிறது. இராணுவத்தினருக்கும் மக்களுக்குமிடையே முறுகல் நிலை தோன்றுகிறது. ஆயுதபாணிகளான இராணுவத்தினர் மக்களை கலைக்க முற்பட அமைச்சர் அங்கு பிரசன்னமாகி இருப்பது அதற்கு இடையூறாக ஒரு மூன்று மணி நேரத் திரைப்படம், அல்லது மேடைநாடகம் நடந்தேறுகிறது.

இராணுவப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், கண்காணிப்புக்குழு அதிகாரிகள் என அனைவரும் கடைசிக்காட்சியாக சமுகமளிக்கின்றனர்.

போராட்டத்தை கைவிடுமாறு அமைச்சரைக் கேட்க அவர் அதற்கு மறுக்கிறார். மேலும் இராணுவ உயர் அதிகாரிகள் வந்து தமது பக்கப் பிழைக்கு மன்னிப்புக்கோரி இனிமேல் இது போல் பிழை நடக்காது என்கின்றனர். உறுதி கூறுகின்றனர்.

இவையனைத்தையும் 'கொட்டன்களுடன்' நிற்கும் இராணுவத்தினர் பார்த்து நிற்கின்றனர். சுபம் அல்லது வணக்கம் என்பதுடன் காட்சி நிறைவுறுகிறது.

சரி இனி விடயத்திற்கு வருவோம்.

ரணில் ஆட்சி பீடம் ஏறி, மகேஸ்வரன் அமைச்சராகி, போர் நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என அனைத்தும் நடந்து, சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து பல சுற்றுக்கள் நடந்து முடிந்து, இப்போது சமாதான முன்னெடுப்புக்கள் யாவும் ஒரு முட்டுக்கட்டை நிலையை அடையும் வரை எவ்வளவோ நிகழ்வுகள் நடந்தேறிவிட்டன.

சமாதானத்தின் பேரால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தமிழ் மக்களுக்கு குறிப்பிடத்தக்க முறையில் எந்தவிதமான முன்னேற்றமோ நம்பிக்கை தரும் மாற்றங்களோ ஏற்படவில்லை.

சமாதானத்தின் பெயராலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும், அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், அவர்களுக்கேயான, அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டும் அவலங்களுக்குள்ளாக்கப்பட்டு வருவது தெரிந்தவிடயமே.

அமைச்சர் என்ற வகையில் மகேஸ்வரன் அவர்கள் இவை தொடர்பாக அவ்வப்போது தனிப்பட்ட முறையில் சம்பிரதாயபூர்வ குரலை மட்டும் தான் எழுப்பி வந்துள்ளாரேயொழிய இந்த முறை செய்தது போன்று 'பிரபலத்திற்காகவேனும்' மக்களைத்திரட்டி அரசுக்கெதிராகவோ படையினருக்கெதிராகவோ போராட்டம் எதனையும் நடத்தியதில்லை. அந்தவகையில் அவர் ஒரு சிங்கள அரசின் அமைச்சராகவே பல வகையிலும் நடந்துகொண்டுள்ளார்.

வெறுமனே கோவில்களையும், இந்து மத நிலையங்களையும் புனரமைப்பதற்கும், புத்தெழிலூட்டுவதற்கும் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதியையேனும் தனது மக்களின் உரிமை தொடர்பான விடயங்களில் காட்டியதில்லை.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பென்ற வகையில் பதவிக்கு வந்த மகேஸ்வரன் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் கோவிலை பார்க்கச்செல்லும் தனது உரிமை மறுக்கப்பட்டதால் போர்க்கோலம் கொண்ட அதேவேளை, அப்பகுதிகளுள் தமது வீடுகளைப் பார்க்கச் செல்லும் மக்கள் மீது இராணுவம் விடுக்கும் அச்சுறுத்தலுக்கெதிராக மக்களை அணி திரட்டிப்போராட்டம் எதையும் இதுவரை நடத்தியது கிடையாது.

இறைவனின் பக்தனாக தன்னை இனம்காட்டிய மகேஸ்வரன் அவர்கள் மக்களின் தொண்டனான தன்னை அடையாளம் காட்டியதில்லை. ஆனாலும் மக்களை தனது ஆதரவாளர்களாக காட்டிக்கொள்வதற்கான முயற்சிகளில் அவர் சோர்வுற்றதேயில்லை.

இந்த நிகழ்ச்சியும் அத்தகைய ஒரு திட்டத்தின் அடிப்படையிலானதேயாகும்.

இந்தச் சம்பவம் அவரை பிரபல்யப்படுத்திவிட்டது உண்மையே!

ஆனால் இதனால் மக்களுக்கு என்ன விடிவு ஏற்படப்போகிறது என்பதுதான் கேள்வி.

எனினும் அமைச்சரின் இந்த பிரசார யுத்தியால் அவருக்குத் தெரியாமலேயே ஒரு நன்மையும் நடந்தேறியுள்ளது.

அதாவது அமைச்சர் ஒருவரையே அவர் அங்கம் வகிக்கும் அரசின் பாதுகாப்புப் படைகள் இரண்டாம் தர அமைச்சராக, பிரஜையாக, சிறுபான்மை இனத்தவராக உதாசீனம் செய்து அவமதிக்கிறார்கள் என்றால் சாதாரண தமிழ் மக்களை அவர்கள் எந்தளவிற்கு அவமதித்து இம்சைப் படுத்துவார்கள் என்ற எண்ணத்தை வெளியுலகிற்கு உணர்த்தியுள்ளது என்பதே அதுவாகும்.

தான் சார்ந்த அரசின் கையறு நிலையையும், அதன் கீழான பாதுகாப்புப்படைகளின் ஆதிக்க வெறியையும் இந்த சினிமாத்தனமான - நாடகத்தனமான நிகழ்வின் மூலம் உணர்த்தியமைக்கு மகேஸ்வரனுக்கு நன்றி கூறலாம்.

# சமாதானத்தின் அநாதைகள்

நிலாந்தன்

**வவுனியாவிலிருந்து** வந்த ஒருவர் சொன்னார், கிளிநொச்சிச் சந்தையில் கடலுணவுகளின் விலை மிக அதிகமாயிருக்கிறது என்று.

ஒரு கிளிநொச்சி வாசி சொன்னார், தான் முன்னெப்பொழுதும் இந்த விலை கொடுத்து கணவாய், றால் போன்றன வாங்கியதில்லை என்று.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான சந்தைகளில் நிலமை இதுதான்.



சமாதானத்துக்கு முன்பு இருந்ததைவிடவும் இப்பொழுது விலைகள் பயங்கரமாக அதிகரித்துவிட்டிருக்கின்றன.

ஒரு அரச ஊழியர் சொன்னார், முன்பு தான் சந்தைக்குப் போகும் போதெல்லாம் தனது பக்கத்துவீட்டாரும் கறி வாங்கக் காசு தருவதுண்டாம். ஆனால் இப்பொழுதெல்லாம் அவர்கள் அப்படிக் கறிவாங்கித்தரும்படி கேட்பதில்லையாம். ஏனென்று கேட்டால் இன்றைக்கு விரதம், இன்றைகு மரக்கறி என்று ஏதாவது ஒரு காரணம் கூறப்படுமாம். ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால், பெருவிலை கொடுத்துக் கறி வாங்கும் சக்தி அவர்களுக்கில்லை என்பதுதானாம்.

இன்று சராசரி வன்னி வாசியின் நிலை இதுதான். பெரு விலை கொடுத்து கறிவாங்க முடியாத அளவுக்கு அவர்கள் வாழ்க்கைச் செலவுகளோடு போராடவேண்டியிருக்கிறது.


இதற்குக் காரணம் என்ன?

காரணம் இதுதான், சமாதானம் என்று ஒன்று வந்து கிளிநொச்சிச் சந்தை போன்ற வன்னியில் உள்ள எல்லாச் சிறுசந்தைகள் பட்டினங்களையும் நாட்டின் ஏனைய பெருஞ்சந்தைகள், பட்டினங்கள், நகரங் களுடன் இணைத்துவிட்டது. அதா வது வன்னிச் சிறு சந்தைகள் முழு இலங்கைத் தீவினதும் பெருஞ் சந்தைகளுடன் இணைந்துவிட்டன. இதனால் வன்னிச்சிறு சந்தைகளில் பண்டங்களின் விலைகள் நாட்டின் ஏனைய சந்தை நிலவரங்களுக்கேற்ப உயர்ந்துவிட்டன. ஆனால் அதே சமயம் வன்னி விவசாயியின் வாழ்க்கைத்தரமோ இன்னமும் அந்தளவுக்கு உயர்ந்துவிடவில்லை.

அவனது வீடு இப்பொழுதும் உடைந்துபோய்த்தானிருக்கிறது. அவனது கிராமங்கள் மழைக்காலத்தில் வெள்ளத்தால் சுற்றிவளைக்கப்படுகின்றன. அவனது தெருக்களில் போட்டு மிதிக்கப்படும் கிறவல் கோடையில் காற்றில் புழுதியாய் எழுந்து சுவாசப்பைகளில் படிகிறது. மாரியில், அறுத்தோடும் வெள்ளத்துட் கரைந்து அள்ளுண்டு போகிறது. கண்டிவீதி போன்ற சில ஆசீர்வதிக்கப்பட்ட சாலைகளைத் தவிர அவனுடைய மற்றெல்லாச் சிறு தெருக்களும் இப்பொழுதும் பிச்சைக்காரத் தெருக்களாகத்தான் காணப்படுகின்றன.

வெளிநாட்டுக்காசு வரும் சில குடும்பங்கள் இதில் ஓரளவுக்கு நின்று பிடிக்கின்றன, ஏனைய சராசரி விவசாயி மற்றும் அரச ஊழியரைப் பொறுத்தவரை நஷ்டஈடு வரும்வரை வீட்டைத் திருப்பிக்கட்ட முடியாத ஒரு நிலை.

வெளிநாட்டுக் காசு ஒன்று என்று இல்லையென்றால் வன்னியில் இப்பொழுதிருக்கும் சிறுமினுக்கமும்கூட இருக்காது. வன்னிச் சிறு விவசாயி நெல்லைச் சந்தைப்படுத்துவதில் உள்ள இடர்களைத்தாண்டித் தனது உபரி உற்பத்தியைத் திரட்டி இடிந்த தனது வீட்டைக் கட்டியெழுப்புவதென்றால் இன்னும் பல வருடங்கள் காத்திருக்கவேண்டும்.



ஒரு புறம் வன்னிச் சந்தைகள் நாட்டின் ஏனைய பெருஞ் சந்தைகளுடனான போட்டியில் இறங்கிவிட்டன. ஆனால் சராசரி வன்னிக்குடிமகனின் வாழ்க்கைத் தரமோ நாட்டின் ஏனைய சராசரிக் குடிமகனின் வாழ்க்கைத்தரமளவுக்கு இன்னமும் உயர்ந்து விடவில்லை.

இதில் லாபமீட்டுவதெல்லாம் இடைத்தரகர்களே. சமாதானம் என்று சொல்லப்படுவது அவர்களுடைய வழிகளைத்தான் திறந்துவிட்டிருக்கிறது. சாதாரண குடிமகனைப் பொறுத்தவரை நாட்டின் பிற பாகங்களில் உள்ள சாதாரண சனங்கள் அனுபவிக்கும் பல அற்ப விசயங்கள் கூட அவனுக்குக் கிடைப்பதில்லை.

வன்னியில் இருந்து மலேசியாவுக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்ற ஒரு அரசஊழியர் சொன்னார், - அவருடன் அந்தப் புலமைப்பரிசுக் கற்கை நெறியில் கலந்துகொண்ட சுமார் 150 பேர்களில் அவர் ஒருவரிடம் மட்டும்தான் ஈமெயில் முகவரி இருக்கவில்லையாம்.

இதேபோன்ற ஓரனுபவம் இந்தப் பத்தி எழுத்தாளருக்கும் ஏற்பட்டது. கொழும்பில் ஹிரு குழுவினர் ஏற்பாடு செய்திருந்த தமிழ் - சிங்கள கலைக்கூடலில் கலந்துகொண்ட போது அங்கே வந்திருந்த சிங்களத் தரப்பினர் எல்லாருமே "உங்களுடைய ஈமெயில் முகவரியைத் தாருங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு" என்றுகேட்டார்கள். எங்களுக்குத்தொலைபேசிகளே போதியளவு வந்துசேரவில்லை. மின்சாரம் இன்னமும் கண்டிவீதியைக் கடக்கவில்லை. இந்நிலையில் இன்ரநெற் இணைப்பு எப்படிக் கிடைக்கும் என்றே அவர்களுக்குப் பதில் கூறவேண்டியதாயிற்று.

நாட்டின் பிறபகுதிகளில் வசிக்கும் சராசரிக் குடிமகன் ஒருவர் அனுபவிக்கும் மிக அடிப்படை வசதிகளான தொலைத்தொடர்பு மின்சாரம் போன்ற வசதிகள் கூட இன்றி தகவல் யுகத்தின் இருண்ட ஒரு தீவாக வன்னி தொடர்ந்துமிருந்து வருகிறது.

இந்த லட்சணத்தில் அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழையால் வன்னிக் கிராமங்கள் பல தீவுகளாகிவிட்டன.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்கள் பெருக்கெடுத்தோடிய வெள்ளத்தால் முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டன. சில நாட்களுக்காவது அவை வெள்ளத்தால் சுற்றிவளைக்கப்பட்ட தீவுகளாயிருந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சில பாலங்களைச் சனங்கள் புதுப் பாலம் என்று அழைப்பதுண்டு, உண்மையில் இந்தப் பாலங்கள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகி விட்டன. அவை இப்பொழுது பெரும்பாலும் பாதி சிதைந்தும்விட்டன. ஆனால் அவை கட்டப்பட்ட காலத்துக்குப் பின் புதிதாகப் பாலங்கள் எதுவும் கட்டப்பட்டிராத ஒரு நிலையில் சனங்கள் இப்பொழுதும் அவற்றைத்தான் புதுப்பாலங்கள் என்று அழைக்கிறார்கள்.

யுத்தநிறுத்தம் வந்து 21 மாதங்களாகிறது.

பாதைகள் திறக்கப்பட்டு பல மாதங்களாகிறது. ஆனால், சமாதானத்தின் அனாதைகளாகக் காணப்படும் இக்கிராமங்களுக்கு எதுவித மீட்சியும் இல்லை.

யுத்தகாலங்களில் எல்லாவற்றையும் யுத்தத்தின் பேரால் தாங்கியாயிற்று. யுத்தம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போலத் தோன்றிய அந்நாட்களில் ஏதோ ஒரு நம்பிக்கையோடு, என்னவென்றே சரியாகத்தெரியாத புதிரான ஓர்மத்தோடு எல்லாவற்றையும் சகித்தாயிற்று. ஆனால் இப்பொழுது சமாதான காலத்திலும் இவற்றையெல்லாம் எந்த அடிப்படையில் சகித்துக்கொள்வது? தாங்கிக் கொள்வது?

யுத்தகாலங்களில் பீரங்கித் தீனிகளாயிருந்த அதே சனங்களே இப்பொழுது யுத்த நிறுத்த காலத்திலும் சமாதானத்தின் அனாதைகளாகிவிட்டதற்கு யார் பதில் கூறுவது?

சமாதானம் டொல்பின்களைக் கொண்டுவந்தது. பிளாஸ்ரிக் கதிரைகளைக் கொண்டுவந்தது. ஏனைய சொகுசுப் பொருட்களைக் கொண்டு வந்தது. ஆனால் அத்தியாவசியப் பொருட்களைப் பொறுத்தவரை அவற்றின் விலையை கண்டி வீதியில் காவல்துறை இல்லாத நேரங்களில் ஓடும் டொல்பின்களின் வேகமளவுக்கு உயர்த்திவிட்டிருக்கிறது.

இதில் நடுத்தர வர்க்கம் ஓரளவுக்கு நிமிரமுடிகிறது. ஆனால் கீழ் நடுத்தர வர்க்கமும் வறிய விவசாயிகளும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சராசரிச் சனங்களின் வாழ்க்கை வசதிகளுடன் தம்மை ஒப்பிட்டு மணங்குமையும் ஒரு நிலைதான் காணப்படுகிறது. இது படையினரின்பிடியில் உள்ள நகரங்க்ளை நோக்கி நிகழும் இடப்பெயர்வுகளுக்குக் காரணமாய் அமைகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை வந்து சில மாதங்களின் பின் ஒரு தனிப்பட்ட சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் பிரமுகரான திரு.வே.பாலகுமாரன் சொன்னார், "சமாதானம் வந்து எமது இயல்பு வாழ்க்கையைக் குழப்பிவிட்டிருக்கிறது" என்று.

யுத்தகால வாழ்க்கை முறையிலிருந்த ஓர்மம், திடசித்தம் போன்றன சமாதானகாலத்திலும் நீடித்திருக்கும் என்றில்லை. ஆனால் சமாதானத்தின் அனாதைகளாகிவிடும் போது உண்டாகும் நிராசையும் விரக்தியும் இந்தச் சனங்களை எங்கே கொண்டுபோய்விடும்?

யுத்தம் அவர்களின் உயிர்களைக்கேட்டது. உறுப்புக்களைக் கேட்டது. சொத்துக்களைக்கேட்டது. சமாதானமும் அவர்களைத்தான் தியாகம் செய்யச்சொல்லிக்கேட்கிறது.

யுத்தத்தின் விலைகளை அவர்களே கொடுத்தார்கள். இப்பொழுது சமாதானத்தின் விலைகளையும் அவர்களே கொடுத்து வருகிறார்கள். ஒரு விடுதலைப்பிரதேசத்தில் வசிப்பதற்காக அவர்கள் இன்னுமின்னும் எத்தனை விலைகளைக் கொடுக்கவேண்டியிருக்கும்?

**கிளிநொச்சி நகரில் சந்தை நிலவரம்**

| பொருள் | சமாதானத்துக்கு முன்பு | சமாதானத்துக்குப் பின்பு |
|---|---|---|
| மீன் | 80ரூபாய் | 140ரூபாய் |
| றால் | 100ரூபாய் | 300ரூபாய் |
| கணவாய் | 70ரூபாய் | 120-140ரூபாய் |
| மாடு (தனி இறைச்சி) | 50ரூபாய் | 100ரூபாய் |
| ஆடு | 100ரூபாய் | 125ரூபாய் |
| மாம்பழம் (கறுத்தக் கொழும்பான்) | 3ரூபாய் | 30ரூபாய் |
| கப்பல் வாழைப்பழம் | 20ரூபாய் | 50ரூபாய் |
| கதலிப்பழம் | 10ரூபாய் | 30ரூபாய் |

## ஓகோ! அப்படியா!



செய்தியாளரிடம் திலக் கருணாரட்ன

**எம்மிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை இருந்திருந்தால் புலிகளின் தலைவரைச் சந்திப்பதற்குச் சென்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் சென்ற ஹெலியைச் சுட்டு வீழ்த்தியிருப்போம்.**

### ஓகோ! அப்படியா!



செய்தியாளரிடம். ஆனந்தசங்கரி.

**எனது அரசியல் நடவடிக்கைகளில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.**

### ஓகோ! அப்படியா!



தொலைக்காட்சிப் பேட்டியில். ஹேமகுமாரநாணயக்கார

**தற்கொலைக் குண்டைக் கட்டிக்கொண்டு செயற்படுவதைப் போன்றதே ஜே.வி.பி. உடனான சு.க.வின் கூட்டு முயற்சி.**

### ஓகோ! அப்படியா!



ஹக்கிமிடம் ஜஸ்வங்சிங்கா.

**முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதியை இந்தியா கூர்ந்து அவதானிக்கிறது.**

### ஓகோ! அப்படியா!



செய்தியாளரிடம். கருணாநிதி.

**டான்சி வழக்கில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்டிருந்தாலும் நான் மகிழ்ச்சி அடைந்திருக்கமாட்டேன். மாற்றாரின் துன்பத்தில் மகிழ்ச்சி கொள்ளக்கூடாது**

### ஓகோ! அப்படியா!



இ.தொ.கா. கூட்டத்தில். ஆறுமுகம் தொண்டமான்.

**அமரர் தொண்டமான் போல் அகிம்சை வழியில் நாமிருக்க முடியாது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தில் அறையத்தான் வேண்டும்.**

# நறுக்கென...

## ஜெயலலிதாயிஸம்; ஓர் உதாரணம்



இலங்கையின கடற்பிராந்தியப் பகுதிக்குள் அத்துமீறி அடாவ டித்தனமாக நுழைந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் அவ்வப்போது தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் அவர்களின் மீன்பிடி வள்ளங்கள், வலைகள் போன்றவற்றை அபகரிப்பதும், அழித்தொழிப்பதும் கடந்த சில தசாப்தங்களாகவே தொடர்ந்துவரும் விடயங்களாகும்.

முன்னர் ஆட்சியில் இருந்த தமிழக அரசுகள் இது தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு கண்டனம் தெரிவித்தும், மத்திய அரசுக்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் பல தடவைகள் அறிக்கை அனுப்பியும் பலன் எதுவும் ஏற்பட்டதில்லை. தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் எவ்வளவோ காலம் பாதிக்கப்பட்டேவந்தார்கள்.

இதேவேளை, தமிழக மீனவர்களும் ஈழத்தமிழ் மக்களின் கடற்பிராந்தியத்தினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதும், எமது மீனவர்களின் மீன்பிடி வலைகளைச்சிதைப்பதும் சில வேளைகளில் தனியாக மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்களைத் தாக்குவதும் அண்மைக்காலத்தில் பெருமளவில் அதிகரித்தேவந்துள்ளன. இதுதொடர்பாக தமிழ் மீனவர்கள் எத்தனை அறிக்கைகளை, கோரிக்கைகளை முன்வைத்தும் எவராவது கவனத்தில் எடுத்தார்களா?

ஜெயலலிதா கூட அவர்களின் அத்துமீறலைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ முன்வந்த தில்லையே... ஆனால், அத்துமீறிய தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதும் குய்யோ முறையோ என்று கூக்குரலிடுகின்றார். அது சரி தமிழக மீனவர்களைக் கைதுசெய்வது சிங்கள கடற்படையினர் தானே... பிறகேன் விடுதலைப்புலிகளை கண்டித்து எச்சரிக்கை செய்யுமாறு வாஜ்பாயிடம் ஜெயலலிதா கோரிக்கை விட்டிருக்கிறார்?

அதுக்கும் காரணம் இருக்கிறது.

சிறிலங்கா கடற்படையின் கட்டுப்பாடு சந்திரிகா கையில் உள்ளது. கடற்படையின் தளபதி சந்தகிரி சந்திரிகாவின் ஆசீர்வாதம் பெற்றவர். சந்திரிகாவோ ஜெயலலிதாவுடன் நல்ல உறவைப் பேணிவரும் ஒருவர். எனவே சந்திரிகாவையோ, சந்தகிரியையோ குற்றம்சாட்ட ஜெயலலிதா விரும்பவில்லை.


சரி, பிரதமர் மீது குற்றம் சுமத்தலாமல்லவா? - அதையும் செய்யமாட்டார். டான்ஸி நிலபேர ஊழல் வழங்கில் ஜெயலலிதா விடுதலைசெய்யப்பட்டதும் முந்திக்கொண்டு முந்திரிக்கொட்டை மாதிரி ஜெயலலிதாவுக்கு வாழ்த்துத்தெரிவித்தவர் ரணில் விக்கிரமசிங்கவே யாவார்.

எனவே, அவர் ஜெயலலிதாவின் நன்றிக்குரியவர்.

எனவேதான், விடுதலைப்புலிகளைக் கண்டிக்கச்சொல்லி வாஜ்பாயிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதான் 'ஜெயலலிதாயிஸம்' புரிகிறதா?

## முஸ்லிம்களுக்காக உருகும் இந்தியா



சிறிலங்காவின் விவகாரங்களுள் இந்தியா தலையீடு செய்வதென்பது ஒன்றும் புதினமான காரியமல்ல. அதற்கு தனக்கு அதிகாரபூர்வ உரிமை இருப்பதாக அது கருதுகின்றதும் அனைவரும் அறிந்தவிடயமே.

ஆனால் அந்த தலையீடு இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களை அடிப்படையாகக்கொண்டது என்பதுதான் ஆபத்தான விடயமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மையடையத்தொடங்கியது முதல், இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான இந்தியாவின் ஆதிக்கப்பார்வையும் கூர்மையும் தீவிரமும்கொள்ள ஆரம்பித்தது.

இதேவேளை இதே பிராந்தியம் மீதான அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளினது பார்வையும் குவிமையம்கொள்ளத்தொடங்கியதும் குறிப்பிடத்தக்கதாகும். எல்லோருக்கும் இப்பகுதி மீதான அவரவர் தேவைகளின் அவசியமே - இப்பகுதியில் கண்வைக்கக் காரணமாயிற்று.

இந்தத் தேவைகள் அரசியல் மற்றும் இராணுவ நலன்களை உள்ளடக்கியவை, இந்துசமுத்திரப் பிராந்தியத்திலுள்ள சின்னஞ்சிறு நாடுகளும், வளர்ச்சி குறைந்த மற்றும் வளர்முகநாடுகளும், இந்தப்பகுதியை இலக்குவைக்கும். வல்லாதிக்க - மேலாதிக்க சக்திகளின் பிடிக்குள் ஏதோவொருவகையில் சிக்கியிருப்பது தவிர்க்கவேமுடியாத அரசியல் யதார்த்தமாகும்.

சிறிலங்காவும் இதற்கு விதிவிலக்கல்ல.

1980களில் இலங்கைப்பிரச்சினைக்குள் இந்தியா முதலில் மறைமுகமாகவும் பிறகு வெளிப்படையாகவும் தன்னை நுழைத்துக்கொண்டபோது அது தமிழ் மக்களின் நலன் காக்கவும், அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொர்டுக்கவும்தான் வந்ததாக தமிழ் மக்கள் தப்புக் கணக்கைப்போட்டுக்கொண்டனர்.

இது இலங்கைப் பிரச்சினைக்குள் நுழையுமுன்னர் ஈழத்தமிழர்களின் நிலையை உன்னிப்பாகவும், அக்கறையோடும் கவனிப்பதாக கூறியபோது இந்தியாவின் உள்நோக்கத்தை தமிழர்கள் சரியாகப்புரிந்துகொள்ளவில்லை.

ஆனால் இந்தியப்படை இலங்கையுள் அதுவும் வடக்கு கிழக்குப் பகுதிகளுள் நுழைந்து தன்னை நிறுத்திக்கொண்டபோதுதான் பருந்தின் பிடிக்குள் இருந்து தப்பி கழுகின் வாய்க்குள் விழுந்த கோழிக்குஞ்சின் நிலையாக தமது நிலை மாறிவிட்டதை தமிழ்மக்கள் உணர்ந்து கொண்டனர்.


அது காலங்கடந்த ஞானோதயமாகும்.

இந்தப் பழையகதை யெல்லாம் எதற்கு என்று கேட்கிறீர்களா? எல்லாம் காரணமாகத்தான்.

அண்மைக்காலமாக இந்தியா, இலங்கை வாழ் முஸ்லீம்களின் நிலைக்காக வருந்துவதாகவும், முஸ்லிம்களுக்கு ஏற்படும் துயரத்தை உன்னிப்பாகக் கவனித்துவருவதாகவும் உருகிவருகிறது.

அதோடு அமைச்சர் ரவூப் ஹக்கீமும் இந்தியாவுக்கு போய் பேசியும் உள்ளார். பாவம் ஹக்கீம்; இந்தியாவில் முஸ்லிம்கள் இந்துத்துவ வாதிகளால் படும் அவலத்தை கண்டும் காணாது இருக்கும் அரசு இங்குள்ள முஸ்லிம்களின் நிலைக்காக வருந்துவதை நம்புவாரேயானால்.. அவரைப் பரிதாபத்திற்குரியவர் என்றுதான் கூறவேண்டும்...

## ஓநாய்களின் வருகை; பட்டிகள் கவனம்



ருஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் யாழ் குடாநாட்டுக்கு ரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்குள்ள பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார்கள். ஏற்கனவே இதற்கு முன்னர் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் பாகிஸ்தான், இந்தியா என பல நாட்டு பாதுகாப்புத்துறை மற்றும் படைத்துறை அதிகாரிகள் பலரும் யாழ் குடாநாட்டுக்கு விஜயம்செய்து யாழ் குடாநாட்டுப் பாதுகாப்புக்குறித்து ஆழமான அக்கறையுடன் ஆராய்ந்து சென்றுள்ளனர் என்பதும் தெரிந்ததே!

இவ்வளவு காலமும் இலங்கையில் சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்திய சனநாயகத்திற்கும், மனிதநேயத்திற்கும் எதிரான யுத்தத்தின் போதெல்லாம் இந்த நாடுகள் அனைத்தும் ஏதோ ஒருவகையில் சிறிலங்கா அரசுக்கு வெளிப்படையாகவே உதவி செய்து பேரினவாதிகளுக்கான தமது விசுவாசமான ஆதரவை வழங்கியிருந்தன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைக்கான போராட்டத்தை, அடக்குமுறைக்கும் இராணுவ ஒடுக்குமுறைக்குமெதிரான ஆயுத போராட்டத்தை, பயங்கரவாதப் போராட்டமாக சிறிலங்கா அரசு பொய்ப்பிரசாரம் செய்தபோது, அதற்கு ஆமாசாமி போட்ட இந்த நாடுகள், தங்களின் ஆலோசனை, வழிகாட்டல், ஆயுத வழங்கல், புலனாய்வு உதவிபோன்ற அனைத்துமே சிறிலங்காவுக்கு படுதோல்வியையே பெற்றுக்கொடுத்ததையடுத்து இப்போது சமாதானத்திற்கான அழுத்தங்களை சிறிலங்காவுக்கு வழங்கிவருகின்றன.

சமாதானம் சிறிலங்காவுக்கு அவசியம் என்பதை சிறிலங்கா உணர்ந்திருக்கோ இல்லையோ இந்த நாடுகள் நன்றாக உணர்ந்துகொண்டுள்ளமைக்கு அவைகள் சமாதானத்தை வலியுறுத்துவதே சான்று. இதற்கு அவைக்கு புறக்காரணிகளுண்டு. இதற்கு சிறிலங்கா எந்த அளவுக்கு செவிசாய்க்கப்போகிறது என்பது வேறுவிடயம்.


போர்நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் யாழ்குடாநாட்டுக்கு வருகைதரும் அயலக மற்றும் மேற்குலக பாதுகாப்பு மற்றும் படைத்துறை அதிகாரிகளின் தொகை அதிகரித்துவருவது மட்டும் உண்மை.

இவர்கள் வருகையின் நோக்கம், யாரழைத்து அல்லது எவரின் அங்கீகாரத்துடன் இவர்கள் இங்குவருகிறார்கள், குடாநாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து இவர்கள் அக்கறை கொண்டு ஆராய்வதற்கான காரணம் என்ன? சகல வல்லாதிக்க சக்திகளினதும் பார்வைகள் ஏக காலத்தில் குடாநாட்டின் மீது மையம் கொள்வதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது என்ற பல விடயங்களும் ஆராயவேண்டியவைகளே.

நிச்சயம் சிறிலங்காவின் பாதுகாப்பின் மீதோ, குடாநாட்டு மக்கள் மீதான அக்கறையினாலோ அவர்கள் இங்குவரவில்லை என்பது சர்வநிச்சயம். ஆடு நனைவதற்காக ஓநாய்கள் ஒருபோதுமே வருத்தப்படுவதில்லை. அப்படி வருத்தப்பட்டால் ஆட்டிற்கு ஆபத்து அதிகம் என்பது மட்டுமல்ல, ஓநாய்க்கும் பசி அதிகம் என்பதே உண்மையாகும்.

இனி அதிகம் கூறவில்லை, ஓநாய்களையும் ஆடுகளையும் நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும்....! உங்கள் பட்டிகளை கவனித்துக்கொள்ளுங்கள்.

## சிகல உறுமயவின் அழைப்பும் சம்பந்தனின் நிராகரிப்பும்



புலிகளின குரங்குபாஞ்சான் முகாம் மீதான படையெடுப்பு பிரகடனம், சமாதானத்தை எதிர்த்துப் பாதயாத்திரை எனப்பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து படுதோல்விகரமாக அவற்றை முடித்து வைத்த பெருமைக்குரியவர்களான சிகல உறுமயக்காரர்களின் அடுத்த நடவடிக்கையை அவர்கள் ஒரு அழைப்புடன் அறிவித்திருக்கின்றார்கள்.

அழைப்பு யாருக்கு? நடவடிக்கை என்ன? என்று யோசிக்கிறீர்களா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் இரா. சம்பந்தனை நேரடி விவாதத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்கள் அவ்வளவுதான்.

அடிக்கடி அறிக்கைவிடுவதிலும் வாய்ச்சவடால் விடுப்பதிலும் சிகல உறுமயக்காரரின் ஆளுமை மிகப்பெரியதாகும். அதிலும் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவரான திலக் கருணாரத்னா இருக்கிறாரே அவரின் இனவாத அதுவும் பேரினவாத கருத்துக்கள் எப்போதும் சீனவெடியாக வெடிக்கத்தொடங்கி புஷ்வாணமாகப்போவதே வழக்கம்.

ஆனாலும் ' விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று கூறிச் சமாளிக்கும் தாடிக்காரரான இவர்தான் சம்பந்தனுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாது சவால் விடுத்திருக்கிறார்.

விவாதத்திற்கான கருப்பொருள்.

1951இல் தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள் - 1976இன் வட்டுக்கோட்டை மாநாட்டு பிரகடனம், 1986இன் திம்புக்கோட்பாடு ஆகியன குறித்தவையாகும்

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரியபிரதேசம் என்று கூறப்படுவதன்மூலம் அப்பகுதிகளில் சிங்கள மக்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து தர்க்கம்செய்யவே சம்பந்தனுக்கு சவால் அழைப்பு விடுத்திருப்பதாகவும் கருணாரத்னா கூறியிருக்கிறார்.

கருணாரத்னா இந்த விவாதத்தின் மூலம் என்ன சொல்லப்போகிறார்.

வடக்கு - கிழக்கு சிங்களவர்களுக்கு உரிமையுண்டு என்பதுதானே... அப்படியானால் சிறிலங்கா முழுவதிலும் தமிழ்மக்களுக்கும் உரிமையுண்டு என்பதை கருணாரத்னா ஏற்றுக் கொள்வாரா? தர்க்கம் என்றால் தர்க்கரீதியிலான கேள்விக்கு முகம் கொடுக்கும் திராணி வேண்டும். சரி சிகல உறுமயவின் அழைப்பிற்கு சம்பந்தனின் பதில் என்ன தெரியுமா?

"சிகல உறுமயவை சிங்கள மக்களே ஏற்றுக்கொள்ளவில்லை இந்தநிலையில் விவாதம் நடத்த கூட்டணியை அழைக்கும் தகுதி அதற்குக்கிடையாது.."

தான் சார்ந்த மக்களாலேயே அங்கீகரிக்கப்படாத, பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினரை சலுகை அடிப்படையில் மட்டும் பெற்று அந்த ஒரு கதிரைக்கும் ஒன்பதுபேர் உரிமைப் போர் நடத்தும் ஒரு கட்சி, கூட்டணியை விவாதத்திற்கு அழைப்பதைவிட, மீண்டும் கண்டிக்கோ, கதிர்காமத்திற்கோ, பாதயாத்திரை மேற்கொண்டு புண்ணியம் தேடுவது நல்லது.

சம்பந்தன்தான், சிகல உறுமயகாரரை தகுதியில்லாதவர்கள் என்று கூறி நிராகரித்து விட்டாரே...! இனி இதற்கு திலக்கருணாரத்னா என்ன சொல்லப் போகிறார்...

பொறுத்திருந்து பார்ப்போம்.

**செங்குட்டுவன்**

# தீர்வு வெகுதூரமா?

சி. இந்திரகுமார்

வரலாற்றின் நீண்ட தொடராகவே தமிழ் மக்கள் தென்னிலங்கையில் காலாதிகாலமாக அரங்கேறும் அரசியல் கெடுபிடிகளையும் அரசியல் இழுபறிகளையும் பார்த்து வருகின்றனர்.

இதுவொன்றும் தற்செயலாக அரங்கேறும் ஒரு அசம்பாவிதமாகவோ தவிர்க்க முடியாதவாறு நடந்து விட்ட ஒரு துர்ப்பாக்கியமோ அல்ல. தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைக்கு தீர்வுகளாக முனைப்புப்பெறும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இத்தகைய விபரீதங்கள் நடப்பது வழமை.



இலங்கையில் இப்போது தலைவிதிகளை தீர்மானிப்பதற்கான போராட்டம் தீவிரம் பெற்றுள்ளது.

இந்த தலைவிதிப்போராட்டம் முதலில் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில்தான் முனைப்புப்பெற்றிருந்தது.

ஆனால் இப்போது தலைவிதிகளின் போராட்டம் சிங்களவர்களின் தலைமையை தீர்மானிக்கும் போராட்டமாக மாறிவிட்டது.

இந்த தலைவிதிப்போராட்டம் என்பது சனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்கால தலைவிதியையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சியின் எதிர்கால தலைவிதியையும் தீர்மானிக்கும் போராட்டமாக மாறிவிட்டது.

இந்தப் போராட்டத்தின் வெற்றி தோல்விகளே இவ்விரு கட்சிகளின் அரசியல் ஆயுட்காலத்தின் நீட்சியைத் தீர்மானிக்கப் போகிறது. அதோடு இலங்கையின் தலைமையை தீர்மானிக்கும் நிலையையும் உருவாக்கப்போகிறது.

பொதுவாகவே ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்த சனாதிபதி சந்திரிகா தோண்டிய குழியில் அவரே சறுக்கியதையடுத்து, அரசியல் அவதானிகளின் கூற்று பிரதமர் ரணிலின் அரசியல் ஆயுளை அதிகரிக்க சனாதிபதி சந்திரிகா வழிவகை செய்துவிட்டார் என ஆரூடங்கள் வெளிவந்தன.

அமைதி வழி போராட்டங்களும் தோல்வியுற்றதன் பின்னர் தான், தமிழ் மக்கள் தங்கள் உயிர்களால் தங்களுக்கான தாயகத்தின் வரை படத்தை செதுக்கத்தொடங்கினார்கள்.

இதற்குக் காரணம் சனாதிபதி சந்திரிகா 1994களில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதையடுத்து மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதியையும், மக்கள் அவருக்கு அளித்த ஆணையையும் முற்றுப் பெறச்செய்வதில் அவர் சந்தித்த தோல்விகளையடுத்து சனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராக தோன்றிய புறச்சூழல், பிரதமர் ரணிலை வலுப்படுத்தத்தொடங்கியிருந்தது.



அத்தோடு ரணிலுக்கு புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களும், சந்திரிகாவை விட ரணிலுக்கிருந்த சர்வதேச ஆதரவு கதவுகளை சற்று அதிகமாகவே திறந்து விட்டதும் அதிக அனுகூலங்களை அவர்களுக்கு ஏற்படுத்தச்செய்தன.

இந்த நிலையில் நாடாளுமன்றம் ரணிலின் வசமும் நிறைவேற்று அதிகாரம் சந்திரிகாவின் வசமும் இருந்த நிலையிலும் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முன்னகர்ந்தே சென்றது. இந்த நிலையில் சமாதானத்தின் தலைவிதி என்பது அப்போது ஒரு கேள்விக்குறியோடுடனே நகர்ந்து சென்றது.

இலங்கையில் உண்மையான சமாதானம் என்பது வெகு தூரமாகவே இருக்கிறது.

இதனால் யுத்தமற்ற ஒரு இலங்கைத்தீவை எந்தவொரு இலங்கைப் பிரஜையும் கற்பனைகூட செய்து பார்க்கமுடியாது போய்விடுமா?

ஆனால் சமாதானத்தின் வெற்றி என்பது ரணிலின் தலைவிதியை அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவிதியை தீர்மானித்துவிடும் என்றான நிலையில் காத்திருந்த சந்திரிகா, புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபையடுத்து, பிரதமர் ரணிலின் அரசு மீது எகிரிப்பாய்ந்து, வடக்கிற்கும் தெற்கிக்குமிடையில் நடந்த அதாவது தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் தலைவிதிகளைத் தீர்மானிக்கப்போகும் அரசியல் போராட்டத்தின் போக்கினை மாற்றி சமாதானத்தின் தலைவிதியை அதோகதியாக்கிவிட்டார்.

இப்போது சமாதானத்தின் தலைவிதி கிடப்பில் இருக்க, கட்சிகளின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தி வலுப் பெற்றுள்ளது.

அதாவது சமாதானத்தின் தலைவிதி கிடப்பில் கிடப்பது என்பது இலங்கையில் முரண்பாடு தணிந்து போய்விட்டது என்பதல்ல அர்த்தம்.

ஏனென்றால் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான தலைவிதியைத் தீர்மானிக்கும் போராட்டத்தை வேண்டுமென்றால் சிங்களவர் கிடப்பில் போடுவதற்கு விரும்பலாம்.

ஆனால் தமிழ் மக்களும் தமிழ் மக்களின் தலைமையும் கிடப்பில் போடுவதற்கு தயாரில்லை என்பதே கள யதார்த்தம்.

குறுகிய அரசியல் இலாப நலன் கருதி செயற்படும் இரண்டு கட்சிகள் தங்களுக்கிடையிலான அரசியல் அதிகாரங்களை கைப்பற்ற முனைவதற்காக, காலம் கடத்தி விடுவதற்கு ஈடுபடுவதற்காக, தங்கள் உயிர்களால் தமது தலைவிதியை தீர்மானிப்பதில் ஈடுபட்ட ஒரு இனம் எந்த வகையில் காத்திருக்கமுடியும்.

இதனை எந்தவகையில் சர்வதேச சமூகமும் நியாயபூர்வமாக கருதமுடியும், என்பதை சர்வதேச சமூகம் சிந்திக்க தலைப்பட வேண்டும்.

வரலாற்றின் நீண்ட தொடராகவே தமிழ் மக்கள் தென்னிலங்கையில் காலாதி காலமாக அரங்கேறும் அரசியல் கெடுபிடிகளையும், அரசியல் இழுபறிகளையும் பார்த்துவருகின்றனர்.

இதுவொன்றும் தற்செயலாக அரங்கேறும் ஒரு அசம்பாவிதமாகவோ, தவிர்க்க முடியாதவாறு நடந்துவிட்ட ஒரு துர்ப்பாக்கியமோ அல்ல. தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைக்கு தீர்வுகளாக முனைப்புப்பெறும் ஒவ்வொரு கால கட்டத்திலும் இத்தகைய விபரிதங்கள் நடப்பது வழமை.

இதனை நன்கு புரிந்துகொண்டதன் பின்னர்தான் அனைத்து அமைதி வழி போராட்டங்களும் தோல்வியுற்றதன் பின்னர் தான், தமிழ் மக்கள் தங்கள் உயிர்களால் தங்களுக்கான தாயகத்தின் வரைபடத்தை செதுக்கத்தொடங்கினார்கள்.

இந்த நிலையில் தெற்கில் நடந்துகொண்டிருக்கும் தலைவிதிக்கான சமர் எப்போது ஓயும். இதன் வெற்றியை எவர் கைப்படுத்துவார் என்பதற்கெல்லாம் பொறுத்திருக்க வேண்டும் போலுள்ளது.

ஆனால், இதற்கிடையில் வட- கிழக்குப் பிரதேசத்தில் இதுவரை நடந்த தாயக மீட்பிற்கான யுத்தம் அமைதியடைந்திருக்கும் நிலையில், சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட மலிக் - தித்தவெல குழுவினர் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுவது சாத்தியமில்லை என கருதுவதாக தெரியவருகிறது.

இந்த நிலையில் இந்த இரண்டு தலைவர்களும் காலக்கெடுவிதித்திருக்கும் டிசம்பர் -15 இன் பின்னும் ஒரு இலக்கை எட்டாது தீர்வு எதனையும் காணமுடியாவிட்டால் மீண்டும் இலங்கையில் ஒரு யுத்தம் அரங்கேறப்போவதை எவரும் தடுப்பதற்கில்லை.

அதாவ்து இந்தப்போர் தேர்தல் என்ற பெயரில் கட்சிகளின் அரசியல் குண்டர்களால் பல உயிர்கள் அழிக்கப்படப்போகின்றன.

இந்த யுத்தத்தில் அதிகம் சிங்களவர்களே சிக்குண்டு சீரழியப்போகிறார்கள். இந்த யுத்தத்திற்காக மீண்டும் இலங்கை பெரும் தொகையான பணத்தை இழக்கவேண்டி ஏற்படும்.

இந்த தேர்தலிற்கான பணத்தை சமாதான காலத்தில் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் சிந்திய இரத்தத்தை விற்று சேர்த்த நிதியிலிருந்தும் செலவழிக்கப் படப்போகிறது.

ஆகையால் இவ்விரு தலைவர்களிற்கும் இடையில் தீர்வு எப்போது என்பதற்கு விடை கிடைக்காவிட்டாலும் தமிழ் மக்கள் தங்களிற்கான தீர்வு எதுவென்பதை எப்போதோ சரியாகவே இனங்கண்டு வைத்துள்ளார்கள் என்பதை உலகிற்கு உணர்த்தி விடுவார்கள் என்பது மட்டும் திண்ணம். இந்த நிலையில் இலங்கையில் உண்மையான சமாதானம் என்பது வெகுதூரமாகவே இருக்கிறது.

இதனால் யுத்தமற்ற ஒரு இலங்கைத் தீவை எந்தவொரு இலங்கைப் பிரஜையும் கற்பனைகூட செய்துபார்க்கமுடியாது போய்விடுமா?

ஏனென்றால், துப்பாக்கிகளால் பேசித் தீர்வைக்காண பகிரங்கமாகவே தங்களை வெளிப்படுத்தி போராடியவர்களின் பின்னிருந்த நியாயத்தை புரிந்துகொள்ள முடியாதவர்களால்

சனநாயக அரசியல் என்றும் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்தவர்கள் என்றும் வெறும் வார்த்தையாலங்களால் தங்களை வெளிப்படுத்தியவர்களின் தேர்தல் குண்டர்களால் பிரகடனப்படுத்தும் கொடிய யுத்தத்தின் கொடுமையை புரிந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கமுடியாது.

இந்த நிலையில் இந்த யுத்தமற்ற இலங்கைத்தீவில் இன்னும் யுத்தம் தற்காலிக அமைதி நிலையில் மட்டுமே இருக்கிறது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் தீர்வு எப்போது சாத்தியம் என்பது புரியவில்லை. இது எங்களூர் முதியவர்கள் கூறுவதுபோல ஆண்டவனுக்கே வெளிச்சம். ●

## மதவடி மயிலர்



**செய்தி :** *தென்னிலங்கை கட்சிகள் மோதிக்கொள்வதால் புலிகளின் கனவு விரைவில் பலித்துவிடும் என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்.*

**மயிலர் :** தென்னிலங்கை கட்சிகள் எப்பதான் ஒற்றுமையாக இருந்ததாம்? இது தெரியாத ஒரு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரின் சிந்தனை இப்படித்தான் பேரினவாதப் புலம்பலைப் புலம்பும் பாருங்கோ..... புலிகள் ஒரு நாளும் கனவு கண்டுகொண்டு சோம்பிக்கிடக்கிறேல்லை விரிவுரையாளரே.... உங்கட ஆட்கள் அரசியல் வாதிகள். எங்கடை ஆட்கள் இலட்சியவாதிகள்..... என்ன விளங்குதோ......?

**செய்தி :** *இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு 30 ஆயிரம பௌத்தபிக்குகள் எதிர்ப்பு........ என தேசிய பிக்குமார் சங்கம் அறிவிப்பு.*

**மயிலர் :** ஆக சமாதான முயற்சிக்கு 30 ஆயிரம் பிக்குமார் எதிர்ப்பு என்று கணக்கெடுக்கலாம்தானே..... அது சரி எத்தனை ஆயிரம் பிக்குகள் இதற்கு ஆதரவு என்றும் கணக்கெடுத்திருக்கலாம்தானே.... அது சரி சிறிலங்காவின் பாதுகாப்புப்படைகளின் தொகைக்கு சமனாக பிக்குமார் படையும் இருக்கும் போலிருக்கே.....! பிக்குகள் முன்னணி படைகள் பின்னணி என்று கூறலாம்தானே..... பாவம் சமாதானம். பாவம் சிறிலங்கா......!

**செய்தி :** *கதிர்காமருக்கு தொலைபேசி மூலம் ஆதரவுகோரினார் சந்திரிகா....*

**மயிலர் :** சனாதிபதி. ஆலோசகருக்கு செய்யும் நன்றிக்கடன் இதுதான் பாருங்கோ....ஆனால் தொலைபேசி வாக்குச் சேகரிப்பில் ஆக பதினொரு வாக்குத்தானே கிடைத்திருக்கு....! இது கதிர்காமரின் செல்வாக்கின் பரிதாப நிலையை காட்டுகிறதா....? சந்திரிகாவின் மதிப்பின் தரத்தைக் காட்டுகிறதா.....? எப்படியோ கொமன் வெல்த் அமைப்பு தப்பிக்கொண்டது.....!

**செய்தி :** *ஆனந்த் சங்கரியின் கையாட்களான காடையர்கள் மதுபோதையில் என்னைத் தாக்க வந்தனர் என்கிறார் வவுனியா தமிழர் கூட்டணித் தலைவர்.*

**மயிலர் :** பாவம் சங்கரியார். காடையர்களை அடியாட்களாக வைத்திருக்கும் அளவுக்கு பாதாள உலகத் தலைவர் போலாகிவிட்டாரா? பதவியாசை ஆளைப் பாதாளம் வரை கொண்டு போட்டுது பாருங்கோ.... அட ஆனந்தக் கோனாரே..... அறிவு கெட்டுத்தான் போனாரே.......

**செய்தி :** *சிறிலங்காப் படைக்கட்டமைப்பில் மேலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.*

**மயிலர் :** நாட்டின் அரசியற் கட்டமைப்பில் மாற்றம் கொண்டுவரத் தயங்குவோர்...... படைக்கட்டமைப்பை மட்டும் கட்டுக்கோப்பாக வைத்திருக்கப்படாத பாடுபடுகினம் பாருங்கோ.... படையிழந்தான். பதவியிழந்தான் என்ற பழமொழியை அதிகார வட்டங்கள் அதிகம் நம்பினம் போலைக்கிடக்கு....... கடைசியிலை படை நடத்தி நாட்டைப் பாடையிலைதான் ஏத்தப்போகினம்......

**செய்தி :** *கிழக்கின் பாதுகாப்புக் குறித்து முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என்கிறார் பேரியல் அஷ்ரப்.*

**மயிலர் :** பேரியல் அம்மா சனாதிபதி அம்மாவின் பின்னாலை தானே பாதுகாப்பா நிற்கிறா.....!பாதுகாப்புத் துறையை அம்மணிதானே பறிச்செடுத்து பக்குவமா வைச்சிருக்கிறா.....! பிறகெப்படி பேரியல் அம்மா இப்பிடிச் சொல்லமுடியும்? அப்பிடியென்றால் முஸ்லிம்கள் அம்மணியிலை நம்பிக்கை இழந்திட்டினம் என்றா அவ சொல்லுறா......? பேரியலும் கட்சிமாற தயாராகிறாரா?

இன்பத்தின் ஊற்றுவாய் மனிதனகத்தே உள்ளது. - ஸாதுஸ்திரர்

நேர்நோக்கு

# புரிந்துகொண்டாலே போதும்

வடபகுதிக் கடலில் ஊடுருவி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களால் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவது தொடர்கிறது. இப்பகுதியில் ஊடுருவும் இந்திய மீனவர்கள் மீன் வளத்தைச் சுரண்டிச் செல்வது மட்டுமல்லாமல், தமிழீழ மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்திச் செல்வது மிகவும் வேதனை தருவதாகும்.

இப்பிரச்சினை சில மாதங்களுக்கு முன்னரும் தீவிரம் பெற்றபோது, இம்மீனவர்கள் தம்மாலேயே விரும்பத்தகாத சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டி நேர்ந்தது. அதாவது, இவ்வாறு ஊடுருவும் மீனவர்களைப் பிடிக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டனர். இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மேலும் ஒரு செயலையும் மனவிருப்பமின்றியே செய்ய வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு பிடிக்கப்படுவோர் தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்களாயிருப்பது பலவகைகளிலே வடபகுதி மீனவர்களுக்குக்கவலை தருவதாகும்.

ஒன்று இம்மீனவர்கள் வேறொரு நாட்டவராக இருந்தபோதும் தமிழர்கள் என்ற ரீதியில் மட்டுமல்லாது துன்பப்பட்டு ஓடிச் சென்றவேளையிலே அரவணைத்த உறவுகள் என்ற ரீதியிலும் அவர்கள் நம்மவர்கள் ஆகும் ஏனெனில், அதிகாரவர்க்கம் என்ற ரீதியில் சிறிலங்கா அரசாங்கமும், இந்திய ஆட்சியாளர்களும் சில வேளைகளில் தமிழக ஆட்சியாளர்களும் கூட கைகோர்த்துக்கொண்டு இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பலவகைகளில் கேடுகளை விளைவித்தபோதும் தமிழர்கள் என்ற ரீதியில் தமிழக மீனவர்களும், இலங்கைத் தமிழர்களும் முரண்பட்டுக்கொண்டதில்லை. அது மட்டுமல்லாது தமிழக மீனவர்கள் பெரும் உதவிகளைப் புரிந்தவர்களுமாவர்.

இந்த நிலை யுத்த வேளையில் இருந்தபோதிலும், சமாதானச் சூழலில் இவ் உறவுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் தமிழீழ மீனவர்கள் மத்தியில் இருந்து வருகின்றது. இதன் காரணமாக இவ்விவகாரம் அவர்களுக்குச் சங்கடமளிக்கும் ஒன்றாகும்.

ஆனால், தவிர்க்கமுடியாது என்பது.

இரண்டாவது, இவர்களைப் பிடித்து தம்மை ஒடுக்குமுறைக்குள்ளாக்கி வரும் சிறிலங்கா படையினரிடம் ஒப்படைக்கவேண்டிய நிலை இருப்பது.

மற்றையது அண்மையிலே பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் தகவலின்படி இவ்வாறு பிடிக்கப்படுவோர் தம்மைப் போன்றே ஆபத்தான கடற்றொழில் செய்யும் ஏழைத்தொழிலாளர்களாக இருப்பது.

இதேவேளை, இவ்வாறு இவர்களைப் பிடிக்க நேரிடும்போது ஏற்படும் உள, உடல் பாதிப்புக்கள், உடல் பாதிப்புக்கள் பெரிதாக இல்லாவிடினும், உள ரீதியாக இவ்விரு பகுதி கடற்றொழிலாளர்களிடையே ஏற்படும் தாக்கமானது புறக்கணிக்கப்படத்தக்கதொன்றல்ல.

அல்லது தாங்கிக்கொள்ளமுடியாத நிலையிலேயே தமிழக மீனவர்களைப் பிடிக்கும் நிலைக்கு வடபகுதி மீனவர்கள் தள்ளப்படுகின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக ஈழத்தமிழ் மக்கள் மீது புரியப்படுகின்ற யுத்தமானது கடற்றொழிலாளர்களைப் பாதித்ததுபோல வேறெவரையுமே பாதிக்கவில்லை என அடித்துக்கூறலாம். இலங்கையின் மீன்பிடியின் 66 வீதத்தைத் தமதாக்கிக்கொண்டிருந்த இவர்கள் கடந்த 20 வருடங்களாக பெரும் துன்பங்களை அனுபவித்து அன்றாடச் சீவியத்திற்கே வழியற்றவர்களாக மாறிவிட்டனர். பொருளாதாரத் தடை என்ற ரீதியிலே கடற்றொழிலுக்கே சிங்கள அரசாங்கத்தால் முதன் முதல் தடை விதிக்கப்பட்டது. தொழில் செய்வதற்குக் கடல் வலயத் தடைச்சட்ட மூலம் கட்டுப்பாடு முதல் தொழிலுபகரணங்களுக்குத் தடைவரை விதிக்கப்பட்டன.



அது மட்டுமல்லாது சிறிலங்காக் கடற்படையினதும் விமானப்படையினதும் முக்கிய குறியாக இம்மக்களே இருந்து வந்திருக்கின்றனர். இதனால் இவர்கள் சந்தித்த சொத்தழிவுகள் கொஞ்சமல்ல.

இன்றும் கூட இம்மக்களின் சுயாதீனமான தொழிலுக்கு சிறிலங்காப் படையினர் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றனர். கடலில் இறங்குவதற்கே நேரக் கட்டுப்பாடு. சிறிய வள்ளங்களுக்கு மட்டுமே அனுமதி. கண்ணுக்கெட்டிய தூரம் வரையே செல்ல அனுமதியென வடபகுதியில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒவ்வொரு சிறு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு அனுமதி நடைமுறை. தேவையற்ற விசாரணைகளால் ஏற்படும் உளவியல் பாதிப்புக்கள், இறங்குதுறையை ஆழப்படுத்தித் திருத்தியமைக்கக்கூட படையினரின் தடையால் வழியற்ற நிலை.

இத்துடன் முடிவடைந்துவிடவில்லை. இவர்களின் துயரம். கடன் அடிப்படையிலும், உதவியாகவும் கிடைக்கும் மீன்பிடி உபகரணங்களைப் படையினரின் தாக்குதல்களால் பறிகொடுக்கும் நிலை இன்னமும் தொடர்கிறது.

இவ்வளவையும் தாண்டி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கும் வகையில் தமிழக மீனவர்கள் நடந்துகொள்வது எவ்வகையிலே நியாயம்? இதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறலாம். தமது கடற்பரப்பில் மீன்பிடி வளம் குறைந்துவிட்டதாகவும், அதனாலேயே தாம் இப்பகுதிக்கு மீன் பிடிக்க வருவதாகவும் கூடக் கூறப்படுகின்றது. ஆனால், தமிழீழ மீனவர்களின் நிலையிலிருந்துகொண்டு சிந்தித்தால் தாம் செய்வது எத்தனை தூரம் பாதகமான செயல் எனப்புரிந்துகொள்ள முடியும். சிறிலங்காப் படையினரின் கொடூரத்தினால் ஈழத்தமிழ் மக்கள் அனுபவித்த துன்பத்தைப் புரிந்துகொண்டு அவர்களை அரவணைத்துள்ள தமிழக மக்களால் இவ்விடயத்தைப் புரிந்துகொள்வது சிரமமான காரியமாக இராது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் தாம் இழந்துபோனவற்றில் சிறு பகுதியையாவது மீட்டுக்கொள்ள முயலும் ஈழத்தமிழ் மக்களின் நிலையை தமிழக மீனவர்கள் எண்ணிப் பார்த்தால் இப்பிரச்சினை உடனடியாகவே தீர்ந்துவிடும்.

**வேலவன்**

# படையினரின் விசமத்தனம்

உலகில நாடுகளை கண்ணிவெடியற்ற நாடுகளாக உருவாக்குவதற்குஅதாவது கண்ணிவெடி பீதியற்ற நாடுகளாக உருவாக்க வேண்டுமென்பது சர்வதேச சமூகத்தின் பெரு அவா.

அந்த வகையில் தான் கண்ணிவெடிகள் பெருமளவில் புதைக்கப்பட்டுள்ள நாடுகளில் விசேட செயற்திட்டங்கள் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் பல சர்வதேச நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக இலங்கையில் அரசிற்கும் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முகமாக மேற்கொளளப்பட்ட யுத்தநிறுத்தத்தையடுத்து கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பாக பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கபட்டது.

கண்ணிவெடியகற்றல் தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன் தற்போது வட-கிழக்குப் பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

இதற்கென பல உலக நாடுகளும் பெரும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மணற்காட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் புதிதாக கண்ணிவெடிகளைப் புதைத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



கண்ணிவெடி அகற்றும் இயந்திரம்

மணற்காட்டுப் பகுதியில் சவுக்கு மரங்கள் அதிகமிருக்கும் பகுதிகளுக்கு அண்மையில் படையினர் கண்ணிவெடிகளைப் புதிதாகப் புதைத்து வருவதாகவும், இப்பகுதியில் கடந்த ஒக்டோபர், மாதம் 19ஆம் திகதியிலிருந்து புதிதாக இராணுவ முகாம் ஒன்றை அமைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடிகளை அகற்றி போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தவென பாடுபடும் இந்த காலப் பகுதியில் சிறிலங்கா படையினர் கண்ணிவெடிகளைப் புதைப்பது ஒரு விசமத்தனமான செயற்பாடகவே நோக்க வேண்டும்.

இந்தச் செயற்பாடு இன்றும் யாழ்ப்பாணத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் நீங்கவில்லை என்பதையும், யாழ்ப்பாண மக்கள் மீது ஒரு பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் ஒன்றை அதாவது, நிழல் யுத்தம் ஒன்றை படையினர் மேற்கொள்ள முனைவதையே காட்டுகின்றது.

இந்த நிலையில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2006ஆம் ஆண்டுக்குள் இலங்கையை கண்ணிவெடியற்ற ஒரு நாடாக உருவாக்கப்போவதாக கடந்த 4ஆம் திகதியிலிருந்து அதற்கான பிரச்சார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

இத்தகை நடவடிக்கை சிறிலங்காப் படைத்தரப்பைப் பார்த்து ஊருக்கு உபதேசம் உனக்கு இல்லை... என்று கூறுவது போல இருக்கிறது.

அத்துடன் யுத்தத்தை மட்டுமன்றி, யுத்த எச்சங்களைக் கூட இலங்கையிலிருந்து அகற்றிவிட துடிக்கும் ஒரு கனவான் அரசியல்வாதி போல ரணில் காட்டிக்கொள்ள முயல்வதையே காட்டுகிறது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலமே இலங்கையின் பொருளாதார வங்கிகளை சீர் செய்து கொள்ளும் தந்திரோபாயமாகவும் அவர் பயன்படுத்திக் கொள்கின்றார்.

ஆனால், தமிழ் மக்கள் மீது மேலும், மேலும் யுத்த பேரிரைகளை சத்தமின்றி ஊதும செயற்பாடுகள் மட்டும் எந்த விதத்திலும் வேகம் தணியாது நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு எப்போது உண்மையான இயல்வு வாழ்வு தோன்றுவது.

அந்த மக்கள் எப்போது பயமின்றி மீள்வது? இந்த நிலையில் தான் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த வகையில் படையினர் புதிதாக கண்ணிவெடிகளைப் புதைப்பதும், புதிய இராணுவ முகாமை அமைப்பதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான செயற்பாடுகள்.

ஆனால், இவையாவற்றையும் அசட்டை செய்துவிட்டு படையினர் தமது காரியங்களில் கண்ணாகவே இருப்பது போலத் தெரிகிறது.

இதற்கு பரிகாரம் தமிழ் மக்களுக்கு எப்போது கிட்டும்.


ஒருபுறம் யுத்தமற்ற இந்த காலத்தைப் பயன்படுத்தி கண்ணிவெடிகளையும், வெடிப்பொருட்களையும் அகற்றிக் கொண்டுவர இன்னுமொரு புறத்தில் படையினர் கண்ணிவெடிகளைப் புதைப்பது ஏறத்தாள தமிழ் மக்களின் வாழ்விடங்களிலிருந்து வெடிப்பொருட்களின் அச்சத்தை நீக்கப்போவதில்லை.

அத்துடன் படையினரின் இத்தகைய செயற்பாடு மக்கள் பயமின்றி மீள் குடியேறுவதை தடுப்பதை நோக்காகக் கொண்டதே.

இந்த நிலையில், படையினரின் உயர் பாதுகாப்பு வலய கெடுபிடிகளுக்குள் ஒரு பெரும் பிரதேசமும், படையினரின் காவலரண்கள், சிறு முகாம்கள் இன்னுமொரு புறமும், கண்ணிவெடி பயம் நீங்காத பிரதேசமாக ஏனைய பகுதிகளும் என மக்களின் வாழ் நிலங்களின் பெரும் பகுதி அபகரிக்கப்படுவது எந்த வகையான நியாயத்துள் அடங்கும் என்பது தெரியவில்லை.

இந்த நிலையில், மனித உயிர்கள் பற்றியும், மனித உரிமைகள் பற்றியும் பேசும் உலக நாடுகளின் பிரதிநிதிகளாகச் செயற்படும் நிறுவனங்கள் மனித உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய செயல்களில் ஈடுபடுவதை மட்டும் ஏன் கண்டிக்கத் தவறுகின்றன என்பது இன்னும் தெளிவுறவில்லை என்பதுதான் வேதனை.

**நக்கீரர்**



# தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இஸ்லாமின் பங்களிப்பு

இஸ்லாம் எங்கள் உயிர், இன்பத்தமிழ் எங்கள் மூச்சு- இக்கருத்தை தனது வாழ் நாளில் பேரறிஞர் கலாநிதி ஏ.எம்.ஏ அசீஸ் கூறிவந்தார். ஆங்கிலம், தமிழ், பாண் டித்தியம் உடைய அசீஸ் அவர்கள் எழுதிய 'தமிழ் யாத்திரை ''மிஸ்ரின் வசியம்' போன்ற நூல்கள் தமிழை அணிசெய் கின்றன. உலகின் எல்லா இலக்கியங் களும் ஒரு குறிப்பிட்ட நோக்கத் திற்காகவே படைக்கப்படுகின்றன. ஒரு எழுத்தாளன தனது செய்தியை இலக்கியமாக வடிக் கிறான். அவனுடைய சொல்லும் திறமையால் அவனுடைய படைப்பு ஆளுமை பெறுகின்றது. கருத் துருவமற்ற இலக்கியங்கள் பெறுமதியற்றவையாகக்காணபபடு கின்றன. இஸ்லாமை வளர்ப்பதற் காக இஸ்லாமியர்கள் தமி ழைக்கருவியாக்கினார்கள். இத னால் தமிழ் சிறப்பெய்தியது.

நபிகள் நாயகத்தின் (சல்) சரித்திரத்தைக் கூறும் உமறுப்புலவர் சீறாப்புராணம் பாட்டுடைத்தலைவன் வேற்று நாட்டவனாக இருப்பினும் சீறாப் புராணத்தில்வரும் நாட்டு வருணனைகள்யாவும் தமிழ் நாடு சார்ந்ததாகவே இருக்கின்றன. இதனால் இந்த இலக்கியப் பனுவல் உண்மைநிலை தவறாது ஒலிக்கின்றது. தலையாய இஸ்லாமியப் புலவர்கள் இஸ்லாமை வளர்க்கும்நோக்கில் தமிழ் வளர்ச்சிக்கு உதவினார் கள். அண்மைக்கால இஸ்லாமியப் புலவர்களுள் புரட்சிக்களால் முன்னணி இடம்வகிக்கிறார். தமிழின் சிறப்பியல்புகளை நன்குணர்ந்து அவர் பாடுகிறார்.

சீறாப்புராணத்தில்வரும் சீரிய சொற்றொடர்கள் நவில் தோறும் நயம் தருவனவாக அமை கின்றன. பேரருள்மிக்க இறை வனை நோக்கி இறையருள்பெற்ற இப்புலவர் "செய்ய கருணைச் செழுஞ்சோதீ" என்கிறார். மூர்க்கர் களைப் பார்த்து "வலியோரின் ஆணவத்தில்'' என்னும் தமிழை "முல்லையின பண்ணே, முத் தமிழ்வைப்பே'' என்றும் வர்ணிக் கிறார். இதைப் பாடியவர் யாரென்று அறியாதோரும் பயன்படுத்தும் தீந்தமிழ்ச் சொற்களாக இன்று இவை அமைகின்றன. நாம் அறி யாமல் நம்மை உருவாக்குபவை இலக்கியங்களே. புராண இதிகா சங்கள், எம்மொழி பிறமொழி இலக் கியங்கள், மத நூல்கள் என்பன இதிலடங்கும்.

முகம்மது நபிகள் நாய கம்(சல்) கி.பி.570ல் மெக்கா நகரில் பிறந்து கி.பி. 632ல் மெதினாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார். அல்லாவின் அருள்வாக்கை அல்குரானாக இவர் பதிவுசெய்தார். இஸ்லாம என்ற மதத்தை இவர் உருவாக்கினார். மத்திய கிழக்கின் மூன்று மதங்களில் யூதமதம், கிறிஸ் தவம், இஸ்லாம் - இதுவே மிகப் பிந்தியது. எட்டாம் நூற்றாண்டள வில் இஸ்லாம் உலகின் பெரும் பகுதி மக்களின் மதமாக மாறி யது.இதே எட்டாம்நூற்றாண்டில் சூபி (SUFI) என்ற இஸ்லாமின் கிளை மதம் தோன்றியது. அரபுமொழியில் 'சுப்' (SUF) என்றால் கரடுமுரடான கம்பிளி ஆடையைக் குறிக்கும். சூபி மதப்பிரிவினர் இதை அணிவ தால் இவர்களுக்கு இப்பெயர் வரக் காரணமாகியது.

கலாநிதி ஏ.எம்ஏ அசீசை போல் டாக்டர் ஏ.எம்.எம். சாகாப தீன் என்பவரும் இலங்கை நிர்வாக சேவையில் உயர் பதவி வகித்த பின் இளைப்பாறியவர். அசீஸ் கல்வித்துறைக்கு இளைப்பாறிய பின் சென்றார். சகாப்தீன் வர்த்தக முயற்சிகளில் இளைப்பாறிய பின் ஈடுபட்டார். பெரும்பொருள் ஈட்டிய சகாப்தீன் அதைத் தான தர்மங்களில் ஈடுபடுத்தினார். சகாப்தீன் பெரும் வரலாற்றா சிரியர், அவர் தமிழ், ஆங்கில ஆய் வுநூல் களைப் பிரசுரித் துள்ளார்.

'தமிழ் இலக்கியத்தில் சூபி கோட்பாடு' என்ற சகாப்தீன் ஆக்கிய நூல் இலங்கை, தென் னிந்தியா ஆகியவற்றில் மிகவும் பிரபலமானது. 'இறைவனும் பிர பஞ்சமும்' என்ற இவருடைய தமிழ்நூல் இஸ்லாமின் கண் ணோட்டத்தில் உலகை நோக்கு கின்றது. 'மனித வாழ்வின் பிறப்புச் சுற்றுக்கள்' என்ற இன்னு மோர் நூல் இவருடைய புல மையை நன்கு வெளிப்படுத்து கின்றது.

தமிழ் இலக்கியத்தில் சூபி கோட்பாடு என்ற நூலில் இஸ்லாமியத்தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய ஆய்வு மேற் கொள்ளப்படுகின்றது. முதற்கண் சூபிக்கோட்பாடு யாதென்று பார்ப்போம். அரபு உலகில் ஆரம்பித்த சூபி மதப்பிரிவு தனது வளர்ச்சியை அப் போதைய பாரசீகத்தில் பெற்றது. அங்கிருந்து அது மெதுவாக இந்தியாவை வந்தடைந்தது. தவமிருத்தலையும், தியானம், பக்திமார்க்கம் போன்றவற்றையும் சூபிகள் வலியுறுத்தினர்.

சைவமத நாயன்மார்களைப் போன்ற பல புனிதர்கள் சூபி கள் மத்தியில் தோன்றினர். தமது இறை அனுபவங்களை சூபி புனிதர்கள் மிகவும் சிறந்த உரைநடை, கவிநடை மூலம் வெளிப்படுத்தினர். இப்படியான வெளிப்பாடுகள் சிறந்த இலக்கி யமாகக் கருதப்படுகின்றன.

எல்லாமே இறைவன், இறைவனே எல்லாம் என்ற அடிப் படைக்கருத்தை சூபிகள வலி யுறுத்துகின்றனர். இது 'பான்தி யசம்' (PANTHEISM) என்று அழைக்கப்படுகின்றது. இக்கருத்து இந்தியாவில் நல்ல வரவேற்புப் பெற்றது. அராபி மற்றும பாரசீக மொழிகளில் வெளிப்படுத் தப்பட்ட சூபி அனுபவங்கள் இப்போது உருது, பஞ்சாபி, வங் காளி, தமிழ் உட்பட்ட எல்லாத் தென் மொழிகளில் வெளிப்படத் தொடங்கின. இதனால் இம் மொழிகள்யாவும் வளம் பெற்றன. தமிழ் மிகப்பெரிய தொரு வளர்ச்சியைப் பெற்றதாக டாக்டர் சகாப்தீன் சுட்டிக்காட்டு கிறார்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய திருவள்ளுவர் தமிழனின் சமயசார்பற்ற பகுத்தறிவு நிலைப்பாட்டை தனது குறள் மூலம் வலியுறுத்தினார். மதம்,சாதி, மொழி, இனம், நாடு முதலான வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் ஏற்கக்கூடிய நீதி வரன்முறைகள் இதில் கூறப் பட்டுள்ளன. இந்த ரக நீதி இலக்கியங்கள் கூறும் செய்தியை ஆங்கிலத்தில் UNIVERSALISM என்பர். இதற்கு உலகப் பொதுமறை என்று அர்த்தம் கொள்ள லாம். சூபிகள் தனியொரு மதக்கோட்பாட்டை வெளிப் படையாக எடுத்தியம்பாமல் பொதுவான மதப்பற்றை யும் இறையன்பையும் வெளிப்படுத்தினர். அவர்கள் மீது மதப்பிரிவினை வாதம், அடிப்படைவாதம் போன்ற குற்றச்சாட்டுக்களை சுமத்த இயலாது.

இலங்கைக்கு முதல் வந்த அரேபியர்கள் அரபு மொழி பேசினார்கள். இந்துமாகடலின் வர்த்தக மொழியான தமிழை அவர்கள் சிறிது காலத்தில் பேசத்தொடங் கினர். இவர்கள் மத்தியிலும், தமிழகத்தமிழர்கள் மத்தி யிலும் வாழ்ந்த சூபிகள் தமிழில் தலைசிறந்த தமிழ்ப் பாடல்களை இயற்றததொடங் கினர். மத அனுபவத்தின் ஊடாகத்தமிழ்த்தொண்டாற்றிய சூபிகளில் கோட்டார் ஞானியார், தக்களை பீர் முகம்மது, குன் னன்குடி மஸ்தான் சாகிப், மச்சரேகை சித்தன் ஆகியோர் முன்னணி இடம்வகிக்கின்றனர்.

தமிழ் மொழி பக்தி இலக்கியத்தின் இருப்பிடம் என்பதை மொழியியலாளர்கள் ஏற்றுள்ளனர். உலகின் எல்லா மதங்களின் மிகவும் சிறப்பான பக்தி இலக்கியத்தை தமிழிலில் காணலாம். தமிழகத்திற்கு இஸ்லாம் வந்த காலத் தில் ஜைன மதத்தின் சரிவால் தமிழ்ப்பக்தி இலக் கியத்தில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் வேதாந் தக்கருத்துக்கள் தான் தமிழ கத்தில் விரவியிருந்தது. சூபிகளின் பாடல்கள் இச்சூழ லில் பெரும்மாற்றத்தை ஏற்படுத் தியது.

என் மீது நான் அன்பு செலுத்தினால்

உன் மீதும் நான் அன்பு செலுத்துகின்றேன்.

உன் மீது நான் அன்பு செலுத்தினால

என் மீதும் நான் அன்பு செலுத்துகின்றேன்.

சூபி மதப்பிரிவினரான றூமி என்ற பாரசீக மொழிப் புலவர் பாடிய மேற்காணும் பாடலை சூபி இலக்கியத்திற்குச் சிறிய உதாரணமாக இங்கு தருகின்றோம். தமிழக மற்றும் இலங்கைத்தீவினர் இஸ்லா முக்கு மாறாவிட்டாலும் சூபி இலக்கியத்தால் கவரப்பட்டு சூபிகளைச் சூழ்ந்துகொண்டனர். இஸ்லாம் மதத்தினர் அல்லாதோர் மசூதிகளுக்குச் செல்லும் வழக்கம் தமிழ் நாட்டில் இருப் பதற்கு சூபிகள்தான் காரணம். ஆனால எவ்வளவுதான் சூபிகள் ஆடிப்பாடி பக்தி பரவசத்தில் மூழ் கினாலும் அல்குரானுக்கு முர ணாக அவர்கள் நடந்ததில்லை, பாடியதும் இல்லை. இது சூபி களின் தனி விசேஷம். அதே சமயத்தில் அவர்கள் வெளிப் படையாக இஸ்லாம் மதக்கருத் துக்களைக் கூறியதுமில்லை. இப்போக்கு தமிழிலுள்ள வாழ் வியல் நெறிகூறும் இலக்கியத்து டன் ஒத்துப் போகின்றது.

**அன்பரசு**

இற்றைக்கு இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருவள்ளுவர் தமி ழனின் சமயசார்பற்ற பகுத்தறிவு நிலைப்பாட்டை தனது குறள் மூலம் வலியுறுத்தினார். மதம்,சாதி, மொழி, இனம், நாடு முதலான வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் ஏற்கக்கூடிய நீதி வரன்முறைகள் இதில் கூறப்பட்டுள்ளன. இந்த ரக நீதி இலக்கியங்கள் கூறும் செய்தியை ஆங்கிலத்தில் UNIVERSALISM என்பர். இதற்கு உலகப் பொதுமறை என்று அர்த்தம் கொள்ளலாம். சூபிகள் தனியொரு மதக்கோட்பாட்டை வெளிப்படையாக எடுத்தியமபாமல் பொதுவான மதப்பற்றையும் இறையன் பையும் வெளிப்படுத் தினர். அவர்கள் மீது மதப் பிரிவினை வாதம், அடிப்படை வாதம் போன்ற குற்றச்சாட்டுக் களை சுமத்த இயலாது. ஒரு சூபி மதத்தவர் இயற்றிய பாடல்வரி.

மேலான அறிவின் சாராம் சம் தான் என்ன?

எல்லாவற்றையும் வடித்து நீக்கியபின்

தெளித்த ஞானம், ஒழுக் கநெறி, அறம

என்பன மூலம் தெரியும் ஆத்ம தரிசனமே.

பேராசிரியை லோர்னா தேவராஜா தனது 'சிறிலங்கா வின் முஸ்லிம்கள்' (THE MUSLIMS OF SRI LANKA. PROFESSOR LORNA DEVA RAJAH) என்ற நூலில் இத்தீவின் முஸ்லிம்கள் எதிர்நோக் கும் இரு முக்கிய பிரச்சினைகள் பற்றிக்குறிப்பிடுகிறார். ஒன்று அவர்கள் தமது இஸ்லாமிய அடையாளத்தைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய கட்டாயத் திற்குட்பட்டனர். இரண்டு அவர்கள் தாம் வாழும் பகுதிகளிலுள்ள தமிழ், சிங்கள இனத்தவர்களுடன் இணைந்து வாழவேண்டிய இன்னுமோர் கட்டாயத்திற் குட்படுகின்றனர். இதன் காரணமாக அல்லாவின் புகழ்பாடு வதற்கு அரபுத்தமிழை அவர்கள் பயன்படுத்துகின்றனர், சிங்கள புலமையும் பெற்றுள்ளனர்.

தமிழகத்திலிருந்து பெருவளை போன்ற பலதரப் பட்ட வாழ்விடங்களில் குடியேறிய முஸ்லிம்கள் தமிழைத் தாய் மொழியாகக்கொண்டவர்கள். ஏற்கனவே இத்தீவில் வாழ்ந்த அரபு மக்கள் இவர்களுடன் கலப்புத்திருமணம் செய்த காரணத்தால் தமிழ் பேசத் தொடங்கினர். இதனால் சூபி மதக்கோட்பாடுகள் தமிழக மற்றும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தால் இரண்டறக் கலந்துள்ளதாக ஆய்வாளர்கள் அறியததருகின்றனர். பிறமதத்தினர் மனம் நோகாமல் இலக்கிய நயத்து டன் இஸ்லாமிய கருத்துக்களை சூபி இயக்கம் கூறுவதை உணர முடிகின்றது.

# திரைப்படங்கள் தயாரிப்பது இலாபமீட்டும் தொழிலாகிவிட்டது




உலகில் உள்ள எல்லா நாடுகளுமே திரைப்படத் தொழிலிலே பெருமளவு ஈடுபட்டுவருகின்றன. பொருளாதார வசதி படைத்த பெருஞ்செல்வர்கள் மட்டுமன்றி முதலீடு செய்வதற்குப் போதிய வசதி இல்லாதவர்களும் திரைப்படத் தயாரிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். திரைப்படத்தில் இடப்படும் முதலீட்டினைக்கொண்டு பன்மடங்கு இலாபத்தினைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே இதற்குக்காரணம்.

மக்கள் பொழுது போக்கிலே நாட்டமுடையவர்கள். வாழ்க்கைத்தேவைகளுக்காக நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டுக் களைத்த நிலையில் பொழுதை இன்பமாகக் கழிக்க அவர்கள் விரும்புவதுஇயல்பே. அவ் விருப்பத் தினை நிறைவு செய்வதிலே திரைப்படங்கள் முதன்மை யான பங்கை வகிக்கின்றன. செல்வர்களைப் போன்று ஆடம்பரமாகச் செலவு செய்து பொழுதைக் கழிக்க முடியாத சாதாரண மக்களுக்கே திரைப்படத்தில் கூடிய ஆர்வம் காணப்படுகின்றது. எனவே திரைப்படத் தயாரிப்பாளர்கள் சாதாரண மக்களையே பெரும்பாலும் மனத்திற்கொண்டே திரைப்பட வெளியீட்டில் ஈடுபடுகின்றனர். ஏனெனில் 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்ற பழமொழிக்கிணங்க ஏழை மக்களிடம் இருந்து சிறிது சிறிதாகப் பெறப்படும் பணம் மூலமே அவர்களின் முதலீட்டையும் இலாபத்தையும் பெறவேண்டியுள்ளது.

சாதாரண மக்கள் என்று கருதும்போது அவர்கள் யாவருமே படிப்பு அறிவு அற்றவர்கள், கலாரசனை அற்றவர்கள், மிகவும் தாழ்ந்த கொச்சைத்தனமான விடயங்களையே இரசிப்பவர்கள் என்ற முடிவிற்கு வருவது தவறாகும். ஆனால் பொதுவாக இந்தக் கருத்தே பெரும்பாலான படத் தயாரிப்பாளர்களிடையே காணப்படுகின்றது. பாமர ரஞ்சகமான நிகழ்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து இவர்கள் படங்களைத் தயாரித்துப்பணம் தேடுவதிலேயே குறியாய் இருக்கிறார்கள். இக்காரணத்தினால் பெரும்பாலான திரைப்படங்கள் தரக்குறைவானவையாகவே வெளியாகின்றன.

வாழ்க்கையில் நடக்க முடியாத அபத்தை சம்பவங்கள், கதைக்கு எவ்வகையிலும் பொருத்தமில்லாத பாடல்கள், பெண்களின் மறைக்கவேண்டிய உடலுறுப்புக்களை வெளிக்காட்டி ஆடும் ஆபாச நடனங்கள், ஒருவன் பலரை அடித்து வீழ்த்தும் நம்ப முடியாச்சம்பவங்கள், கற்பழிப்பு, கள்ளக் கடத்தல், முதிரா இளைஞரது பருவக்கோளாறுகள், கொள்ளை, கொலை முதலானவற்றிற்கே இன்று திரைப்படங்கள் முதன்மை வழங்குகின்றன. 'வளர்ந்தவர்களுக்கு மட்டும் என்று வரையறைப்படுத்தி வெளியாகும் படங்களோ கட்டுக் கடங்காத பாலுணர்ச்சிகளுக்கு அதிக இடந்தருவதும் வன்செயல் களுக்கு அழுத்தம் தருவதும் இளைய சமுதாயத்தை தவறான வழிகளிலே திசைதிருப்பிவிடுகின்றன. வாழ்க்கை அனுபவம்பெறாத இவர்கள் திரைப்படங்கள் சித்தரிக்கும் வாழ்க்கையே உண்மை வாழ்க்கை என்று நம்பி அந்த வாழ்க்கை முறையினையே தமக்கு இலட்சியமாக வரித்துக்கொள்கின்றனர். இவ்வாறு கொள்வதாலே பிஞ்சிலேயே வெம்பிப் பழுத்துள்ளஓர் சமுதாயத்தை உருவாக்குவதற்கு இளம்பரம்பரைக்கு வித்திட்டப்பட்டுவிடுகின்றது. இப்பரம்பரையின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே விளங்கப்போகின்றது என்பதை எவரும் சிந்திப்பது இல்லை.

இவ்வாறு கூறும்பொழுது திரைப்படத்துறையிலே ஈடுபடுவோர் யாவரும் பணம் தேடுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவாகள் என்பது பொருளன்று. இத்துறையிலே பொறுப்புணர்ச்சியுடனும், நிதானத்துடனும், நன்நோக்கத்துடனும் திரைப்படம் தயாரிப்பவர்களும் உள்ளனர். ஆனால் இத்தகையோரது படங்களுக்கு மக்களின் ஆதரவு மிகக் குறைவாகவே கிடைக்கின்றது என்று பேசிக்கொள்ளப்படுகின்றது. ஒன்றோ இரண்டோ படங்களைக் கலைநுட்பம் அமையும் வகையிலே தயாரித்து வெளிப்படுத்தி, அவற்றிற்கு இடப்பட்ட முதல் கூடக்கிடைக்காத நிலையில் 'இது எமக்குச் சரிவராது' என்று முடிவு கட்டிக்கொண்டு இவர்களும் ஜனரஞ்சகம் என்ற பெயரில் தரங்கெட்ட உணர்ச்சிகளைத் தூண்டும் படங்களைத் தயாரிக்கத்தொடங்கி இழந்த முதலை மீண்டும் பெறமுயல்கின்றனர்.



இவர்களின் தீர்மானத்தைத் தவிர்க்கமுடியாது என்று கொள்வது சரியன்று. திரைப்படங்களைப் பணந்திரட்டும் சாதனமாக மட்டும் கொள்ளாது கலைத்துறைக்குப் பணியாற்றி மக்களை நெறிப்படுத்துவதும், கலையை வளர்ப்பதுமே எமது குறிக்கோள் என உறுதிபூண்டு செயற்படுவது தன்னலங்கருதா நல்லதோர் இயல்பாகும். முதலீடின்மை, ஆதரவின்மை, மக்கள் இரசிப்பின்மை ஆகிய தடைகளை எல்லாம் மேற்கொண்டு பெருந்தியாகங்கள் புரிந்து உலக அரங்கிலே தங்கள் பெயரை நிலைநாட்டிச் சிறந்த தயாரிப்பாளர்களும் திரைப்பட இயக்குநர்களாகவும் வங்கக்கலைஞர் சத்தியஜித்ரே போன்றவர்கள் விளங்குவதையும் நாம் நினைவிற்கொள்ளல்வேண்டும். படத் தயாரிப்பில் இவர்களின் வழியும் மனப்பாங்கும் பின்பற்றப்படல் வேண்டும் என்பதே பெரும் எதிர்பார்ப்பு.

திரைப்பட இயக்குநர்கள் சிலர் தயாரிப்பாளர்களாகவும் விளங்குகின்றனர். இவ்வாறனவர்களில் ஒரு சிலராவது கலைநுட்பம் உடையவர்களாயும் தரமான திரைப்படங்களை வெளியிட வல்லவர்களாயும் உள்ளனர். ஆனால் இவர்கள் தங்கள் ஆன்ம திருப்திக்கு என்று சில கலைப்படங்களைத் தயாரித்து அவற்றால் ஏற்படும் இழப்புக்களைச் சரி செய்யப் பாமர ரஞ்சகமான வர்த்தகப் படங்களையும் தயாரிக்கின்றனர். ஒரு கையில் மது பானத்தையும் மறுகையில் பசுப் பாலையும் வைத்துக்கொண்டு மாறி மாறி இரண்டையும் அருந்துபவர்கள் இவர்கள். இவர்களாலே சமுதாயத்திற்கு எவ்வித பயனும் இல்லை.

மனித, நேய வெளிப்பாடு, பண்பாட்டுப் பாதுகாப்பு, கலை நுணுக்கம், குறியீடுகள் மூலம் நுட்பமாகக் கருத்துக் களைத் தருதல், ஒளி ஒலிகளைப் பண்பும் பயனும் அறிந்து சிறந்த முறையில் கையாளல், அழகுணர்வு வெளிப்பாடு, யதார்த்த இயல்பு என்பவற்றைச் சிறந்த வகையிலே வழங்கும் திரைப்படங்கள் இன்று ஒறுப்பாகவே கிடைக்கின்றன. வளர்ச்சியில் மிக உன்னத நிலையிலுள்ள நாடுகளில் இருந்து இத்தகைய திரைப்படங்கள் வெளியாகி வருவதை உலகத் திரைப்பட விழாக்களிலே கண்டு களிக்க முடிகின்றது. அதே வேளையிலே தரங்கெட்ட ஆபாசத் திரைப்படங்களும் இந்நாடுகளில் இருந்து வெளியாகாமல் இல்லை. இருப்பினும் அவற்றின் தொகை குறைவே.

இந்தியா அதிகமான திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றது. இந்தியாவில் வெளியாகும் பல மொழித்திரைப்படங்களிலே கணிசமான தொகையைத் தமிழ் நாடே வழங்குகின்றது. இலங்கையிலும் அத்தமிழ் திரைப்படங்களே அதிகம் திரையிடப்படுகின்றன. அத்துடன் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று பாலியல் சார்ந்த திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. சாதாரண தமிழ் திரைப்படமே இளம் சமுதாயத்தை திசை திருப்பினால் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று குறிப்பிட்டு திரையிடப்படும் படங்கள் இளம் சமுதாயத்தை எந்த அளவிற்கு பாதிக்கும் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

இந்தியாவில் நடைபெறும் திரைப்படப் போட்டியிலும் சரி உலக நாடுகளில் இடம் பெறும் திரைப்பட போட்டிகளிலும் சரி, தமிழ் திரைப்படங்கள் முதன்மை இடம் பெறுவது என்பது இன்றுவரை இல்லை என்றே சொல்லி விடலாம். இதற்கு காரணம் என்ன? முதலில் நாம் குறிப்பிட்ட அத்தனை குறைபாடுளே. மக்களை அறிவற்றவர்களாகவும், விலங்கியல்பு வாய்ந்தவர்களாகவும் கருதி பணப்பைகளை நிரப்பும் தொழிலாகவே திரைப்படக் கலையைத் தமிழ் நாட்டுத்தயாரிப்பாளர்களும், இயக்குநர்



களும் ஆக்கி வருகின்றமையே பண்பாட்டு விழுமியங்களை போற்றுபவர்கள் என்றும் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகப் பேணுபவர்கள் என்றும் சிறந்ததொரு மொழிக்கும் உன்னதமான கலைப்பாரம்பரியங்களுக்கும் உரிமைபடைத்தவர்கள் என்றும் மறைவாகத் தமக்குள்ளே பழங்கதைகள் பேசிக்கொண்டும் திரைப்படங்கள் மூலம் கலைக்கொலையும், பண்பாட்டு விழுமியக்கொலையும், ஒழுக்கக் கொலையும் நடத்துவதே தமிழ் திரைப்பட தயாரிப்பாளரதும் இயக்குநரதும் குறிக்கோளாக இருந்து வருகின்றது.

எனவே மக்களிடம் பணம் பறிக்கும் கலையாகவே திரைப்படக் கலை பொதுவாக உலக நாடுகளிலும் சிறப்பாகத் தமிழ் மொழி வழங்கும் நிலத்திலும் நிலவிவருகின்றது என்பதே பலரின் பார்வையில் திரைப் படங்கள் எனலாம் இதுவே 21 சிந்திக்கத் தெரிந்தவர்களதும், கலையுணர்வு படைத்தவர்களதும் பார்வையாகவும் கருத்தாகவும் இருக்கும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. இந் நம்பிக்கையினை உடைத்து எறிந்து எதிர்காலத்தில் மக்களை முதன் நிலைப்படுத்தி அவர்களின் சுவை உணர்வைச் செவ்வியாக்கும் திரைப்படங்கள் வெளியாகுமானால் அதைவிட மகிழ்ச்சிதரும் விடயம் வேறு எதுவும் இல்லை.

**மதுமிதா இராசேந்திரம்**

---

## சொல்லியே தீரவேண்டும்

# யாவும் கற்பனை என்றால் எல்லாமே பொய் தான்...!

கதை சொல்லுறது ஒரு கலை பாருங்கோ. உலகத்தில எந்த நாட்டிலும் எந்த மொழி பேசுறவையட்டையும் இந்தக்கதை சொல்லுற பழக்கம் கட்டாயம் இருக்கும். அதிலயும் சில பேர் நுட்பமாகக் கதைக்கிறதில கெட்டிக்காரர். இப்பிடித் தான் எங்கட லெச்சுமணன்ர கடைசி பழனியம்மா கந்தையற்ற பெடியனோட கதைக்கிறாளாம் எண்டு ஒரு கதையடிபட்டது. கடையடியில தான் சேனாதிதான் சொன்னது. பின்ன நான் அதில தானே நின்று கேட்டுக்கொண்டு நிண்டனான்.

அவற்ர நெளிப்பும் நக்கலும் கெக்கே கெக்கே யெண்டு சிரிச்சுச்சிரிச்சு சொன்னவன். அவன் தமையன்காறன் அடிறாபுடிறாண்டு சண்டைக்கு வந்திட்டான்.

"ஆற்றா எங்கட கதை கதைச்ச வாடா பாப்பம்.... நூ.... நேரவாடா..." எண்டு

"ஆரிட்ட ஆர்கதைச்சா எனக்குத்தெரியாதே எண்டிட்டான் கடைக்காரன்"

எனக்கு குருகுறுக்குது. சொல்லுவமோ எண்டும் பாத்திட்டு மெல்லஅந்தடத்தால நழுவிற்றன். ஆனாத்தெரியாமப்போகுமே... சேனாதி தான்.

டேய் ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதையெண்டு பூடகமாய் கதைச்சிட்டானே. கேட்டா...என்ன சொல்லப்போறான். "உனக்கும் தொப்பி அளவெண்டாப் போடன்" என்பான்.அதுபோல தான் உலகம் முழுதும் நடக்குது. கதைக்கிறதெண்டா கதை வேணும். அது தான் சம்பவம் வேணும். சம்பவத்தோட நாலு சனம் சம்பந்தப்படத்தான் செய்யும். சனமும் இல்லாம சம்பந்தமும் இல்லாம கற்பனையில கதை வருமோ. இல்ல வருமோன்டு கேக்கிறேன். ஏதோ.

தனக்குப்பிடிச்ச . தன்னப்பாதிச்ச. விசயத்தைத்தானே ஆருங்கதைக்கிறதுண்டு.

உப்பிடித்தான் முந்த நாள் ராவு பக்கத்து வீட்டுக்கிழவி வெளியால போனது. ஏதோ மின்னுற மாதிரிக்கிடக்கெண்டு சத்தம் வைக்க சனத்தோட நானும்ஓடிப்னேன். போனா.... என்ர தாயே ஒரு யார் நீளம் வரும் பாம்பு. பிறகென்ன போனதில இளந்தாரியள் நாலு வாங்கு வாங்கி குப்பையோட போட்டு எரிச்சுப் போட்டாங்கள். மற்றவை ஆளாளாத்துவங்கிச் சினம் "நீ உதைச் சொல்லுறாய, போன கிழமை உப்பிடித் தானே எங்கட ஆட்டுக்கொட்டிலுக்க ஆடுகள் கத்துதெண்டு போய்ப் பார்க்க கிடந்தாரே... என்ன விளைச்சலெண்டு பாக்கிறியள் சூ.."

"ஏன் எங்கட கிணத்தடிக்குப்போற வழியில நாங்கள் அடிக்கேல்லயே.... அது ரத்தப்புடையனப்பா.."

ஏறக்குறைய 25 வருசத்தில இப்பிடி வழி தப்பி வந்த பாம்புகளின்ர அவச்சாவுகள் பற்றி ஒரு பெரிய தொகுப்பே வரும். கதை சொல்ல ஆருக்குத் தெரியாது.

விரிவாக்கதை சொல்லப்போனா வில்லன் வைச்சுச்சொல்ல வேணும். வில்லன்கள் ஆர் தான் தாங்கள் வில்லன்கள் எண்டு ஒத்துக்கொள்ளுகினம் அஜித்தைத்தவிர. பின்ன இவை கெம்பத்தான் செய்வினம்.

வல்லமையில்லாதவை கெம்பினா செல்லா இடத்துக்கினம் தீதாப்போகும். ஆனா இவையைப் பத்தி ஆர் என்ன கதைச்சாலும் ஒண்டுஞ் செய்யேலாதோ...

ஆரோ கதை எழுத அதில வாற சம்பவம் தனக்கு நடந்த சம்பவம் எண்டும் அது தன்ர கதை. இதால தனக்கு அவமானம் எண்டு வழக்குப்போட்டு நட்டஈடு வாங்கிப்போட்டார்.

அதோட தான் வழிகண்டு பிடிச்சினம். எதை எழுதினாலும் 'யாவும் கற்பனை' உயிருடன் இருப்பவர்களையோ இறந் தவர்களையோ குறிப்பனவல்ல. எண்டு ஒரு சின்னப்பொய்ய அடியில போட்டிட்டா ஒண்டும் செய்யேலாது.

இப்பதான் எல்லாம் மெய் எழுதட்டாமே. மெய்யே தெரியாமத்தான் கேக்கிறன். இதென்ன புது வேதம். வேதமெண்டாலே மறையெண்டு தானே சொல்லுறது. எல்லாத்தையும் அவிட்டுக்கொட்டி விட்டா இப்பத்தயில் சினிமாக்கள் போல இனிக்காட்ட ஒண்டுமில்லா மப்போம்.

இந்தக்கற்பனை இல்லாம என்ன நடக்கும். வாழ்க்கையில உயர நினைக்கிறவனும் கற்பனை பண்ணத்தெரிஞ்சாத்தான் வளரலாம்.

ம்.... என்னதான் நம்பிக்கை உறுதி மனோதிடம் எல்லாம் இருக்கிற ஒரு தலைவனுக்கு கீழே நிண்டு கொண்டும் உதயமூர்த்தியையும், ஹொப்மேயரையும், பிசி கணேசனையும் விழுந்து விழுந்து படிக்கிறோமே நாங்கள் மெய்யே - இவையட எழுத்தெல்லாம் யாவும் கற்பனை எண்டதக்காணேல்லையே. இது போலதான் எல்லாம்.

என்ன இருந்தாலும் மனிதனுக்குள்ள உரிமையல்ல தன்ர அந்தரங்கத்தைப் பேணுற அதை மற்றவை ஊறுபடுத்தாமல் காக்கிற உரிமை முக்கியம். இந்த உரிமைக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது. ஆனாலும் பாருங்கோ இந்த பொதுமக்களைக்காக்கும் அல்லது எச்சரிக்கும் நோக்கத்துடன் வாற இதுபோல எழுத்துகள் மேடைப் பேச்சுக்கள். பொது மக்களின் தீர்ப்புக்கு விடப்படுகிறதாகவே கருதப்படும். பின்ன இந்தச் சட்ட ஓட்டைக்கால தான் உந்த தேர்தல் பிரச்சாரங்கள், கேலிச்சித்திரங்கள் அரசியல் அம்பலங்கள் எல்லாம் தெரியுது. உப்பிடிகன ஓட்டையள் இருக்கு.

பின்ன உண்மைச் சம்பவத்தை அடிப்படையா வைச்சு எழுதுறதெல்லாம் சம்பந்தப்பட்டவையின்ர அமைதியைப் பொறுத்துத்தான் செய்ய வேணும். நான் எழுதின கதையை நீங்கள் நாடகமாக்கேலா நீங்கள் எழுதின ஒரு கதைத் தலைப்பை நான் என்ர கதைக்கும் போடேலா. என்ர பாட்டு வரிய நீங்கள் சிலாவி எழுதேலா. உப்பிடி கனக்க இருக்கு. இதெல்லாம் வில்லங்கம். பேசாம... யாவும் கற்பனை எண்டு போட்டாப்போச்சு. என்ன நான் சொல்லுறது. இது கற்பனையல்ல.

**மாயா**

# தொடர்கதை

## பகுதி — 03

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

## அத்தியாயம்-06

**சாய்வு** நாற்காலியில் கண்களை மூடி படுத்திருந்தார் சிவம். சில நாட்களாக சூழலில் ஏற்பட்டிருக்கும் பதட்டம் அமைதியை இழக்கச் செய்திருந்தது. ஒன்று மாறி ஒன்றாக துன்பங்கள்தான் தொடர்கிறது. ஆனாலும் எத்தனை துன்பங்கள் வந்தாலும் அதை ஆற்றுகின்ற சக்தி காலத்துக்கு இருந்து விடுகிறது. வேலாயுதம் இறந்த போது தன்னில் ஒரு பகுதியை இழந்து போனதாய் உணர்ந்தவர் சிவம்.

கிளிநொச்சி போகும் வழியில் வேலாயுதம் கட்டிய வீடும் மில்லும் இப்போது சிதைவுடனேயே இருக்கின்றது. கரடிப்போக்கு சந்தியில் அவரின் திரை அரங்கையும் கிளிநொச்சி நகர மத்தியில் அவரது பெயர் எழுதப்பட்ட கடைத்தொகுதியையும் பார்க்கும்போது அவரையே காண்பது போல உணர்வார். கட்டடத்தின் மேல் பகுதியில் சீமெந்து சுவரில் பொறிக்கப்பட்ட 'வேலாயுதம்' என்ற எழுத்துக்களை ஆவலோடு பார்ப்பார். எத்தனை அழகாய் எழுத்து எழுத்தாய் செதுக்கப்பட்டிருக்கிறது. நேசிப்புக்குரியவர்களை இழக்கும் போது ஏற்படும் துக்கம் பெறுமதியானது. 'அப்பு ஆச்சி அண்ணை உறவு சுற்றம் இருந்த போராளிப் பிள்ளையள்...... மாறனின் மறைவு இப்போது நினைத்தாலும் வலியை ஏற்படுத்துகிறது. எல்லோர் வீடுகளுக்கும் உரிமையோடு வந்து சாப்பிட்டுப் பழகியவன். எல்லா வலிகளும் கால நகர்வில் தான் மாற வேண்டியிருக்கிறது. இந்திய ராணுவம் தமிழர் பிரதேசங்களில் தங்கள் குரூர முகத்தைக்காட்டி வதைத்துக்கொண்டிருந்த நேரம் நாட்டின்தென்பகுதியில் சிறிலங்கா ராணுவம் ஜே.வி.பி. ஆட்களை வேட்டையாடிக்கொண்டிருந்தது. அங்கும் இங்குமாய் ரத்தம் வெள்ளமாய் ஓடியது.

இந்திய அரசின் மாற்றம் இங்குள்ள தமிழரின் தலைவிதியையும் மாற்றி எழுதியது.

நம்ப முடியவில்லைத்தான். ஆனாலும் இந்திய ராணுவம் படிப்படியாய் திரும்பிப்போய்விட்டது. அவர்கள் வந்ததும் நின்றதும் போனதும் கனவு மாதிரி இருக்கிறது. எல்லோர் மனதிலும் நிம்மதி. ஆனாலும் இந்த நிம்மதி அதிக நாட்களுக்கு நிலைக்கப்போவதில்லை என்பது புரிந்தது. அவர்கள் போய் சில மாதங்கள்தான் ஆகிறது. சில நாட்களாகவே சண்டை மறுபடியும் தொடங்கிவிடுமோ என்ற அச்சம் மனதில் ஏற்படுகிறது. தொடங்கிவிட்டால் ஆனையிறவு ராணுவத்தின் முதல் தாக்குதலுக்கு இலக்காகப் போவது தங்களுடைய கிராமம்தான் என்பதில் அவர்களுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

எங்கு போவது.... என்ன செய்வது என்று தெரியவில்லை.

எத்தனையோ பிரச்சினைகளுக்கு நடுவே அவர்களது வாழ்க்கை இயல்பாகத்தான் நடக்கிறது. முருகன் கோவிலில் ஆனி உத்தரத் திருவிழா தீமிதிப்பு, காவடி ஆட்டம், பறவைக்காவடி, விநாசியின் நாட்டுக்கூத்துமாக நன்றாய்த்தான் நடந்துவருகின்றது. இப்போது பாடசாலையும் பெரிதாகி உயர்தரம் வரை வகுப்புக்கள் வந்துவிட்டன.

அயற்கிராமத்தைச் சேர்ந்த சோதிநாதன் அதிபராய் இருக்கும் இந்த சில வருடங்களில் பாடசாலை எவ்வளவோ முன்னேறியிருந்தது. அவர் சுந்தரமூர்த்தி வாத்தியாரின் மகளைத் திருமணம்செய்து இந்த ஊரிலேயே இருப்பதால் தன் முழுக் கவனத்தையும் செலுத்தி பாடசாலையை நல்ல நிலைக்கு கொண்டு வந்திருந்தார். ஒரு பிரச்சினை என்று வந்தால் எல்லாமே அடிபட்டுப்போய் விடும்.

தவிரவும் இது ஆனி மாதம், வயல் எங்கும் நிறைந்து பரவியிருக்கும் இளம் பயிர்களைவிட்டு எங்கு போவது.... காலபோகத்து பயிரைவிட சிறு போகத்து பயிரைத்தான் கண்ணுக்குள் வைத்து வளர்க்க வேண்டும். குளத்து தண்ணீரை நம்பிச் செய்கின்ற வேளாண்மை. தண்ணீரை முறைதலையாய் பாயச்செய்வதற்குள் எத்தனை அடிதடி சண்டைகளை காணவேண்டி வந்து விடுகிறது. எத்தனையோ தடைகளை தாண்டித்தான் நெற்கதிர்கள் முற்றிச்சரிகிறது.

இதுவரை இரணைமடுக் குளத்திலிருந்து ஒழுங்காய் தண்ணி எடுத்து பயிரை வளரச்



செய்தாயிற்று. இனி....

இந்தகாலத்தில் ஒழுங்காக சாப்பிடவோ உறங்கவோ முடியாமல் இருந்தது.

ஆனையிறவில ஆமியளை குவிக்கிறாங்களாம்.... பெரிய பெரிய வாகனங்கள் வந்து நிற்குதாம் என்ற செய்திகள் உலாவியதில் கலக்கம் இன்னமும் அதிகமாயிற்று.

''அண்ணை..... சிவமண்ணை......''

சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து தலையைத் திருப்பி வாசலைப் பார்த்தார். சிதம்பரி வேர்க்க விறு விறுக்க வந்தார்.

"அண்ணை இப்ப மத்தியானச் செய்தி கேட்டனீங்களே......"

"இல்லையடாப்பா ஏன்?"

"அண்ணை மட்டக்களப்பு பக்கம் சண்டை தொடங்கியிட்டுதாம். பிரச்சினை பெரிசாகும் போல கிடக்கு."

அப்படியே அமர்ந்து விட்டார். தொடர்ந்து என்ன நடக்குமோ என்ற கலக்கம்.

அடுத்தடுத்த நாட்களில் நிலமை மேலும் இறுகியது. உளவு விமானங்கள் தலைக்கு மேலாக பறந்து திரிந்தன. இதுவரை நடந்து கொண்டிருந்த கொழும்பு யாழ் புகையிரத சேவை நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனையிறவுக்கூடான யாழ்ப்பாணப் பாதை மூடப்பட்டது. பரந்தனுக்கு வடக்கே பயணம் செய்ய முடியாமற்போனது.

பொம்பர்களும் ஹெலிஹொப்டர்களும் வளைந்து பறந்தபடி கிளிநொச்சி பரந்தன் பகுதிகளில் குண்டுகளைக் கொட்டிய போதுதான் நிலமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்டார்கள். கிராமத்தின் உட்புறங்களிலும் இளைஞர் வட்ட மைதானத்திலும் ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வந்து விழுந்து வெடித்தன. ஒரு பனை உயரத்துக்கு மண் புழுதி எழுந்து காற்றில் கலந்தது. மின்சாரம் நின்றுவிட்டது. கிராமத்தின் வீதியோரமாக வரிசையாக ஆண்களும் பெண்களுமாக போராளிகள் வேகமாக நடந்து பரந்தனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

"மலர்விழி அக்கா தன்ர குறூப்போட ஊர் எல்லையில இருக்கிற சங்கக் கட்டடத்தில இருக்கிறா. கெமிக்கல்ஸ் சுற்றாடல் எல்லாம் பெடியள் வந்து நிற்குதுகள். ஆமி பரந்தன் பக்கம் வரப்போறான் போல கிடக்கு...." என்று யோகன் சொன்னான். இரண்டு மாதமாய் மலர்விழி இந்தப் பக்கம் தான் வந்து போய்க்கொண்டிருந்தாள்.

இரவு பகல் என்றில்லாமல் எந்நேரமும் எறிகணைகள் வந்து விழுந்து வெடித்தன. தருமலிங்கம் வீட்டு முற்றத்தில் எறிகணை வந்து விழுந்து வெடித்ததில் காயப்பட்ட அவரது மனைவியை ரத்தம் பெருக ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். இனியும் கிராமத்தில் இருக்க இயலாது. எங்கே போகலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த விடிகாலை நேரம்.

கிராமமே அல்லோல கல்லோலப்பட்டது.

"சுட்டதீவுக்காட்டுக்க ஹெலியில கொண்டு வந்து ஆமியை இறக்கிப் போட்டாங்களாம்."

வெடிச்சத்தங்களும் குண்டுகள் வெடிக்கும் அதிர்வும் தொடர்ந்து கேட்டது. தோளில் ஆயுதச்சுமையுடன் தன் குழுவோடு வேகமாய் நடந்த மலர்விழி "இங்க ஊருக்குள்ள இருக்காதேங்கோ. எல்லாருமாய் தூரப்போய் நில்லுங்கோ." என்று சொல்லிக்கொண்டே போனாள்.

நாலைந்து வாகனங்கள் போராளிகளை ஏற்றிக்கொண்டு உள்வீதிவழியே புழுதி பறக்க விரைந்தது. அவர்கள் வீடு கடக்கையில் கை அசைத்துச் சிரித்துக் கொண்டே வசந்தனும் அதில் போவதைப் பார்த்தார்.

ஊரில் உள்ள அனைவரும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வெளியேறத்தொடங்கினார்கள். வானில் கேட்ட இரைச்சல்களும் மிக அருகாக விழுந்து வெடிக்கும் எறிகணைகளின் அதிர்வுகள் நெஞ்சைப்பதற வைத்தது. பாரிய சண்டைக்கான சத்தங்கள்.

காலையில் சத்தங்கள் கேட்கத்தொடங்கியதுமே சியாமளாவும் செந்தில்நாதனும் பிள்ளைகளுடன் வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

''பிள்ளையள் பயந்து அழுகுதுகள். நல்ல காலம் இண்டைக்கு பள்ளிக்கூடம் இல்லை. என்ன நடக்கப்போகுதோ தெரியாது."

சியாமளாவின் குரல் நடுங்கியது.

"இனி இங்க நிற்க ஏலாது. சத்தங்கள் பெரிசாய்க் கேட்குது. வெளிக்கிடுங்கோ கொஞ்சத்தூரம் போய் நின்று பார்த்திட்டு வருவம்."

அவர் அவசரப்படுத்தினார். ஒரு உழவியந்திரம் இரண்டு நாளுக்கு முதல் மூன்றாம் வாய்க்கால் காணிக்கு பசளை ஏற்றிக்கொண்டு போய் திரும்பி வராமல் கார்த்திகேசு வீட்டில் நின்றது. மற்ற உழவியந்திரத்தையும் காரையும் எடுத்துக் கொண்டு அவர்களும் புறப்பட்டார்கள். கிராமத்து வீதி சனங்களினால் நெரிபட்டது. கையில் ஒவ்வொரு உரப்பை முடிச்சுடனும் குழந்தைகளை கைப்பிடியாய் பிடித்துக் கொண்டு அவசரமாய் நடந்து கொண்டிருக்கும் சனங்கள்....

முதலில் குஞ்சுப்பரந்தன் வரை போய் நிற்கலாம் என்று நினைத்துத்தான் புறப்பட்டார்கள். ஓவசியர் சந்திவரை எறிகணைகள் வந்து விழுந்து வெடித்தன. ஒவ்வொரு சத்தத்துக்கும் சனங்கள் குழறிக்கொண்டே விழுந்து எழும்பி நடந்தார்கள். இப்போதைய நிலையில் குஞ்சுப்பரந்தன் கூட பாதுகாப்பானதாய் தோன்றவில்லை. தவிரவும் விதானையார் வீட்டு முற்றம் வரை சனங்கள் நிறைந்துபோய் நின்றார்கள்.

நேராக பூநகரிக்கு போனார்கள். பூநகரியில் சிதம்பரியின் தமயன் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்த பிறகுதான் மூச்சு வந்தது. அவர்கள் வீட்டின் தலைவாசலுக்குள் தங்கள் பொருட்களை வைத்துவிட்டு அப்பாடா என்று அமர்ந்துவிட்டார்கள். அவர்களுடன் வந்த வேறு ஆட்கள் பூநகரி கடந்து சங்குப்பிட்டி கேரதீவு பாதையால் மீசாலை சாவகச்சேரி என்று தங்கள் சொந்தக்காரர் வீடுகளுக்கும் போவதாய் சொல்லிவிட்டுப்போனார்கள்.

தலைவாசலுக்கு பக்கத்தில் அடுப்பு மூட்டி சமைத்தார்கள். தோட்டத்து கிணற்றில் குளித்து முழுகிவிட்டு வந்து சாப்பிட்டார்கள். வானொலிச் செய்திகளை நேரம் தவறாமல் கேட்டார்கள்.

முருகானந்தனும் யோகனும் ஓவசியர் சந்திவரை போய் பார்த்துவிட்டு வந்தார்கள். அவர்களுடன் விக்கினேஸ்வரன் மனைவி பிள்ளைகளுடன் வந்தான்.

அவர்களைக் கண்டதும் நிம்மதியாக இருந்தது.

''பாலச்சந்திரண்ணையவையள் உருத்திரபுரத்தில இருக்கினமாம். சொல்லிவிடச் சொன்னவை. அங்க இது வரைக்கும் ஷெல் வரேலை."

''மரியக்கண்டு எங்க நிற்குது"

''ஓவசியர் சந்திக்கு இங்கால வந்து நிற்குது. பகலில் பண்டாகமத்தில போய் நிற்கிறதாம். ஒரே சத்தமாய் இருக்கு. கிளிநொச்சிப்பக்கம் ரவுணுக்கு கொஞ்சம் தள்ளி இருக்கிற சனங்கள் இப்பவும் இருக்குதுகள். உங்களோட வந்து நிற்பம் எண்டு தான் நாங்கள் வந்தனாங்கள். பிள்ளையள் ஒரே பயந்து அழுகுதுகள்."

"எது வரைக்கும் சனம் போய் வருகுது."

"ஓவசியர் சந்திவரைக்கும் போகலாம். அதில நிண்டு பார்க்க பரந்தன் சந்திப்பக்கம் ஒரே கரும்புகையாய் தெரியுது. ஆமிவந்து நிண்டு கடை எல்லாத்தையும் எரிக்கிறான்கள் போல கிடக்கு."

"பரந்தனில காம்ப் போட்டு இருக்கிறாங்கள் எண்டு தான் சனம் கதைக்குது."

அவங்களுக்கு சாப்பாட்டைத் தட்டுகளில் போட்டு பராசத்தி கொடுத்தாள்.

கிட்டத்தட்ட ஒன்றரை மாதம் ஊரை நெருங்கமுடியவில்லை. ஆனையிறவிலிருந்து வந்த ராணுவம் பரந்தனில் நின்று கிளிநொச்சியிலிருந்த ராணுவத்தையும் சேர்த்துக்கொண்டு திரும்ப ஆனையிறவுக்குப் போனது. பரந்தன் கிளிநொச்சியில் இப்போது போராளிகள் நிற்பதாக கதைபரவியது. ஒன்றரைமாதத்தின் பின் எல்லோரும் ஊருக்குத்திரும்பினார்கள். காரை பூநகரியிலேயே விட்டு விட்டு உழவியந்திரப் பெட்டியில் ஏறி அமர்ந்து வந்து சேர்ந்தார்கள்.

வீட்டுக்குள்ளிருந்த பொருட்களை எல்லாம் வீட்டில் நடுவில் போட்டு இராணுவம் நெருப்பு வைத்திருக்கிறது. சுவரில் கரும் புகை அப்பிக்கிடக்க மேல் முகட்டு மரங்கள் வீட்டின் ஒரு பக்கம் சரிந்திருந்தது. பல பொருட்களைக் காணவில்லை. ஊருக்குள் பல வீடுகள் எரிக்கப்பட்டிருந்தன. குடிசை வீடுகள் எதுவும் தப்பவில்லை. வீட்டைப்பார்த்து ஏங்கிப்போய் நிற்க கார்த்திகேசு பதட்டத்துடன் வந்தார்.

''எங்கட வீட்ட நிண்ட உன்ர றக்ரர் என்ர ரெண்டு றக்ரர் எல்லாத்தையும் ஆமி கொண்டு போட்டான்."

"அய்யோ...... றக்ரரை....."

பேச்சு வராமல் திகைப்புடன் நின்றார்.

''எங்கட இழப்பு பொருளோட போச்சு. மயிலரண்ணையை பற்றி அறிஞ்சனியா"

"இல்லையே ஏன்?"

''ஷெல்அடிக்க ஊரெல்லாம் ஓடிப்போன நேரம் மயிலரண்ணை கடையுக்க சாமான்களை ஏத்திக் கொண்டு நிண்டிருக்க வேணும். ஆமிக்காரனை கண்டிட்டு ஓடியிருக்கிறார். அவங்கள் சுட்டுப்போட்டு பின் வளவு கிணத்துக்க போட்டிட்டாங்கள். முந்தநாள் மகன் வந்து தேடிப்பார்த்து கண்டு பிடிச்சான். அழுகி உக்கிப் போய் கூடாய் எடுத்து அடக்கம் செய்ததாம்."

கேட்க தலை விறைத்துக் கொண்டுவந்தது.

"என்ன அனியாயமடாப்பா. அந்த நல்ல மனிசனுக்கு இந்த முடிவே."

அன்று மாலை மரியக்கண்டு பதட்டத்துடன் வந்து சொன்னான். "முதலாளியின்ர தியேட்டரை குண்டு வைச்சு இடிச்சுப் போட்டாங்கள்."

கடவுளே ஒன்று மாறி ஒன்றாய் என்னவெல்லாம் நடக்கிறது.

முருகானந்தன் மோட்டார் சைக்கிளில் அவரை கிளிநொச்சி வரை கூட்டிப்போனான். பரந்தன் சந்தி முற்றாய் அழிந்துபோயிருந்தது. மிஞ்சிய ஒன்றிரண்டு சுவர்களும் கருமை போர்த்து காணப்பட்டன. எறிகணை வீச்சில் தெருவெல்லாம் குண்டும் குழியுமாய் கற்கள் சிதறுப்பட்டு கிடந்தன. உக்கிரமான சண்டையின் பின் ராணுவம் கிளிநொச்சியைவிட்டு ஆனையிறவுக்கு போயிருக்கிறது. கரடிப்போக்கு சந்தி கடந்து பார்க்கையில் நெஞ்சுக்குள் எதுவோ கப்பென்று அடைத்துக்கொண்டதுபோல் இருந்தது.

படமாளிகை கற்குவியலாக இருந்தது.

இப்போதுஇந்த கோலத்தை அண்ணை இருந்து பார்த்திருந்தால் மறுபடி உயிரை விட்டிருப்பார்.

இந்த கற்குவியலுக்குள் இருப்பது அண்ணையின் உழைப்பும் வியர்வையும். அந்த கற்குவியலை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

சிறுகதை



# அவனின் விலை

க. தயாபரன்

"**நான்** நாலைந்து நெருங்கின உறவுக்காரரிட்ட ஆழமாக விசாரிச்சுப் பார்த்தனான் கமலம். அந்தக் குடும்பம் மிருசுவில்ல செழிப்போடு வாழ்ந்தவைதானாம் - மேல்மாடி வீடு, கார், பதினைந்து ஏக்கர் வயல்.. இப்படியாக! தொண்ணூற்றைந்து இடப்பெயர்வோட தகப்பனும் திடீர்க் காச்சலில மோசம்போக அந்தரிச்சுப் போட்டுதுகள்.

பாதை திறந்த பிறகு வன்னியிலியிருந்து வந்து வண்ணார் பண்ணையில வாடகை வீட்டில வசிக்கினம்... மிருசுவில் வீடு உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ள இருக்கிறபடியால் இப்ப அங்க போகேலாது!"

"நிப்பாட்டுங்கோ, இப்ப ஆர் உங்களிட்டை அவையின்ரை 'சோட்டி பிக்கேட்' கேட்டது.. நாங்கள் போக்கிடம் இல்லாமல் அவையோட சம்பந்தம் பேசப் போகேல்லையே...? போன வெள்ளிக்கிழமை அங்க போய்க் கதைச்சப்போ பிள்ளையின்ரை மாமாகாரன் நாங்கள் சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிப் போட்டு..! அவை தங்கட பிள்ளைக்குக் குடுக்கிறதோட பாலுவை நம்பி நிற்கிற இரண்டு பெண் சகோதரிகளுக்கும் கொஞ்சம் இனாம் கேட்டது தவறா...?"

"இப்பவும் கூட தந்த வாக்குறுதியிலயிருந்து பின்வாங்கவில்லையப்பா; கால அவகாசம் கேட்கினம்... தம்பியும் போனமாதம்தானே படிப்பு முடிந்து எம்.பி.பி.எஸ் பட்டம் வாங்கியிருக்கிறான்! வருகிற மாரி கழிந்து தை பிறக்கட்டுமே..." என்று இழுத்த கணவனை பார்வையால் எரித்தாள்.

"ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால் விளைவு இரண்டு என்றது புரியாத பச்சைப்பிள்ளை மாதிரி அலட்டாதேங்கோ. மூத்தவள் யமுனாவின்ர கல்யாணமுமெல்லே நீண்டு போகுது. குமர் முத்தி இறுதியில எதுவோ ஆகின் கதையாக...! தோளுக்குமேல வளர்ந்த பெட்டச்சிகளுக்க கைநிறைய காசும் ஊர்பூராக நிலமும் தேடிவைச்சிருக்கிறமாதிரி நியாயம் பேசவந்திடுவார். க்கூம்.." அப்பாவின் கையாலாகத்தனத்தைக் குத்திக்காட்டுவதோடு அவர் பெட்டிப் பாம்பாகிவிடுவார்.

போர்வைக்குள் கிடந்த பாலேந்திரன் நெளிந்தான். 'தமிழ்ப் பெண் சமுதாயம் சிறகுவிரித்து உயரே எங்கோ ப்றந்த பின்னும் அவள் 'குடும்ப உறவில் இணைந்து கொள்வதற்கே கறாராக விலைபேசும் வீம்புத்தனம்...' போர்வையை விலக்கிக்கொண்டு வெறுப்போடு நிமிர்ந்தவன் திண்ணையிலிருந்து புகையிலை சுருட்டிக்கொண்டிருந்த பெற்றோரைப் பார்த்ததும் அடங்கிப் போனான்.

பாவம் அவர்கள்! இறுதி மூச்சுவரை தங்களைக் காப்பாற்றுவான், சகோதரிகளிருவரையும் கரைசேர்ப்பான் என்ற நம்பிக்கையோடு புகையிலைத் தூளின் நெடிக்குள்ளே தினப்பொழுதைக் கரைத்தவாறு... நாகரட்ணம் புகையிரதக்கடவை உத்தியோகத்தை விட்டபொழுது கிடைத்த கணிசமான தொகையும் கூட அவன் மருத்துவப் படிப்பில் கரைந்துபோயிற்று.

எப்படியோ, அவர்கள் நம்பிக்கையை - எதிர்பார்ப்பை அவன் பொய்யாக்கவில்லை. ஆயினும் மேற்கொண்டு சத்திரசிகிச்சை, குழந்தை மருத்துவம் அல்லது மகப் பேற்றியல் இதிலொன்றில் சிறப்புப் படிப்பை பூர்த்திசெய்தாலேயே எதிர்காலத்தில் சாதிக்கமுடியும்!

'வெயிலேறுவதற்கிடையில் கௌசியை சந்திக்கப்போகவேணும்' அந்த நினைப்பே அடிமனதில் தித்தித்தது. கல்யாணப் பேச்சு வழுவழுவென்ற நிலையிலிருக் கையில் எந்த முகத்துடன் அவர்கள் வாசலை மிதிப்பது...? இதன்மூலம் அந்தப் பேதை நெஞ்சில் சலனம் தோன்றிடக் காரணமாகிவிடாதா..?

'பாலு,வெளியே போகிறதாயிருந்தால் அலுமாரித்திறப்பைத் தந்திட்டுப்போ"

"ஏனப்பா...?"

"பழைய பேப்பர் எடுத்திட்டுப்போக ரங்கநாதன் வருவான் இருக்கிறதை அப்படியே நிறுத்து கொடுத்திடலாம்.. அவ்வளவு கொப்பி, புத்தகங்களும் மலை போல குப்பையாகக்கிடப்பானேன்!" அப்பா சொன்னதைக் கேட்க சற்று ஆதங்கமாக இருந்தது. இன்று பழையனவாகி கழித்து விடப்படுகின்ற ஏடுகளுடன் அவனுக்குள்ள தொடர்பு இருபது ஆண்டுகளாச்சே...! இனி அவை இருந்துதான் என்ன பயன்..? போகட்டும்

● ● ●

கௌசி அவனிடம் எதை யும் மறைக்க வில்லை. அவள் உயர்தர வகுப்பில் படித்த போது துளிர் விட்ட காதல் உட்பட பின்னர் அது யாழ்ப் பாணக்குடாநாடு மீதான சூரியக்கதிர் படையெடுப்போடு அல்லலுற்ற மக்களின் வாழ்க் கைத்துயரோடு கருகிப்போனது தனிக் கதை!

அதைக் கேட்ட மாத் திரத்தே பொசுக்கென அவனுள் அவமானம் எட்டிப்பார்த்தது. ஆனால்.. அவள் உள்ளத் தூய்மையை எடைபோடும் அவன் மட்டும் யோக்கியமானவனில்லையே! அதுவும் பாலுவின் பக்கத்தில் கடுகளவும் தவறில்லை - அவள் கல்பனாதானே மூன்று வருட காதல்வாழ்வு போதுமென்று கழன்று கொண்டாள்.

ஆக இருவர் பக்கத்திலும் கைகூடாத காதல் வாழ்வின் கசப்பான வடுக்கள்!

"நான் கேட்கிறதை தவறாக எடுக்காதீங்க கௌசி, பாதை திறந்ததோடு திரும்பிவந்த நீங்கள் அவரைத் தேட முயற்சிக்கலையா...? இதை ஏன் கேட்கிறேன் எண்டால் உங்கள் இருவருக்குமிடையில பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மதம், குடும்ப அந்தஸ்து அத்தனையிலும் ஏணி வைத்தாலும் எட்டாதளவு இடைவெளி நிலவியிருக்கு. இதையெல்லாம் கடந்து இருவருக்குமிடையில இரண்டாண்டுகள் சினேகிதம் இருந்ததை கேட்கேக்கை அது பெரும் பாலானவர்களிடம் பருவவயதில் ஏற்படுகின்ற சாதாரண ஈர்ப்பாக கருதமுடியலை.." பாலுவின் கேள்விக்கு அவளிடம் நீண்ட மௌனம். அது ஏனென்று அவனுக்குப் புரிய வில்லை.

ஒருவேளை இடையில் வந்த சில ஆண்டுகள் பிரிவு நிரந்தரமானதெனக் கருதி அவன் வாழ்வில் வேறு பெண்ணுக்கு இடமளித்து விட்டானோ...

அன்றேல் கைதாகி காணாமற்போனோர் பட்டியலில் அவனும்...? அவன் மேற்கொண்டு அவள் வாயைக் கிளறமுயல, கௌசியின் அம்மா தேவகி சந்தையிலிருந்து மீண்டிருந்தாள். அவ்வளவோட வாயை மூடிக்கொண்டான்.

"சந்தையில மாமிசவகையள் மலையாகக் குவிஞ்சுகிடக்கு. நண்டும் கணவாயும் வாங்கி வந்திருக்கேன் கணவாய் பிரட்டலை ஒருகை பார்த்திட்டு ஆறுதலாக போங்கள் தம்பி..." தேவகி உபசரித்தாள்.

அவன் தயங்கினான். பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள் ஈடேறாவிட்டால் இந்தச் சம்பந்தமே பிசுபிசுத்துப் போய்விடக்கூடிய அபாயம் நிலவும் வேளை இவர்களுக்கு நெருக்கமானவன் போன்று நடந்து கொள்ளல் தகுமா..?

"வேண்டாம், இண்டைக்கு விரத நாளானபடியால் வீட்டில காத்துக் கொண்டிருப் பாங்களே!" வாயில வந்த பொய்யை அவிழ்த்தான்.

"அடடா... இண்டைக்கு கௌசியின் அண்ணாவோட பிறந்த நாள்! இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு இதேதினத்தில வீடுதேடி வந்திருக்கிற உங்களுக்கு உபசாரம் செய்ய பிரியப்பட்டேன் பரவாயில்லை..."

"அப்படியா...!" வியப்போடு வாசற் கதவின்மேல் தொங்கிய அந்தச் சிறுவனின் கறுப்பு வெள்ளைப் படத்தைப் பார்த்தான். திகதி சரியாக விருந்தது. வேண்டாத பொய்யைச் சொல்லி இந்த ஏழைத் தாய்க்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அற்பதிருப்தியைக் கெடுத்திருக்க வேண்டாமே யென்று கழிவிரக்கப்பட்டான்.

கௌசியையும் அவள் அம்மாவையும் போல அவனுக்கும் பரந்த நெற்றி; கூர்ந்து நோக்கும் பூனைக்கண்கள். இவனை எங்கேயோ பார்த்த நினைவு... நீண்டகாலம் நெருங்கிப் பழகிய உணர்வு... ஆனால் எங்கே, எப்போது என்றுதான் மீட்டுப் பார்க்க முடியாமலிருந்தது. இவன் சின்னவயதில் தெருவில் வந்த லொறியில் மோதுண்டு அற்பாயுசில் உயிரைப் போக்கிக்கொண்ட தாகவல்லவா சொன்னார்கள். இவனது உருவ ஒற்றுமையுள்ள இன்னொருவனை எப்போதேனும் சந்தித்திருக்கக் கூடும் என சமாதானமடைந்தான்.

"கௌசி, எங்க வீட்டவர்கள் தங்களுக்கு மருமகளாக வரப்போகிறவளிடம் அதிகமாக எதிர்பார்க்கிறதாக எனக்குப் படுகுது... நீங்க வெளிப்படையாக எல்லாத்தையும் சொன்னதால எனக்குள்ள எழுந்த ஆதங்கத்தைச் சொல்கிறேன். உண்மையிலே உங்கள் அம்மாவால இவ்வளவு பெரிய தொகையை புரட்ட இயலுமா..?" அவன் குரலில் மெல்லிய தயக்கம்.

"அப்படி மனைவியாக வரப்போகிறவளிடம் காசுபெறுவது உங்கள் சுயமரியாதைக்கு இழுக்காகப் படுமென்றால் உங்கள் உழைப்பில் அவர்களுக்கு வளமான வாழ்க்கையை தேடிக்கொடுங்கள். உங்கள் கடமை முடிந்து வரும்வரை நான் காத்திருக்கவும் தயார்!" அவள் கூறியது அவனுக்குள் ஆழமாக சிந்திக்கத் தூண்டியது.

அவ்வாறு நடப்பது சாத்தியம்தானா...?

தேவகி கரைத்து வந்த எலுமிச்சம் பழச் சாற்றின் இனிப்பை ருசித்துப் பருகும் நிலையில் அவனில்லை. வெளிப் படையாகவே பேசிக் கொள்ளும் இந்தக் கௌசியுடனே கடைசி மூச்சு உள்ளவரைவாழக் கிடைத்தால்... அவன் மனம் இடையிலுள்ள தடைகளை யெண்ணி தயங்குகிறது.

"மறக்காமல் உங்க வீட்டு அல்பத்தையும் கொண்டு போங்கள். அன்றைக்கு வந்த போது உங்களப்பா விட்டுட்டுப் போட்டார்.." அதை கௌசியிடமிருந்து வாங்கினான்.

படியிறங்கியபோது எதேச்சையாக விரிந்த அல்பத்தின் நடுப் பக்கத்திலிருந்த படமொன்று இல்லாமற்போயிருந்ததைக்கண்டான்.

'குணாளனின் போட்டோவை கௌசி ஏன் மறைவாக எடுத்துவைத்துக்கொண்டாள்...?' அவனை அடிக்கடி நினைவுபடுத்த இவனிடமிருந்த ஒரே ஆவணம்.

இவனைக் கடந்துசென்ற முச்சக்கர வண்டியின் கூரையிலிருந்த ஒலிபெருக்கி யாழ்ப்பாண முற்றவெளியில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையில் உயிர் நீத்த தமிழர்களின் நினைவாலய திறப்புவிழா குறித்து அறிவிப்புச் செய்தது. இடது காதுமடலின் கீழ் கழுத்தை நோக்கி கீழிறங்கும் தளும்பை தடவிப்பார்த்தான். அன்று தமிழுக்கு எடுத்த பெருவிழாவில் பட்ட வடு அது!

கௌசி சொன்னவற்றைக் கோர்வையாகத் தொடுத்துப்பார்த்தவனுக்கு சரேலென பொறிதட்டியது.

'ஓ...கௌசியின் கடந்த காலவாழ்க்கையில் குறுக்கிட்டவன் ஆருயிர் நண்பன் குணாளனா...!' உள்மனம் குமுறியழுவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

● ● ●

குணாளன்... அவன் எவ்வளவு பெரிய தியாகத்தைப் புரிந்திருக்கிறான். தன்னைப் பிரசவித்த மண்ணின் சுபீட்சத்துக்கா கல்வியைத் துறந்து, குடும்ப உறவுகளை மறந்து போனானே.. வாலிப வயதுக்காதலைக்கூட உதறியிருக்கிறானே யென்பதை உணரும்போது நட்புக்குப் பதில் ஒருவிதபக்தியே அவனில் ஏற்பட்டது.

அவனுடன் சாரணர் அணியில் இருந்தபோது நவாலியிலும் நாகர்கோவிலிலும் அரங்கேறிய மனிதப் படுகொலையின்போது முதலுதவி செய்யப்போனது அழியாத கறையாக இன்னமும்..அப்படியான கோரங்களை கண்டு, கேட்டு, அனுபவித்து செய்வதற்கு எதுவுமில்லையென மனதைக் கல்லாக்கி கையறுநிலையில் வாழும் பலருக்கு குணாளனின் வழியைத்தொடர்வது சாத்தியமில்லை. அதற்கு எ.ஃ.கின் உறுதி வேண்டும்; போகும் பாதையின் முடிவைப் பற்றிய தெளிவு தேவை.

பாலுவிற்குள்ள மிகப்பெருந் துயரம் என்னவெனில் அவன் போராளியாகிய பின்னர் ஒரு தடவையேனும் அவனைச் சந்தித்து அளவளாவ முடியவில்லை. இடையில் காற்றோடுவந்த செய்தியொன்று தேசத்தின் எல்லைகளுக்கு வெளியே அவன் ஆகுதியாகிப்போனான் என்பதுதான். முழு உலகையுமே திரும்பிப் பார்க்கவைத்து வியப்பிலாழ்த்திய அந்தச் சம்பவத்துக் குரியவனின் பெயர், முகவரி மட்டும் அனாமேதயமாக...

அவன் புகழுடல்கூட வீடு வந்து சேராத சோகத்தை அவனின் இரத்த உரித்துக்கள் எவ்வாறு தாங்கிக்கொண்டார்கள்? அவர்களருகே ஓடோடிச்சென்று ஆறுதற்படுத்த மனம் உந்தினாலும் யார்.... எங்கேயிருக்கிறார்களென்பது மூடுமந்திரமாயிருக்கிறதே!

மானுட வாழ்வின் முடிவில் எஞ்சுகின்ற பெயர், புகழைக்கூட வேண்டாது போய்விட்ட அவன் வாழ்வும் முடிவும் புனிதமானது; உன்னதமானது; ஒப்பற்றது.

அவன் கனவுகண்ட வாழ்வை நான் வாழ நினைப்பது. எத்துணைக் கேவலமானது? அவனது நினைவுகள் சதா மனதைப் பிறாண்ட அவன் மனங்கவர்ந்தவளுடன் கைகோர்த்து அமைதிப்பயணம் போகத்தான் இயலுமா...?

"நான் மாட்டேன் - கௌசியை மணந்து என்னால் வாழவேமுடியாது..." வாசலில் வந்துநின்ற தங்கை பிரேமாவிற்கு தமையன் மேசையில் கவிழ்ந்தவாறு விம்முவது விசித்திரமாயிருந்தது.

"அண்ணா... உனக்கென்ன ஆச்சு?"

தலையை உயர்த்தாமலே கண்களைத் திறந்து பார்த்தான். "இந்தப்போட்டோ உங்களோட பழைய கொப்பிகள், புத்தகங்களிடையே கிடந்தது." நிறம் மங்கி செல்லரித்துப் போன அந்தக் கறுப்பு வெள்ளை படத்தை ஆர்வமின்றி நோக்கினான்.

'புலமைப்பரிசில் பரிசளிப்பு விழா' என்றிருந்ததை வெகு பிரயாசையுடன் வாசித்துவிட்டு மறுபக்கம் திருப்பியவன் மூளையில் மின்னல் வெட்டியது. கையில் சான்றிதழோடும் முகம் நிறைந்த பெருமையோடும் நிற்கும் ஐந்து சிறுவர்களில் நடுவில் நின்ற பாலேந்திரனுக்கு வலதுபுறம் முன்வரிசைப்பற்கள் பளிச்சிட கண்களை ஒடுக்கிக் கொண்டு நிற்பது - சந்தேகமேயில்லை அது குணாளன். கௌசி வீட்டில் பார்த்த அதே தோற்றம்! நடந்த வற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்க அவன் கணிப்புகள் யாவுமே தலைகீழாகப்போன உண்மை துலங்கியது. ஒன்றன்மேல் ஒன்றாக விழுந்திருந்த முடிச்சுகள் ஒரேயடியாக அவிழ்பட்ட தெளிவு...

வெளியே அம்மா அப்பாவிடம் உறுதியாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். "பற்றாக்குறையில பரிதவிக்கிற குடும்பத்தில நாங்கள் பெண் எடுக்கத் தயாரில்லையெண்டதை இடிச்சுச் சொல்லிப்போட்டு வாங்கோ. ஒட்டாண்டியாகப் போனபிறகும் அவையின்ரை வாய்க் கொழுப்பு...!"

"அம்மா..." என்றுமில்லாதவாறு அவன் ஓங்கிக்கத்தியதும் திகைத்துத் திரும்பினார்கள்.

"அம்மா, என்னைப் பெத்ததுக்கும ஆளாக்கினதுக்கும் சேர்த்து மனைவியாக வரப்போகிறவளிடம் இவ்வளவு விலையென்று எனக்குப் பெறுமதி குறிச்சிட்டீங்க... பால்மாப் பைக்கற்றிலிருந்து கிலு கிலுப்பை, பென்சில், கொப்பி.... அத்தனைக்கும் சேர்தது மொத்தமாகக் கணிச்சிட்டீங்கள்.


ஆனா நாம் மட்டுமில்லை, எங்கட இனம் - ஏன் இந்த நாடே அந்தக் குடும்பத்துக்கு பட்டிருக்கிற கடன் கொஞ்ச நஞ்சமில்லையம்மா... எவ்வளவு கோடி கொட்டிக்கொடுத்தாலும் தீராத கடனம்மா அது!" மற்றவர்கள் எதுவும் புரியாது கல்லாய்ச்சமைந்திருக்க பாலு அறுதியாகச் சொன்னான்.

"என் உடன் பிறப்புகளுக்கு செழிப்பான வாழ்க்கையைத் தேடிக் கொடுப்பது எனக்கென்று வகுக்கப் பட்ட கடமை. கௌசி காத்திருப்பாள் - நான் எனது கடமைகளை முடித்து அவள் கரம் பற்றும்வரை..." ●



சர்ச்சைக்குரிய பொருளாக, இல்லாவிடில், அது சுவையற்றதாகவும் ஆகிவிடுகிறது. — வில்லியம் ஹேஸ்லிட்

# இலக்கியமும் இதழியலும்



தலைப்பைப் பார்த்ததும் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப்போட நான் விழைவதாகச் சில வாசகர்கள் கருதலாம்.

புகழ்பூத்த ஆங்கில விமர்சகர் மத்தியு ஆர்னல்ட் Mathew Arnold இதழியலுக்கு (Journalism) வகுத்த வரைவிலக்கணம் வருமாறு: "அவசர கோலம் பூண்ட இலக்கியம்" (Journalism is literature in a hurry)

அவசரத்தைப் பற்றிப் பெரும்பாலும் எல்லோரும் உடன்படுவர். செய்தி சுடச்சுடக் கிடைக்காவிடின், அது ஆறின கஞ்சிதான். ஆனால் இதழியலுக்கு இலக்கிய அந்தஸ்து வழங்குவது பற்றித்தான் கருத்து வேறுபாடு எழலாம்.

இலக்கியம் என்ற பதம் ஆங்கிலத்தில் எதனைக் குறிக்கின்றது என்பதனை ஆராய்தல் தெளிவை ஏற்படுத்தும். 'Literature' (இலக்கியம்) என்ற பதம்,14ஆம் நூற்றாண்டளவில் ஆங்கிலத்தில் புழக்கத்திற்கு வந்தது. அதன் இலத்தீன் வேர்ச்சொல் 'எழுத்து' (Letter of the alpha bet)எனப் பொருள்படும். இவ்வாறு நோக்கின் எழுத்தில் அல்லது அச்சில் உள்ள சகலதையுமே 'Literature' என்ற பதத்துள் அடக்கிவிடலாம். எப்பொருளைப்பற்றியும் அச்சிலுள்ளது 'Literature' தான்.

14 ஆம் நூற்றாண்டில், பிரஞ்சு மொழியின் பாதிப்பின் ஊடாக ஆங்கிலத்தில் புழக்கத்திற்கு வந்த 'Literature' என்ற பதம் வாசிப்பின் மூலம் மேல் வர்க்கத்தினர் பெற்ற அறிவையே குறிப்பிட்டது. 17ம் நூற்றாண்டு வரை இப்பதம் எழுத்து வாசனையை 'Literacy'குறித்தது. 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து, இப்பதத்தின் அர்த்தங்கள் விரிவடைந்து எழுதுதல் (Writing) என்ற நடை முறையையும் 'Practice, Profession' என்ற அர்த்தங்களையும் குறிக்கத் தொடங்கியது. ஆனால் இப்புது அர்த்தங்கள் எல்லாவகையான எழுத்துக்களையும் நூல்களையும் தம்மகத்தே அடக்கின.

19ம் நூற்றாண்டில் தான் 'Literature'என்ற பதம் சிலவகை எழுத்துக்களையும் நூல்களையும் குறிக்கத் தொடங்கிற்று. படைப்பிலக்கியம் அல்லது ஆக்க இலக்கியம் (சிறுகதை, நாவல், கவிதை) என்ற ஓர் வட்டத்துக்குள் அதன் அர்த்தம் குறுக்கப்பட்டது.

ஆனால் இன்று இத்தகைய அர்த்த குறுக்கத்தை எதிர்த்து நவீன இலக்கியக் கோட்பாட்டாளர் எல்லா வகை எழுத்துக்களையும் நூல்களையும் உள்ளடக்கவல்ல எழுத்து (Writing) தொடர்பியல் (Communication)ஆகிய எண்ணக்கருக்களை முன்வைத்திருக்கின்றனர். இந்தக் கருத்துக்களின் படி, படைப்பிலக்கியம், விவரண எழுத்து (documentary or descriptive Writing) என்று வேறுபடுத்துவது தவறு. புனை கதை சார்ந்த எழுத்துக்களிலும் சரி, விவரணம் சார்ந்த எழுத்திலும் சரி, ஏற்றத்தாழ்வு காணப்படும் தூரத்தைப் பொறுத்தவரை. ஆனால் இருவகைகளும் மொழியையே தமது மூலப் பொருளாகக் கொண்டுள்ளன. இவ்வாறு நோக்கின் மொழியைப் பயன்படுத்தும் அம்சத்தில் இலக்கியமும், இதழியலும் இரத்த உறவினர். இலக்கியம் என்பது விஷேட மொழியல்ல. அது விஷேட பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட மொழியே என்பது நவீன இலக்கியக் கோட்பாட்டாளரின் கருத்து (literature is language in a condition of specia use)

இலக்கியம் என்பது வாழ்வு பற்றிய விமர்சனம்(literature is criticism of life)என்றார் மத்தியு ஆர்னல்ட். ஹென்றி ஜேம்ஸ்( Henry james)இதழியல் என்பது ஒரு கணத்தைப் பற்றி அக்கணத்திலேயே விமர்சிப்பதாகும் என்றார். (jouranalism is criticism of the moment at the moment)இவ்வாறு இரண்டையும் வேறுபடுத்துவதும் ஓர்வகை மயக்கத்தை ஏற்படுத்தலாம். இலக்கியம் என்பது ஆழமான, நிலையான விடயங்கள் பற்றியதாகவிருக்க, இதழியலானது நிலையற்ற மேம்போக்கான விடயங்களைப் பற்றியது என்ற தொனி ஜேம்ஸின் கூற்றில் தொக்கி நிற்கிறது.

இங்கிலாந்திலே, இதழியல் வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்த முன்னோடிகளின் வரலாற்றை அறிந்தால், இப்பிரச்சினை குறித்து மேலும் தெளிவு ஏற்படும். 'ரொபின்சன் குருசோ' (Robinson Crusoe) என்ற நாவலை எழுதிய டானியல் டீபோ (Daniel Defoe)ஓர் சஞ்சிகை நடத்தியதுடன் செயல் முனைப்பான இதழியலாளராகவும் விளங்கினார். புதிய இலக்கிய வடிவமான நாவலை அற்புதங்கள் நிறைந்த பழைய வடிவமான 'ரொமான்சி'லிருந்து (Romance) வேறுபடுத்திய பண்பே நாவல் அன்றாட யதார்த்த உலகில் வேரூன்றியிருந்தமைதான். இப்பண்பை நாவலுக்குப் பாய்ச்சியதில் இதழியலுக்குப் பெரும் வரலாற்றுப் பங்குண்டு.

இந்த நூற்றணடின், ஹெமிங்வே (Hemingway),கிரேன் (Crane)போன்ற எழுத்தாளர்கள் ஒரு காலகட்டத்தில் இதழியல்துறையோடு நெருங்கி உறவாடி, போர்க்களச் செய்தியாளர்களாகக் கடமையாற்றினார்கள். இந்த உறவின் பாதிப்பை ஹெமிங்வேயின் சிறுகதைகளின் நடையில் காணலாம். அவற்றில் காணப்படும் இறுக்கமான தந்திப் பாணி நடை அவருடைய பத்திரிகை அனுபவத்தின் அறுவடையே. இந்த நடையும் அவரது வாழ்க்கைத் தரிசனமும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

போரைப் பின்னணியாகக் கொண்ட Red Badge of courage என்ற நாவலையும் அமெரிக்க உள்நாட்டுப் போரையும் பின்னணியாகக்கொண்ட சில சிறுகதைகளையும் எழுதிய கிரேன், போரில் நேரடியாக போர்வீரனாகப் பங்குபற்றியதில்லை. அமெரிக்க உள்நாட்டுப போர் நடந்து முடிந்த சில ஆண்டுகளுக்குப் பின்னரே அவர் பிறந்தார். இப் படைப்புக்கள் வெற்றிகரமாக அமைவதற்கு அவருக்குக் கை கொடுத்து உதவியது அவர் பத்திரிகைகளின் போர்க்கள செய்தியாளராக விருந்து பெற்ற அனுபவமே.

இதழியலின் இலக்கியத் தன்மைகளை வற்புறுத்தும் பொருட்டு, ரொம் வூல்ப் (Tom Wolf)என்பவர் புதிய இதழியல் (The New Journalism).என்ற தொகுப்பை வெளியிட்டு, சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும் சிறப்புக் கட்டுரைகளின் (Features) ஆக்க இலக்கியப் பரிமாணத்தை நன்கு வெளிக்கொணர்கிறார். தனது முன்னுரையில், வூல்ப் இதழியலுக்கும் இலக்கியத் திற்குமிடையே உள்ள நெருங்கிய உறவுகளைச் சான்றாதாரங்களோடு நிறுவுகிறார்.

இதழியலுக்கும் இலக்கியத் திற்குமிடையே உள்ள உறவிற்கு இன்றும் கூட சான்றுகள் உள. ரூமன் கப்போட் (Truman Capote) என்ற அமெரிக்க நாவலாசிரியர் கொலைகாரன் ஒருவனைப் பற்றி ஓர் சஞ்சிகையில் தொடர் கட்டுரைகள் எழுத முனைந்ததன் விளைவே In Cold Blood என்ற அவரது வலுமிக்க நூலாகும். யதார்த்தத்தில் வேரூன்றிய இப் படைப்பை 'Faction' என்பர் விமர்சகர்கள். இச் சொல்லாக்கம் Fact (யதார்த்தம்) என்ற சொல்லினதும் Fiction என்ற புனைகதையைக் குறிக்கும் சொல்லில் உள்ள பின் மூன்று எழுத்துக்களினதும் (ion) இணைப்பே. இதற்கு ஆங்கிலத்தில் புழக்கத்திலுள்ள இன்னொரு பெயர் documen tary fiction (விவரணம் சார்ந்த புனைகதை)

'ஆக்க இலக் கியம்,' 'அவசர கோலம் பூண்ட இலக்கியம்' என வேறுபடுத்து வதை விடுத்து, மொழிப் பயன்பாடு அதனூடாகப் பெறப்படும் தரிசனம் என்ற அடிப்படையில் நோக்கினால், ஜோர்ஜ் ஓர்வெலின் (George Orwell) கூற்றோடு நாம் உடன்படலாம். நல்ல உரைநடை சாளரக் கண்ணாடி போன்றது என்றார் அவர் (Good prose is like a window pane) இதுவே எழுத்தின் குறிக்கோள் என்பதை நல்ல எழுத்தாளர்கள் உணர்ந்திருந்தனர். அவர்களுடைய படைப்புக்கள் ஈற்றிலே இலக்கியமாகக் கருதப்பட்டால் என்ன, இதழியலாகக் கருதப்பட்டால் என்ன, ஓர்வெல் நாவலாசிரியனாகவும் (1984, விலங்குப் பண்ணை) இதழியலாளராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நூற்றாண்டிலே, இதழியலாளர் எனச் சிலரால் ஏளனத்தோடு நோக்கப்படுபவர்களின் சில படைப்புக்களை நோக்கினால், நிலைத்து நிற்கக்கூடிய ஆக்க இலக்கியம் தரும் அனுபவத்தை அவை எமக்கு அளிப்பதை நாம் உணரலாம்.

இங்கு விரிவாக ஆராயாமல், ஓர் பட்டியலை மட்டும்தான் தரலாம் ரஷ்யப் புரட்சி பற்றி ஜோன் ரீட் எழுதிய உலகத்தை உலுக்கிய பத்து நாட்கள் (Ten Days That Shook The World By John Reed), சீனப்புரட்சியைப் பற்றி எட்கார் ஸ்னோ (Edgar Snow) எழுதிய Red Star Over China, வில்லியம் ஹின்டன் (William Hinton) எழுதிய Fanshen, ஜப்பானில் அணுகுண்டு எற்படுத்திய நாசங்களைப் பற்றி ஜோன் ஹேர்சி (John Hersey) எழுதிய Hiroshima இவை அவசரமே கோலமாகக்கொண்ட இதழியலின் தேவைகளிலிருந்து எழுந்தாலும், கனமான இலக்கிய பெறுமதி மிக்கவை; நிலைத்து நிற்கக்கூடியவை.

என்னைப் பொறுத்தவரையில் இந் நூல்கள் ஆக்கத்தையும் அவசரத்தையும் இணைப்பதில் வெற்றியீட்டியுள்ளன. எனவே இரத்த உறவினதான இதழியல் குறித்து, இலக்கியம் வெட்கித் தலைகுனிய வேண்டியதில்லை. தீட்டுப் பொருளாகக் கருதவேண்டியதுமில்லை

நன்றி:- செங்காவலர் தலைவர்
**இயேசுநாதர்**

## பகலைத் தேடி

அன்றும் இன்றும் இருண்டபடி
கிடக்கிறது வானம்.
விடியற்காலை கோழி கூவாமலும்
ஆலய மணி ஒலிக்காமலும்
சூரியனின் மாய வலையில் புல்லரிக்கிறதெம் மேனி
இருண்ட படி கிடக்கும் வான வெளியில் இங்கு
சூரியனைக் களவெடுத்தவர் யார்?
இரவில் வரும் நிலா ஒளியை மறைத்தவர் எவர்?
ஒவ்வொரு மனிதனோடு சுதந்திரம் கொண்டாடும்
தென்றலைத் கூட தடுத்தவர் தான் யாரோ?
நாம் விடிவு என்பதைக் கேட்க ஏன்? இங்கு
நேரர்வே கூட எமக்காய் வருகை?
இத்தனை மத்தியில் இப்படி இருப்பதால் தான்
பகலில் நடப்பதொன்றும் எமக்குத் தெரியாது?
வாழ்வுக்கு அறிகுறியற்ற ஜடங்களாக
செம்மணியும் அந்த உப்பு வெளியும் ஐயோ
வென அவர்கள் குளறிய போது கூட
செல்ல முடியாது தவித்தது.
இரவிலே வாழ்வதால்த் தான்
இன்று திடீரென .........
பகல் என சிரிக்கிறார்கள் பலர்.
விடிவு நாளை என்கிறார் சிலர்.
பலன் எதுவையும் தராமல் அவர்கள்.

ம.யோண்சன்

## புரியாத புதிராய்

என் முகம் முட்டிப்போகும்
உன் பெருமூச்சு பற்றி
நான் பேசப்போவதில்லை
அதனை அறியும்
என் ஆன்மா!

உன் விழிகள் விளிக்கும்
விருப்புக்கள் பற்றி
விளக்கம் தேவையில்லை
அவையாவும் எனக்கு
அத்துப்படி!

காலாகாலமாய் காத்துக்கிடக்கும்
காது மடல்களின்
எதிர்பார்ப்பு
அந்த ஒற்றைச் சொல்லென்பது
ஒன்றும் புதிரல்ல!

சதா நீளும்
உன் கனவுகளின் சங்கிலியில்
நிச்சயம் நானே
தொங்கிக் கொண்டிருப்பேன்!

மௌனமாய் மனசுக்குள்
அமிழ்ந்துள்ள உன் அத்தனை
அசைவுகளையும் அகங்கொள்ளும்
ஆற்றல் எனக்குண்டு.

எனக்குத் தெரியும்
எல்லாம் தெரியும்....
ஆனால் ஒன்றுமட்டும்
அறவே தெரியவில்லை!.

சேடம் இழுக்கும் இந்த
தற்காலிக சமாதானத்தை நம்பி
"துண்டு கொடுக்குமாறு"
எதிர்பார்க்கும் உன்
மானசீகமான மர்மத்தைப் பற்றி!...
அறவே தெரியவில்லை.

ம.இ.மகன்




## கெட்டிக்காரச் சிறுவர்கள்



வானம் இருண்டு கறுத்து வந்தது. கொஞ்ச நேரத்தில் மழை கொட்டப்போகும் அறிகுறிகள் தென்பட்டன. நேற்றும் இதேநேரம் நல்ல மழை கொட்டிவிட்டது. வகுப்பறைகள் நனைந்திருந்தன. மண் சுவர் ஒழுக்கு விழுந்த இடங்களில் பொள்ளல் பொள்ளலாக குழி விழுந்து கரைந்திருந்தது.

போரினால் அந்தப் பாடசாலையும் கிராமமும் கொஞ்சக் காலம்தான் இயங்க ஆரம்பித்துள்ளன.

பதினோராம் வகுப்பு வரையுள்ள அப்பாடசாலை தற்காலிக கொட்டகையில்தான் இயங்கிவருகிறது. வசதிகள் குறைந்த அப்பாடசாலையில் தான் தீபனும், குமாரும் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் பெரிய வகுப்பு மாணவர்கள்.

குமார் முன்னர் போலில்லாமல் தீபனால் நெறிப்படுத்தப்பட்டு விட்டான். இருவரும் நல்ல திறமைசாலிகளாகவும் நல்ல ஒழுக்கமும் அடக்கமும் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் அதிபர் ஆசிரியர்களின் விருப்பத்துக்கு உரியவர்களாக இருந்தார்கள்.

### முயற்சி

காலையில் மற்றவர்கள் வருவதற்கு முன்னரே வந்து பாடசாலை தொடங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து முடித்துவிடுவார்கள்.

இன்று காலையும் வழமைபோலவே வந்துவிட்டார்கள்.

சுவர்கள் கரைந்திருப்பதைக் கண்டு கவலைப்பட்டார்கள். ஆனாலும் மனம் சோராமல் சுவரில் நனைந்து கிடந்த பகுதிகளுக்கு மண்பூசி மெழுகினார்கள். நனைந்துகிடந்த மேசை கதிரைகளைத் துடைத்து காயவிட்டார்கள். பாடசாலை வளவையும் கூட்டித் துப்பரவாக்கிவிட்டு, கை கால்களைக் கழுவி னார்கள். அவர்களுக்கு மனம் மகிழ்வாக இருந்தது.

அதிபர் வேர்க்க விறுக்க மிதி வண்டியில் வந்து சேர்ந்தார். இனிமேல் தான் ஒரு ஆசிரியரும் ஒரு ஆசிரியையும் வந்து சேர்வார்கள். இந்த மூவரும் தான் பாடசாலையின் ஆசிரியர் குழாம்.

அங்கே தங்கும் வசதிகள் எதுவும் இல்லை. அதனால் அவர்கள் தூர இடங்களிலிருந்து மிதி வண்டியில் வந்து போவார்கள். சில வேளைகளில் பிந்தியும் வருவார்கள். இது வழமை. அப்போதுதான் மாணவர்களும் ஒருவர் இருவராக வந்து கொண்டிருந்தனர்.

முகத்தில் வடிந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்ட அதிபர் பாடசாலையைச்சுற்றி வந்தார். சுவர்கள் மெழுகப்பட்டிருப்பதைக் கண்டு அதிபர் ஆச்சரியப்பட்டார்.

பெற்றாருக்கு இவ்வளவு அக்கறையா? எனத் தனக்குள் வியந்துகொண்டார்.

அதிபர் தீபனையும், குமாரையும் அழைத்தார். இருவரும் அவர் முன் அடக்க ஒடுக்கமாக பணிவுடன் நின்றனர்.

தாங்கள் செய்தது தப்போ எனத் தமக்குள் எண்ணிக்கொண்டனர். அதிபரின் கைப்பிரம்பு அவர்களின் கண்முன்னே நிமிர்ந்து நின்றது.

"பெற்றார் ஆரும் வந்தவையே?"

"இல்லை சேர்"

"அப்ப ஆர் உதெல்லாம் செய்தது?"

"நாங்கள் தான் சேர்"

அவர்களின் பதில் தொண்டைக்குள் சிக்கித் தடுமாறியது.

அதிபருக்கு தலை சுற்றுவது போல இருந்தது. இந்தச் சிறுவர்களுக்கு இருக்கும் பற்று எனக்கு............ அவர் ஒரு கணம் தன் தலையைத் தாழ்த்திக்கொண்டார்.

தீபனும், குமாரும் இன்னமும் தலை நிமிரவில்லை.

அதிபர் அவர்களின் முதுகில் தட்டி "உங்களைப்போல உணர்வுள்ள பிள்ளைகள்தான் இந்த நாட்டுக்குத்தேவை" என்றார்.

உறைந்து கிடந்த இரத்தம் சீறிப் பாய்ந்தது போலிருந்தது அவர்களுக்கு.

அதிபரின் முகம் மலர்ந்தது.

காலைக் கூட்டத்தில் எல்லா மாணவர்களின் முன்னேயும் அவர்கள் பாராட்டப்பெற்றனர்.

அந்தக் காட்சி மின்னலிட வானத்தைப் பார்த்தான் தீபன். குமார் இண்டைக்கும் மழை பெய்தால் எல்லாம்..........

"நாளைக்கும் இதேவேலையைத் தொடருவம்" என்றான் குமார்.

"எத்தனை நாளைக்கு?"

"மழை நிற்கும் வரைக்கும்"

"எனக்கொரு யோசனை வருகுது"

"என்னது"

"அதிபரிட்டைக் கேட்டுப் போட்டு வீடு வீடாய்ப் போய் கிடுகு வாங்குவமே?"

குமார் தீபனைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய் தென்னையள் எல்லாம் அழிச்சுப் போட்டாங்கள் என்றோ? கிடைக்கிறதை வாங்கிவந்து .........."


"வாங்கி வந்து?"

"ஒழுகிற இடங்களுக்குச் செருகுவம்."

"ஓம் மச்சான் உது நல்ல யோசினைதான் வா அதிபரிட்டைக் கேட்பம்"

இருவரும் அதிபரிடம் சென்றார்கள்.

**முருகு. பாரிமகன்**




## வாரம் ஒரு குறள்



*தொழிலொன்றையோ செயலொன்றையோ செய்வதற்கு தொடங்கிவிட்ட பின்னர் இடைநடுவில் இது நமக்கு பொருந்துமா... இதனால் நமக்கு இலாபம் கிடைக்குமா.. என்று பின்னடிப்பதும் அதனை கைவிடுவதும் மிகுந்த நஸ்ரத்தையும் துன்பத்தையும் தரும். அதேவேளை மிகுந்த முட்டாள்தனமான செயலும் அதுவாகவே இருக்க முடியும்.*

*அதனால்தான் "எண்ணித்துணிக கருமம்" என்று சொல்லப்படுகின்றது. நமக்கு பொருந்தாத எதனையும் நாம் செய்யமுற்படுவது என்பது நம்மை பெரும் துன்பத்தில் தான் தள்ளிவிடும். அந்த துன்பத்தை போக்குவதற்காக கூடாத. தீயவழிகளை நாடுவது என்பதும் மாபெரும் குற்றமாகவே கருதப்படுகின்றது. இந்த குற்றத்திற்காக ஊரும் உறவும் ஏன் இந்த உலகமே நம்மை மிகவும் இழிவான நிலையிலேயே வைத்துப் பார்ப்பார்கள். இதனைத்தான்.*

*"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு."*

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 14

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | ர் | பி | ளை | ள | தி | க |
| வ | ச் | ல | ச | லை | க | தி |
| டை | தி | ப | த் | ந் | தீ | கே |
| ச் | ல் | த | மு | ம | தி | ர |
| சா | ரை | பா | கா | ள் | கு | ச |
| ளை | ரீ | ம் | வி | செ | ர் | தி |
| டை | ர | ம் | பி | ளி | வ | மீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 12 இன் விடைகள்

01. மோட்டார் வண்டி,
02. விமானம்.
03. புகையிரதம்.

01. மார்கழி.
02. ஐப்பசி.

### சொற்சிலம்பம் - 12 இன் பரிசுக்குரியவர்

பா. ரமணன்,
இல.08, இலுப்பையடி,
யாழ்வீதி, வவுனியா.

### சொற்சிலம்பம் - 12 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சி.பிரியங்கா,
தரம் - 06
மானிப்பாய்.

02. எ.வினோஜா,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

03. த.சுயானந்,
தோணிக்கல்,
வவுனியா.

04. மு.கிருசாந்,
நானாட்டான்,
மன்னார்.

05. பி.சாம்சன்,
கணேசபுரம்,
கிளிநொச்சி.


06. க.குயிலினி,
யோகபுரம்,
மல்லாவி.

01. மீன் வகைகள் மூன்று?
01) ..........................................
02) ..........................................
03) ..........................................


02. காட்டு மரங்கள் இரண்டு?
01) ..........................................
02) ..........................................

பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
..........................................

*சொற்சிலம்பம் -14*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*



**கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**



# ரஜீவ் - பிரபா சந்திப்பு
# எழுதப்படாத ஒரு ஒப்பந்தம்

"**உங்களது** இயக்கத்திற்கும், பொதுவாக தமிழ் மக்களுக்கும் ஜெயவர்த்தனாவினால் நம்பிக்கையில்லை என்பது எமக்கும் தெரியும். எமக்கும் அவர் மீது நம்பிக்கையில்லைதான். என்றாலும் அவர் மீது கடும் அழுத்தம் பிரயோகித்து இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றோம். மாகாண சபைத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்தாலும், பின்பு பேச்சுக்களை நடத்தி தமிழரின் சுயாட்சி அதிகாரத்தைக் கூட்டலாம் அல்லவா? அத்தோடு இந்த மாகாணசபைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமல்ல. அதற்கு காலம் தேவை. அதற்கு முன்னராக, வட- கிழக்கில் ஒரு இடைக்கால அரசை நிறுவலாம். அதில் உங்களது அமைப்பிற்கு பிரதான பங்கு வழங்கலாம். இந்த இடைக்கால அரசு சம்பந்தமாக நான் உங்களுடன் ஒரு இரகசிய உடன்பாடு செய்துகொள்ளவும் ஆயத்தமாக இருக்கின்றேன்." என்றார் ரஜீவ் காந்தி.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடவேண்டாம். தமிழர் தாயகத்தில் புலிகளின் நிர்வாக ஆட்சியை நிறுவுவதற்கு இது அருமையான சந்தர்ப்பம். இந்தியப்பிரதமருடன் ஒரு இரகசிய உடன்பாடு. இந்த யோசனையை நிராகரிக்கவேண்டாம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவேண்டாம். அதற்கு முன்னராக ரஜீவ் - பிரபா ஒப்பந்தம் வரப்போகிறது. இதனைப்பகிரங்கப் படுத்தத்தேவையில்லை. இரகசியமாகவே வைத்துக்கொள்ளலாம்." என்றார் அமைச்சர் பண்டுருட்டி. இதெல்லாம் முன்கூட்டியே ஒத்திகை செய்யப்பட்ட நாடகம் போல எமக்குத் தோன்றியது. பிரபாகரனுக்கு எதிலுமே நம்பிக்கையில்லை. எதிலுமே ஆர்வம் காட்டவில்லை. ஆனால் பண்டுருட்டி மிகவும் ஆர்வத்துடன் ரஜீவ் -பிரபா ஒப்பந்தத்திற்கு ஒரு வடிவம் கொடுக்க முயன்றுகொண்டிருந்தார்.

வட- கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக ஆட்சி நிறுவப்பட்டு, அதில் விடுதலைப்புலிகளுக்கு பெரும்பான்மை பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென முடிவெடுக்கப்பட்டது. ஈழத்திலுள்ள எல்லாப் போராளி அமைப்புகளுக்கும் இடைக்கால ஆட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென ரஜீவ் கேட்டுக்கொண்டார். பிரபா அதற்கு இணங்கவில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஈரோஸ் அமைப்புக்கும் மட்டும் குறைந்த அளவில் பிரதிநிதித்துவம் வழங்குவதென இணக்கம் காணப்பட்டது. இடைக்கால நிர்வாக ஆட்சியின் கட்டமைப்பு,அதிகாரம், செயற்பாடு பற்றி வாக்குறுதி அளித்தார். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், சிங்கள அரசாங்கம் புதிதாக காவல் நிலைகளைத் திறக்க கூடாதென்றும் பிரபாகரன் கேட்டுக் கொண்டார்.அதற்கும் ரஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களிடமிருந்து கட்டாய வரி வசூலிப்பு செய்வதாக ஜெயவர்த்தனா அரசு புலிகள் மீது குற்றம் சுமத்துகிறது. வரி வசூலிப்பை நிறுத்தமுடியாதா எனக்கேட்டார் ரஜீவ்காந்தி. அந்த வரிப்பணம் எமது இயக்கத்தின் நிர்வாகச் செலவுக்கே பயன்படுத்தப் படுகிறது. அந்தத்தொகையை இந்திய அரசு தருவதானால் வரி அறவிடுவதை நிறுத்தலாம் என்றார் பிரபாகரன். மாதாந்தம் எவ்வளவு தொகைப்பணத்தை வரியாகப் பெறுகிறீர்கள் என ரஜீவ் கேட்க, இலங்கை நாணயப்படி ஒருகோடி ரூபா வரை திரட்டுகிறோம் என்றார் பிரபா. "அப்படியானால் இந்திய நாணயப்படி ஐம்பது இலட்சம் ரூபா வரை வரும். அந்தப் பணத்தை நான் கொடுக்கிறேன்" என்றார் ரஜீவ்.

இறுதியாக ஆயுதக் கையளிப்பு விவகாரம் எழுந்தது. "ஆயுதங்கள் முழுவதையும் கையளிக்குமாறு நாம் கேட்கவில்லை. நல்லெண்ண சமிக்ஞையாக சிறு தொகை ஆயுதங்களைக் கையளித்தால் போதும். பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பாக இந்திய அமைதிப்படை வட- கிழக்கில் செயற்படும். சிங்கள ஆயுதப்படைகளுடன் போர்நிறுத்தம் தொடர்ந்தும் இருக்கும். இந்த சூழ்நிலையில் உங்களுக்கு போராயுதங்கள் தேவைப்படாது அல்லவா?" என்றார் இந்தியப் பிரதமர். பிரபாகரன் பதிலளிக்கவில்லை. ஆழமாகசிந்தித்தப்படி இருந்தார். திடீரெனக் குறுக்கிட்டார் பண்டுருட்டியார். "எதற்காக யோசிக்க வேண்டும்.இந்தியா கொடுத்த ஆயுதங்களில் பழைய, பாவிக்கமுடியாத, துருப்பிடித்த ஆயுதங்கள் சிலவற்றை கொடுத்தால் போச்சு" என்றார். "இந்தியா கொடுத்த ஆயுதங்கள் எல்லாம் அப்படித்தான்" என்று பிரபாகரன் கிண்டலாக பதிலளித்தார். பிரபா, "பரவாயில்லையே, அதில் சிலவற்றைக் கொடுங்கள். தேவை ஏற்படும் பொழுது இந்திய அரசு புதிதாக ஆயுதங்களை தரும் அல்லவா?" என்றார் அமைச்சர் பண்டுருட்டியார். தான் கூறியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ரஜீவிடம் சொன்னார். அதை ஆமோதிப்பதுபோல பிரதமரும் தலையசைத்தார்.

அப்பொழுது அதிகாலை இரண்டு மணியிருக்கும். அன்று காலை ஒன்பது மணியளவில் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்பட இருந்தார் ரஜீவ்காந்தி. பிற்பகல் மூன்று மணிக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாக இருந்தது. புலிகளின் தலைவர் பிரபாவுடன் ஏதோ ஒரு சுமுகமான இணக்கப் பாட்டிற்கு வந்ததுபோல மகிழ்ச்சி யுடன் காணப்பட்டார் ரஜீவ். பிரபாகரனுக்கு மனதில் மகிழ்ச்சி இல்லை. அவரது முகத்தில் அது தெளிவாகத் தெரிந்தது. ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டது போன்று பண்டுருட்டி யார் திருப்தியுடன் தென்பட்டார். தூக்கமின்மையால் எல்லோருமே சோர்ந்து போயிருந்தோம். கூட்டம் முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது. அப்பொழுது நான் அமைச்சர் பண்டுருட்டியிடம் கேட்டேன், "ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் என பல விடயங்களை கதைத்தோம். பிரதம மந்திரியும் பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார். இதை எல்லாம் சுருக்கமாக எழுத்தில் இட்டு, அவரிடமிருந்து கைச்சாத்துபெற்றால் என்ன?" என்றேன்.

பண்டுருட்டியார் சிறிது நேரம் யோசித்தார். "இந்த இரகசிய உடன்பாட்டில் சர்ச்சைக்குறிய பல விடயங்கள் இருக்கின்றன அல்லவா? பண விவகாரம் இருக்கிறது. ஆயுதக் கையளிப்புப் பிரச்சினை இருக்கிறது. இதெல்லாம் அம்பலத்திற்கு வந்தால் இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும் அரசியற் சூறாவளியே ஏற்படும். உங்களுக்கு பிரதமரில் நம்பிக்கையில்லையா? இது ஒரு Gentlemen Agreement. இரு பெரும் மனிதர்களின் எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கட்டுமே?" என்றார் அமைச்சர். ரஜீவ் காந்திக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொன்னார்.

"நீங்கள் எதற்கும் கவலை கொள்ளத்தேவையில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நான் நிறைவேற்றுவேன். அமைச்சர் சொல்வது போன்று இது ஒரு எழுதப்படாத Gentlemen Agreement ஆக இருக்கட்டும்." என்றார் ரஜீவ்காந்தி. இறுதிக் கட்டத்தில் நான் அவருடன் முரண்பட விரும்பவில்லை. முடிவாக எமது தடுப்புக் காவலை அகற்றி, அவரை தமிழீழம் அனுப்புவதற்கு உடன் ஒழுங்கு செய்வதாக உறுதி அளித்தார் ரஜீவ்.


ரஜீவ் காந்தியின் இல்லத்திலிருந்து அசோக்கா விடுதிக்கு நாம் போய்ச்சேர அதிகாலை மூன்று மணியாகி விட்டது. "அண்ணா, இருந்து பாருங்கோ, இந்த இரகசிய ஒப்பந்தம் வாக்குறுதிகளும் என்றுமே நிறைவேறப்போவதில்லை. இதெல்லாம் ஒரு ஏமாற்று வித்தை என்று விரக்தியோடு கூறிவிட்டு தனது அறைக்குள் நுழைந்தார் பிரபாகரன்.

எனது அறைக்குள் சென்றபோது, விழித்தபடி காத்திருந்த திலீபன் விடியும் வரை என்னைத் தூங்கவிடவில்லை. ரஜீவ் - பிரபா சந்திப்பு பற்றியும், இருவருக்கும் மத்தியில் செய்துகொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் பற்றியும் விபரமாக திலீபனுக்குச்சொன்னேன். மிகவும் ஆர்வமாக கேட்டுக் கொண்டிருந்தான். "அண்ணன் என்ன சொல்கிறார்" என்று கேட்டான். "பிரபாவுக்கு திருப்தி இல்லை. நிறைவேறப்போவதில்லை என்று உறுதியாகச் சொல்கிறார்" என்றேன்.

ஆழமாக சிந்தித்த படியிருந்த திலீபன், "அண்ணை சொல்வதுதான் நடக்கும்" என்றான். உண்மையில் அப்படியேதான் நடந்தது. ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக அரசும் உருவாக்கப்படவில்லை.

தலைவர் பிரபாகரனுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி நிறைவேற்றவில்லை என்பதை உணர்ந்த திலீபன் ஆத்திரமடைந்தான். இந்திய அரசு செய்த வரலாற்றுத்தவறை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கத்தோடு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினான். இறுதியில் தனது உயிரை அர்ப்பணித்து உலகிற்கு உணர்த்தினான். எழுதப்படாத ரஜீவ் -ஒப்பந்தம் பூகம்பமாக வெடித்து,தமிழீழத்தில் ஒரு பேரெழுச்சியை உண்டு பண்ணியது.

நன்றி :- விடுதலை



# திருக்குறளின் சிறப்பு

திருக்குறள் பயில்தொறும் இன்பம் தரும் நூல் ஒரு முழுதுறம் அறநூல். இனிய தமிழ் எளிய நடை. உள்ளம் கொளத்தக்க குறுகிய அளவு. இரு பொருள் படாத தெளிந்தநடை ஐயத்தின் நீங்கிய துணிவு. இனம் மொழி மதம் சார்பற்ற தன்மை. கால வெள்ளத்தில் அழியாத நீதி. ஓரின ஒழுக்கம் பேசாமல் உலக ஒழுக்கம் பேசிய தன்மை. வீட்டையும் நாட்டையும் பிணைத்த பெட்டி. இருவகைக் காதலையும் எடுத்தும் காட்டும் இனிய சால்பு. குற்றம் காட்டுதல் - குற்றம் கடிதல் நன்றின்பால் உய்தல் ஆகிய நிகழ்த்தும் ஆற்றல். இவ்வாறு அத்துணை எத்தனையோ சிறப்புக்கள் அடங்கிய நூலே திருக்குறள்.

சிற்பிக்கு சிலை வடிப்பதே நோக்கம். உழவனுக்கு காடுகளைக் களனியாக்குவதே நோக்கம். திருவள்ளுவருக்கு மனிதனை உள மனித சமுதாயத்தை வளர்ப்பதே நோக்கம். இத்தகைய சிறப்புக்களை பெற்ற குறளின் பெருமை பற்றி உலக அறிஞர்கள் போற்றிப் பாராட்டி உள்ளனர்.

இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற டால் சுடாய் இயேசுநாதரின் அறிவுரையைவிட உயர்ந்ததாகவும் உளவியல் நுட்பம் சார்ந்ததாகவும் குறள் காணப்படுகிறது என்றார். காந்தியடிகளின் உலகம் போற்றும் அறப் போராட்ட நெறிக்குத் திருக்குறள் அடியெடுத்துக் கொடுத்தது. செருமானா மெய்யியல் மேதை, மன்னுயிர்க்கு அன்பர் சுவைட்சர் பகவத் கீதையும் திருக்குறளையும் நன்கு கற்றார். திருவள்ளுவரின் சிந்தனை எல்லாம் இவ்வுலக வாழ்வு பற்றியதாக இருந்தமையால் திருக்குறளே சிறந்த நூல் என்றார். மருத்துவர் ரோடரிக் கின்ட்லி எனும் மேலைநாட்டு அறிஞர் "இன்னா செய்யாமை" அதிகாரக் குறளைப் படித்தே தாம் அதில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகிறார்.

உலக அறிஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்த குறள்கள் நம் இளைஞர்களையோ, மக்களையோ இழுக்காதது ஏன். சீனத்தில் கன் பூசியு கிரேகத்தில் சோக்ரட்டிசு, பிரெஞ்சு தேசத்தில் ரூஸ்சோ, சோவியத்தில் மார்க்சிசம் புரட்சியை - மாற்றத்தை விளைவித்ததைப்போலத் தமிழ் மண்ணில் தமிழ் நிலத்தில் திருவள்ளுவரின் சிந்தனைகள் ஏன் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இதற்குக் காரணம். திருக்குறள் நெறிக்கு எழுத்தில் உணரக் கண்டோம். ஆனால் வாழும் வாழ்க்கையில் உணரச்செய்யத் தவறிவிட்டோம். எனவே திருக்குறளை வாழ்வியல் நூலாக மாற்றி வெற்றிபெறச் செய்வோம்.

வே. பரமநாதன்




## நண்பர்கள்

முகம் தெரிந்தென்ன தெரியாமலென்ன
முழுமையான வரலாற்றை அறிந்து
இன்ப துன்பங்களில் பங்கேற்று
இன்னல் வரும் நேரத்தில்
இன்னுயிர் ஈய்ந்து
இன்பமுடன் கூடிக் குலாவிடும்
சுதந்திரமான பறவைகளே
-நண்பர்கள்

செ.கானப்பிரியா

## உள்ளம் மட்டும் வலிக்க வில்லை

அன்னிய தேசத்தில் வேலைப் பழுவால்
உடல்கள் வலித்தாலும்
உறவுகள் வலித்தாலும்
நீ[தாய்மண் உணர்வு]
என்மனதுள் இருப்பதனால்
உள்ளம் மட்டும் வலிக்கவில்லை.

ஜெ.சிறீவரதன்.

## தாய்மை

கற்பனை தனதாக்கி
கருவில் எனை உருவாக்கி
உடம்பதனை தனதாக்கி
உயிராக எனையாக்கி
உள்ளத்தை மெழுகாக்கி
உலகில் என்னை உயர்த்திய
உறவொன்று உண்டென்றால்
தாயுறவு தான்.

கனிமதி

## தெய்வங்கள்!

மனிதப் பிறப்பின் உன்னதத்தை
அறிந்து கொண்டேன்!
மானிடத்தைக் கண்டல்ல...
ஆயிரமாயிரம்
மனித தெய்வங்கள்
காவற் தெய்வங்களாய்
மாவீரராலயத்தினில்
வீற்றிருப்பதைக் கண்டு!

எஸ். சுகந்தி

## வேல் விழி... கொடுமையால்

பெண்ணே....
உன் வேல் விழி.......ஆம்
அந்த விழிப் பார்வை பாய்ந்து
என் இதய நாளங்களை
இடம் பெயர வைத்துவிட்டன.
கடந்த காலமாய் அவற்றை
தேடிப் புறப்பட்ட என்
நாடிகள்....
இப்போ "காணாமல் போனோர்'
பட்டியலில்"
காணப்படுகிறதாம்.

சுபா ஜெகநாதன்

## ஊக்கமாத்திரை

### உன்னையே நீ அறிவாய்; நேசிப்பாய்

"உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மத்.22:39)

மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்கவேண்டும் என்றால் அன்புள்ளம் எமக்குள் வளர வேண்டும். மகிழ்ச்சியை இழந்த மனிதன், அன்பில்லாத மனிதன். அவன் தன்னை நேசிக்கத் தெரியாதவன். அதனால் பிறரையும் நேசிக்க தயங்குகின்றான்.

எம்மை நாம் நேசிக்கக் கற்றுக்கொள்வோம் என்றால், எமக்கு எதிராக வருகின்ற சவால்களுக்கு முகம் கொடுத்து வாழ முடியும். அந்த சவால்களில் இருந்து படிப்பினைகளைப் பெறவும், அதைக்குறித்து சோர்ந்து போகாவண்ணம் வாழ்வை முன்னெடுத்துச் செல்லவும் உதவியளிக்கும்.

இன்றைய சமூகப் புலத்தில் உள்ள பெரிய பிரச்சினை, தம்மை தாமே அன்பு செய்யாததினால், தம்மையும் - பிறரையும் பழிவாங்கும் உணர்வு வளர்ந்து செல்கின்றது என்பதேயாகும். இந்த பழிவாங்கும் உணர்வுதான் சமூக விரோத செயல்களையும், சின்னத்தனங்களையும் நடத்தைக்கோலங்களாக வெளிப்படுத்தமுன்நிற்கின்றது.

சிறு பிரச்சினைகள் வந்த போதும், அதனை எதிர்கொண்டு வாழ தற்துணிவு அற்று, தற்கொலைசெய்துகொள்வதும், தம்மைத்தாமே பழிவாங்கும் உணர்வினாலேயே ஆகும்... இத்தற்கொலை பழிவாங்கலினால், தற்கொலை செய்பவர் மட்டும் பாதிப்படையவில்லை. மாறாக அவரது குடும்பம் - உறவுகள் - நண்பர்கள் - சுற்றத்தினர் என்று பாதிப்படைவோர் பட்டியல் நீளும். இன்று அநேகர் நினைப்பது தற்கொலைசெய்துகொண்டால் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று. இது தவறான சிந்தனை. இத்தகைய எண்ணம் ஒருவருக்கு உருவாகும் என்றால், அதற்கு காரணம் தம்மைத் தாமே அன்பு செய்யாமையே ஆகும்.

எந்தவொரு செயலுக்கும் காரணகாரிய தொடர்பு இருக்கவே செய்கின்றது. இதைப்போலத்தான், ஒருவருக்கு தற்கொலை எண்ணம் உருவாகும் என்றால் அதற்கு காரணம் சமூகமே! இத்தகைய காரணத்தை வைத்து அதைக் கருத்தில் கொண்டு, அவரைப் பார்த்து "உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக'' என்று சொல்வது எவ்வளவு தூரம் பொருத்தப்பாடு உடையது. மாறாக அவருக்கு தன்னம்பிக்கை ஊட்டி, தம்மை தாமே அன்பு செய்ய, நேசிக்க நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இதற்கு ஆரோக்கிமான உறவை வளர்க்கவேண்டும்.



இதன்மூலம் அவரை அழுத்தும் பிரச்சினை குறையும், அதனை எதிர்கொண்டு வாழ தன்னம்பிக்கை பிறக்கும். தற்கொலை எண்ணம் ஏற்படாது, மாறாக என்னை நேசிக்க மற்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே நானும் அவர்களை நேசிக்கவேண்டும், என்று தம்மைத் தாமே மீட்டுப் பார்த்து தற்பரிசோதனை செய்து, தம்மையும் - மற்றவர்களையும் . அன்பு செய்ய முன்வருவர்.

எம்மிடம் அன்புள்ளம் இல்லாவிட்டால், மற்றவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள, அவரின் வளர்ச்சியில் பங்கெடுக்க எமது உளம் தடையாகவே அமையும். மற்றும் நாம் எது செய்தாலும் அதிலும் திருப்தி காணாது, எம்மீதே எமக்கு சந்தேகம் ஏற்படும். இத்தகைய சந்தேகப்போக்குத்தான் மற்றவரையும் சந்தேகத்துடன் பார்க்க வைக்கின்றது. இதனால் பிரச்சினைகள் முரண்பாடுகள் அதிகரிக்கின்றதே தவிர, முழுமையான வளர்ச்சிப் போக்கினை காணமுடியாது.

ஆகவே உறவுகள் வளர நல்ல அன்புள்ளம் வேண்டும். அதனை வளர்க்க நாம் முயல்வோம். இதன் மூலம் சமய - சமூக - குடும்ப வாழ்வில் ஆரோக்கியமான சூழல் தோன்றும்...

**யாழ். ராதவல்லி**

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

எனக்கு சதா என்ற நண்பி இருந்தாள், நாம் இருவரும் உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தோம். எனக்கு சைக்கிள் ஓடத்தெரியாத காரணத்தால் சதா என்னை பாடசாலைக்கு ஏற்றிச்செல்வாள். காலத்தின் தேவை கருதி இருவரும் போராட்டத்தில் இணைந்து இருவரும் ஒரேபயிற்சிப் பாசறையில் பயிற்சிபெற்றோம். பயிற்சி நிறைவின் போது இருவரும் வெவ்வேறு பிரிவிற்கு அனுப்பப்பட்டோம். நானும் முப்பது போராளிகளும் அரசியல் பணிக்காக தெரிவுசெய்யப்பட்டு அரசியல் வகுப்பிற்கு அனுப்பப்பட்டு அங்கு எமக்கு ஆறு மாதகாலம் வகுப்பு நடைபெற்றுவகுப்பு இறுதியில் இருவருக்குமாக ஒரு சைக்கிள் தரப்பட்டது. தரப்பட்டபின் நான் முந்தி நீமுந்தி என சைக்கிளில் போராளிகள் முகாம் நோக்கி சென்றுவிட்டனர். எனக்கும் என்னுடன் விடப்பட்ட போராளிக்கும் சைக்கிள் ஓடத்தெரியாது. இருவரும் அப்படியே நின்றோம். இப்படியே இருவரும் நின்றால் பகிடிபண்ணுவார்கள் என்று நினைத்து சைக்கிளின் காற்றைத் திறந்துவிட்டுப் போனால் சைக்கிளிற்கு காற்றுப்போய் விட்டது என்று சொல்லலாம். என்று நினைத்துசைக்கிள் காற்றை திறந்து விட்டு உருட்டிக்கொண்டு முகாம் வந்து கொண்டிருந்தோம். அப்போது எம்மைத்தேடி போராளிகள் வந்துகொண்டிருந்தவேளை, ஏன் இருவரும் சைக்கிளை உருட்டிக்கொண்டுவாறீங்கள் எனக் கேட்டார்கள். எமது உண்மை நிலையைச் சொன்னால் சிரிப்பார்கள் என நினைத்து சைக்கிளுக்கு காற்றுப் போய்விட்டது என்ற பொய்யை சொல் வேண்டியதாயிற்று.

— செ.வேழினி

## குறுக்கெழுத்துப்போட்டி - 49

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 கா | 02 ணி | க் | கை | ■ | 06 | 07 |
| 08 ம | ண் | ட | ல | ம் | ■ | |
| தே | 16 அ | 17 க | ங் | கா | ர | ம் |
| னு | ■ | 24 தி | | | | ■ |
| ■ | 30 கி | ர | க | ம் | ■ | 35 |
| 36 | | வ | 39 | | | |
| | | ண் | 46 | | ■ | |

### இடமிருந்து வலம்

01. தட்சினை.
06. கடவுள்.
08. 40 நாட்கள்.
16. செருக்கு.
24. தன்னலம் இல்லாத கொடை.
30. கோள்.
39. தேர் குழம்பி உள்ளது.
46. பாம்பிற்கு பகை.

### மேலிருந்து கீழ்

01. தேவலோகப்பசு.
02. அண்ணனின் மனைவி தலைகீழாக உள்ளது.
07. வலிமை.
17. சூரியன்.
30. கருணை.
35. பகலுக்கு எதிரானது.
36. யானை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.47 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாவீரர் நாள்.
10. செந்தாமரை.
18. மன்னன்.
22. நகரம்.
27. ப்ரி.
30. இளநகை.
36. பணம்.
40. மோகினி.

**மேலிருந்து கீழ்**

01. மாயை.
02. வீணை.
10. செங்களம்.
22. நண்பன்.
41. கிழவி.
42. ஆனி.
46. மை

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.49
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.47 இன் பரிசுக்குரியவர்

**கு. அரசேஸ்வரன்,**
**கலைமகள் வீதி,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.47 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. நா. கௌரிதாஸ்.
முு/மத்திய கல்லூரி,
யோகபுரம்.

02. சி. தர்மிலா,
146, குட்செட் வீதி,
வவுனியா.

04. பா.சயந்தினி,
இல.39, கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

05. உ.கஜேந்திரா,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பெயர்:-...........................................
முகவரி:-.........................................
...........................................................
...........................................................

# ஆன்மா என்னும் அழிவில்லாப்பொருள்

நகுலன்

நான் என்பது யார்? அல்லது நான் என்பது எது? என்ற வினாவிற்கு விடை கண்டு விட்டால் ஆன்மா அல்லது உயிர் என்றால் என்ன? என்பது பற்றி அல்லது உயிர் என்றால் எது? என்பது பற்றி முடிவு செய்து கொள்ளலாம்.

உலகில உள்ள சமயங்கள் யாவும் போதிக்கின்ற விடயம் ஒன்றாகவே காணப்படுகின்றது. அனைத்து சமயங்களும் ஆன்மா ஈடேற்றம் பற்றிய கருத்துக்களையே ஆராய்கின்றன. ஒவ்வொரு சமயமும் ஆய்வு செய்கின்ற விடயங்களைப் பொறுத்தும் ஆய்வுப்பொருளின் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் தமது கொள்கைகளில் வேறுபாடுடையனவாக இருக்கின்றன. சமய நம்பிக்கை அற்றவர்கள் கூட ஆன்மா பற்றிய உணர்வில் ஒருவித கருத்தை கொண்டிருப்பார்கள். ஆன்மா அல்லது உயிர் என்பது பற்றி பேசாத தத்துவங்களே இல்லையெனலாம்.

ஆன்மா அல்லது உயிர் என்று கூறுகின்றபோது ஆன்மா யார்? அல்லது ஆன்மா எது? என்ற கேள்வி சகல தத்துவ அறிஞர்களிடமும் ஏற்பட்டிருக்கின்றமையை காணலாம். பொதுவாக நோக்குகின்றபோது ஒருவர் 'நான்' இப்போது ஒரு பாடசாலையில் கற்பித்துக்கொண்டிருக்கின்றேன். 'நான்' முன்னர் படிக்கும் காலத்தில் நன்றாகப் படித்திருந்தேன். 'நான்' மாநிலத்தில் முதன்மை மாணவனாக வந்திருந்தேன் என்று கூறுவதை அவதானிக்கலாம். 'ஆன்மா' அல்லது 'உயிர்' என்று சொல்லப்படுகின்ற விடயம் இங்கே 'நான்' என்ற பெயரோடு உலா வருவதைக் காணமுடிகின்றது. சாதாரண உலக வாழ்க்கையில் 'நான்' என்பதை ஆன்மா அல்லது உயிர் என அழைக்கலாம்.

இந்த நான் என்பது யார்? அல்லது நான் என்பது எது? என்ற வினாவிற்கு விடை கண்டுவிட்டால் ஆன்மா அல்லது உயிர் என்றால் என்ன? என்பது பற்றி அல்லது உயிர் என்றால் எது? என்பது பற்றி முடிவு செய்துகொள்ளலாம்.

நான் அம்மாவின் வயிற்றில் கருவாக இருந்தேன். அப்பாவின் விந்திலிருந்து அம்மாவின் கருப்பையில் சென்று வளர்கின்றேன். பத்து மாதங்கள் கழித்து ஆணாக அல்லது பெண்ணாக பூமியில் தவழ்கின்றேன். பூமியில் தவழ்ந்த பின்னர் நடக்கின்றேன். பேசுகின்றேன். சிரிக்கின்றேன். அழுகின்றேன். எனக்கு ஒரு வயது ஆகின்றது. நான் சூழலை உணர்கின்றேன். நான் இப்போது இளமைப்பருவத்தில் துள்ளி விளையாடுகின்றேன். நான் பெரியவனாகின்றேன். நான் திருமணம்செய்துகொள்கின்றேன். குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றேன். நான் பாடசாலையில் கற்பிக்கின்றேன். நான் தற்போது ஓய்வூதியம் பெறுகின்றேன். நான் கட்டிலில்படுத்தபடி என்னுடைய இறப்புக்காக காத்துக்கொண்டிருக்கின்றேன்.

மேலே குறிப்பிட்டவாறாக இத்தனை நாட்களில் நான் யார்? என்பது கேள்விக்கு உரிய ஒன்றாக விளங்குவதனை உன்னிப்பாக அவதானித்தால் புலனாகும். இவற்றை விடவும் அம்மாவின் கருவில் உருவாக முன்னரும், கட்டிலில் இறப்புக்காகக் காத்துக்கொண்டிருந்து இறந்தபின் எங்கு செல்கின்றேன் என்பதிலும் நான் என்ற விடயம் எனக்கு விளங்காமல் போவதை நன்றாக உணரமுடிகின்றது.

இத்தகைய உணர்தலுக்கு ஒரு விடைதேடும் முயற்சிகளாகவே சமயங்களும் அதன் தத்துவங்களும் விளங்குவதை உணரமுடிகின்றது. ஆன்மா அல்லது உயிரின் ஆராய்ச்சியிலே சமயங்கள் கூறுகின்ற விடயங்களை அவதானிக்கின்றபோது இந்த உண்மைகள் விளங்குவதனைக் காணலாம். அந்த வகையில் சமயங்கள் ஆன்மா அல்லது உயிர் அல்லது நான் தொடர்பாக கூறுகின்ற கருத்துக்களை அறிதல் முக்கியமானது.

இந்துசமயம் கூறுகின்ற ஆன்மா அதன் தத்துவம் பற்றி நோக்குகின்றபோது இந்து சமயத்திற்குள்ளாலே முரண்பாடுகள் இருப்பதை அவதானிக்கலாம். சங்கரர் என்ற ஆன்மீக தத்துவஞானி கூறுகின்றார். ஆன்மா என்பது ஒன்றானது. அது பலவாகி தெரிகின்றது. இதற்கு ஒரு சந்திரன் நீர்நிலையில் விழுகின்றபோது பல சந்திரன்களாக தெரிகின்ற உதாரணத்தையும் காட்டி ஏகான்மா வாதம் பேசுகின்றார். ஆன்மா பரமாத்மா, ஜீவத்மா என்ற இருவகைப்பட்ட நிலையில் உள்ளதாகக் குறிப்பிடும் சங்கரர், பரமாத்மா நிலையை அடைவதற்கு ஜீவாத்மாகைக் கொள்ளவேண்டிய விடயங்கயையும் குறிப்பிடுகின்றார். பரமாத்தாவே உண்மையான நிலை அதனை அடையவே ஜீவாத்மாக்கள் பிறப் பெடுக்கின்றன. ஜீவாத்மாக்களை மறைவிடும் சக்திகளாகி மாயைகள் காணப்படுகின்றன என்று மாயா வாதமும் சங்கரரால் பேசப்படுகின்றது.

இராமானுவுர் என்ற தத்துவஞானி விசேடம் கூடிய ஆத்மா கடவுள் என்றும். விசேடம் குறைந்த ஆத்மா உயிர் என்றும் கூறி விசேட நிலையினை அடைந்திருக்கும் விடயங்களை அழித்து விசேட நிலையினை அடையும்படியாக விஷிட்டாதிவைதம் பேசுகிறார்.

மத்துவாச்சாரியார் ஆன்மாக்கள் பற்றி குறிப்பிடும்போது மும்பொருள்களில் ஒன்றாக குறிப்பிடப்படுகிறார். பதி,பசு,பாசம் என்ற மூன்று விடயங்களில் பசு என்று குறிப்பிடப்படுவதை ஆன்மா என்கிறார். பதியை அடைய பாசங்களில் இருந்து விடுபடும் வழிமுறைகளை பசுவிற்கு அதாவது ஆன்மாவிற்கு அவர் கூறுகின்றார்.




இந்து சமயங்கள் கூறுகின்ற ஆன்மா இவ்வாறானதாக காணப்படுகின்றது.

ஆன்மா இந்த உலகில் பிறப்பெடுத்து தன்னுடைய பாவங்களைப் போக்கிக்கொள்வதற்கே என்று இந்து சமயம் கூறுகின்றது. 'நாம் பிறப்பு எடுத்ததன் இலட்சியம் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' என்பது ஆறுமுக நாவலரின் வாக்கு.

இந்தவகையில் ஆன்மா பற்றிய இந்துசமய நோக்கு இவ்வாறிருக்க, இஸ்லாம் சமயம் கூறுகின்ற ஆன்மா அல்லது உயிர் தொடர்பான விடயங்களை நோக்குகின்றபோது அந்த விடயங்கள் எம்மை சிந்திக்கத்தூண்டுவதைக் காணலாம்.

இறைவன் ஆரம்பத்தில் மண்ணில் இருந்து மண்ணெடுத்து இந்த உடலைப் படைத்தான் என்று இஸ்லாம் சமயம் கூறுகின்றது. அதாவது ஒரு குயவன் எவ்வாறு மண்ணினால் பொருட்களை செய்வானோ அதேபோல் இறைவன் மண்ணினால் முதல் மனிதனை உருவாக்கினான் என்கிறது. இஸ்லாம் சமயம். 'இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட, அவை இரண்டும் சேர்ந்தொரு பொம்மைகள் செய்தன தாம் விளையாட' என்பது தான் இஸ்லாம் சமய உயிர்கள் பற்றிய கொள்கையாக இருக்கின்றது. இந்த கொள்கையின்படி சிந்திக்கின்றபோது ஒரு உண்மை புலனாகின்றது. அது நகைச்சுவைக்கு உரியதாகவும் கொள்ளலாம். ஆசிரியர் மாணவர்களைப் பார்த்துக்கேட்கும் சாதாரணமான விடயமாக காணப்படும் உன்னுடைய மண்டைக்குள்ளே என்ன களிமண்ணா இருக்கின்றது என்ற கேள்வி தான் அந்த விடயம்.

பௌத்த சமயம் கூறுகின்ற ஆன்மா பற்றிய கருத்து இன்னமும் வேறுபட்டு அமைகின்றது. கணபங்க வாதம் என்ற ஒரு கொள்கையை பௌத்தர் முன்வைக்கின்றார். கணத்துக்குக் கணம் எல்லாப் பொருட்களும் மாறுபடுகின்றன. என்பது தான் அந்தக்கொள்கையின் விளக்கமாகும். ஓடிக்கொண்டிருக் கின்ற நீர் நிலையில் ஒருவன் கால் வைக்கின்றபோது அந்த நீர்நிலையில் வைக்கப்படுகின்ற கால் எடுக்கப்படும்போது தெரிவதில்லை. வைக் கப்பட்ட கால் ஒன்றாகவும் எடுக்கப்பட்ட கால் இன்னொன்றாகவும் அமைகின்றது என்பதே கணபங்க வாதத்தின் அடிப்படையாகும். இன்று காணப்படும் பொருள் நாளை காண் பதற்கு முடியாது என்னும் 'நிலையாமைக்கொள்கையே' பௌத்தங்களின் கொள்கையாக அமைகின்றது.



கிறிஸ்தவ சமயத்தில் உயிர்கள் தொடர்பாக முன்வைக்கும் கருத்தை நோக்குகின்றபோது. ஆதியில் கடவுள் மனிதனைப் படைத்தார். உலகில் முதல் மனிதராகி விளங்கியவர்கள் ஆதாமும், ஏவாளும் என்று குறிப்பிடுகின்றது. இந்த ஆதாமையும் ஏவாளையும் படைத்த கடவுள் அவர்கள் இன்பமாகி இருக்கும் படியாக உலகினைப் படைத்து, நச்சு மரங்களில் உள்ள பழங்களை மட்டும் பறிக்கக்கூடாது என்று எச்சரித்தார். கடவுளின் எச்சரிக்கையை மீறிய காரணத்தால் ஆதாமும் ஏவாளும் செய்த தவறால் இந்த உலகின் உயிர்களும் அந்த உயிர்கள் அனுபவிக்கும் இன்பம் துன்பங்களும் பிறந்தன. இவ்வாறு கிறிஸ்தவ சமயத்தின் ஆன்மா பற்றிய கொள்கை அமைவதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு சமயவாதிகள் கூறுகின்ற ஆன்மா இறந்ததன் பின்னர் அடைகின்ற நிலைமை யாது என்ற வினாவில் இருவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

இறந்ததென்று கூறுகின்ற ஒரு நிலை ஆன்மாதான் தங்கியிருக்கும் உடலைவிட்டு நீங்கு வதாக குறிப்பிடப்படுகின்றது. தான் தங்கியிருந்த உடலுக்கு என்ன நிகழ்கிறது என்பதை ஆன்மா உன்னிப்பாக அவதானிக்கும் என்று ஆன்மா பற்றிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தன்னுடைய உடலை மறந்து உலகத்தொடர்பை நீக்கும் ஒருவகை முயற்சியாகவே ஆன்மா தங்கியிருக்கும் உடல் தகனம் செய்யப்படுகின்றது. தகனம் செய்யப்பட்டபின்னர் ஆன்மாதான் உடலோடு உலாவிவந்த வீடு, உறவினர்கள் ஆகியோரைச் சுற்றி 31 நாட்கள் வரையும் வந்து செல்லும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. அதனால்தான் உடலில் இருந்து ஆன்மா விடுபட்ட நாளிலிருந்து 31 நாட்கள் அந்த உடலில் தங்கிய ஆன்மாவிற்கு படைக்கின்ற ஒரு வழக்கம் நம்மிடையே காணப்படுகின்றது. உடலில் இருந்து விடுபட்ட ஆன்மா பின்னர் வருடத்திற்கு ஒருமுறை தன்னோடு தொடர்புடையவர்களைச் சுற்றி வருவதாகவும் கூறப்படுகின்றது.

ஆன்மா உடலைவிட்டு நீங்கிய பின்னர் அது இதுவரை காலமும் தங்கியிருந்த உடலை புதைக்கும் ஒருவகை வழக்கமும் காணப்படுகின்றது. தான் தங்கியிருக்கும் உடலில் என்றேனும் ஒரு நாள் ஆன்மா மீண்டும் புகுந்து உயிரோடு உலாவுகின்ற சந்தர்ப்பம் வரும் என்ற நம்பிக்கையே இவ்வாறு புதைக்கப்படுவதற்கு காரணமெனலாம். இயேசுகிறிஸ்துவின் 'உயிர்த்தெழுதல்' என்ற சமய நிகழ்ச்சியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

ஆன்மா என்றால் என்ன என்பது பற்றிய கேள்விக்கு இதுவரை விடை கிடைக்கப்படாமலே ஆன்மாவின் வாழ்க்கை தொடர்கின்றது. இந்த வகையில் ஆன்மா என்றால் என்ன? என்பது பற்றி சமயங்களில் ஒவ்வொன்றும் தனது சமயத்துக்குத் தக்கவாறு விடையளித்துள்ளன. ஆன்மா என்பதற்கு விஞ்ஞானிகள் கொடுக்கின்ற விளக்கம் ஆணின் விந்து பெண்ணின் கருப்பையில் சேர்ந்து உருவாகுகின்ற கரு அந்தக் கருவின் வளர்ச்சி நிலை. பத்து மாதங்களின் பின்னர் தோன்றும் உயிர் என்பதாகும். விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்பாக தற்போது குளோனிங் முறை என்கின்ற ஒன்றும் உயிர்களை உற்பத்திசெய்யத் தொடங்கியுள்ளது.

பஞ்ச பூதங்களான நிலம், நீர், தீகாற்று, ஆகாயம் என்பவற்றின் சேர்க்கையே உயிர் என்றும், உயிர் அழிவடையும் காலத்தே அந்த உயிரில் காணப்பட்ட பஞ்சபூதங்கள் பிரிந்து செல்கின்றன என்றும் சமயத்துக்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் உயிரின் தோற்றம் பற்றிய கருத்துநிலை காணப்படுகின்றது.



மகாகவி சுப்பிரமணியபாரதியாரின் 122ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரிக்கப்படுகிறது.

# பாரதி! ஒளிப்பரவை நீ

பாரதி!
அழகான முண்டாசு முரடனே.
மீண்டும் மீண்டும் உன்னில் படியும் போதே
உன் ஆளுமையழகை உணரமுடிகிறது.
மந்திர வார்த்தைகளில் கரையும் கணங்களில்
உன் மணிவாசகங்களில்
புதுப்புது அர்த்தங்கள் புலனாகிறது.
உன் வரிகளில் தளைதட்டுமிடங்களிற்தான்
புதிய களைகொண்டிலங்கிறது கவிதை.
விடுதலைக்கு நீ சமைத்த விருந்திருக்கிறதே
உண்ணும்போது
அது வெவ்வேறு சுவைகளில் ருசிக்கிறது.
தமிழுக்கு எல்லோரும் கரைகட்டி குளமாக்கினர்
நீ தான் கட்டுடைத்துப் பாயவிட்டவன்.
கம்பனை,
வள்ளுவனை,
இளங்கோவை வியந்தாய்.
எனினும் எம்மை வியக்கவைத்தவன் நீயே.
காதலை கவிஞர்கள் தீக்குச்சியாக்க
மூண்டெரியும் வேள்வித் தீயாக்கியவன் நீ.
பெண் மீதான உன்பார்வை விசாலிப்பு
எல்லையற்றது.
புலவர்கள் பூவாக்க
கவிஞர்கள் கண்ணீராக்க
மனிதனே!
ஒருமையிலழைத்து அவளுக்குப் பெருமை
சேர்த்தாய்.
சக்தியை 'சொல்லடி' என்று முன்னிறுத்தி
சுகம் கேட்ட சுதந்திரனல்லவா நீ.
பட்டினிக்கு கிட்டிய உறவாகிய வேளையும்
'எத்தனை இன்பம் வைத்தாய் இறைவா' என
பாட உன்னால் மட்டுமே இயலும்.

உனக்குப் பின்னான எல்லோருக்குள்ளும்
எப்படிப் புக முடிகிறது உன்னால்?
ஐயனே!
உலகைக் கடுகாக்கிக் கையிலெடுக்கவும்
கடலாக்கிக் கண்முன் விரிக்கவும்
எங்கு கற்ற வித்தையடா இது.
உன் உள்மனவெளி பரந்தது.
அழகானது.
அங்கு கோடையில் மழை பொழிகிறது.
மாரியில் இளவெய்யிலடிக்கிறது.
இருளில் ஒளியிருக்கிறது.
ஒளியில் வழியிருக்கிறது.
நீ பூனூல் தரிக்காத வேளையில் பிராமணன்.
தரித்த நேரத்தில் சூத்திரன்.
சிட்டுக் குருவிக்கும் ஜீவிதமளித்தவனே
உனக்கு வாழ்வளிக்க யாருமற்று வடிந்து போனாய்.
சாவின் பின்னும் சுவாசமியங்கும் கவிஞன்
தமிழில் நீயொருவனே.
அகவையேறி
அனுபவம் அதன்மேலேறி
பயணம் செய்யும் காலத்தில்
வயோதிபம் கதவு தட்டும் வாசலில்
உன்னை உரசும் போதுதான்.
ஒளி வெள்ளம் என்னவெனத் தெரிகின்றது.
உன் பாடல்களைப் பாடும்போதும்
உச்சரித்து முத்தமிடும் வேளையும்
மனதில் ஞானத்தீ மூண்டெரிகிறது.
அர்த்தமற்றது இவ்வுலகு என
ஆன்மா அந்தரிக்கும் இரவில்
எவரோ தலைகோதி விடுகின்றனர்.
வெளியே பார் உலகு எத்தனை வெளிசமென
ஒரு வெண்கலக்குரல் கேட்கிறது.
அது உன் விரலும்
உன் குரலுமே.
பாரதி!
நீயே ஒளியின் உயிர்.
நீயே விடுதலையின் முகவரி.
நீயே ஞானத்தின் பிள்ளை.
நீயே வரிகளுக்கு வாசம் கொடுத்த முல்லை.
உன்னில் கலந்திளகும் போதில்
நீயே எல்லாமுமாகி விடுகிறாய்
மெய்யுண்மை விளங்கும் முதலோனே!
பொய்யில்லா உன் தமிழைப் பேசியபடி
நகரும் காலம்.
நீ புதிது புதிதாகப் பிறந்து
எக்காலமும் இருப்பாய் எம்முடன்.

புதுவை இரத்தினதுரை

# பொறுக்கி எடுத்த பூக்கள்

## இலக்கிய விருந்து

கடையேழு வள்ளல்களில் ஒருவனான முல்லைக்கொடி படர தன் தேரை வழங்கிய பாரி மன்னனின் மகள்களாகிய அங்கவை, சங்கவை திருமணத்திற்கு வருகை தந்திருந்த மூவேந்தருக்கு விருந்து வழங்கியபோது ஔவைப்பிராட்டியார் அவர்களுக்கென தெரிவு செய்த பழம் பனம்பழமே.

இதோ அதைக்குறிக்கும் பாட்டு.

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
'மங்கைக் கறுகி வந்திருந்தார் மணப்பந்தலிலே
நொங்குக் கண்முற்றி அடிக்கண் சிவந்து
பாங்குக்கு மூன்று பழம் தாபனம் துண்டமே..."

## சிரித்திரன் சிந்தனை

"பசியில் கண்கள் இருளும் போது
தேசியக் கொடி புலப்படாது.
பசியில் காதுகள் அடைக்கும் போது
தேசிய கீதம் கேட்காது..."

## முல்லா முறுவல்

முல்லா நஸ்ருதீன் ஒரு செல்வந்தரின் வீட்டில் விருந்தாளியாகத் தங்கினார்.

எது வேண்டுமானாலும் தயங்காது கேளுங்கள் என்று உபசரித்தார் செல்வந்தர்

இரவு:

முல்லாவுக்கு தாகம் எடுத்தது தண்ணீர் கேட்டார் எவரும் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கவில்லை. யோசித்து வீட்டு நெருப்பு நெருப்பு என்று கத்தினார். செல்வந்தர் உட்பட எல்லோரும் தண்ணீருடன் ஓடி வந்து 'எங்கே நெருப்பு' என்று பரபரத்தனர் முல்லா தனது வாயைத் திறந்து 'இதோ இங்கே' என்று கூறினாரே பார்க்கலாம்.

## ஒரு அதிபரின் வேண்டுகோள்

"பேரன்பு மிக்க மாணவர்களே... உங்கள் கலைப்பற்றை நான் வியக்கிறேன்... அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். விடிய விடிய வீடியோவில் படம் பார்க்கும் ரசிகர்கள் நீங்கள் பாடசாலை வரும்போது புத்தகம் கொப்பியுடன் வராது தலையணையுடன் வாருங்கள் போதும"

நன்றி:

## நவீன விளக்கங்கள்

அனுக்குண்டு : விஞ்ஞான விவசாயிகள் அறிவெனும் வயலில் அறுவடை செய்யும் நச்சுக்கனி.
குளியலறை : சங்கீதம் படிக்காதவர்கள் கச்சேரி செய்யும் உள்ளரங்கம்.
துப்பாக்கி : யமனின் புல்லாங்குழல்.
ஸ்கூட்டர் : ரோசமில்லா வாகனம்: உதைவாங்கியபின் தான் நகரும்.
விலைவாசி : நம் அரசியல்வாதிகளால் விண்வெளிக்கு ஏற்றி - பின் இறக்கமுடியாது தவிக்கும் ஏவுகணை.

## நவீன தத்துவங்கள்

- அறிவாளி தன் வாயை இதயத்தில் வைத்திருக்கிறான்
  குடிகாரனோ தன் இதயத்தை வாயில் வைத்திருக்கிறான்.
- நான் பிறந்தவுடன் ஏன் அழுதேன் என்பதை கழியும் ஒவ்வொரு வினாடியும் எனக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.
- வறுமை வாயிலுக்கு வந்துவிட்டால், அன்பு ஜன்னல் வழியாகப் போய்விடும்.
- சமரசம் செய்து கொள்ளுங்கள், சட்டத்திற்கு விலை அதிகம்.

## நவீன கவி மொழிகள்

தனது இனத்தைப் பற்றியும் ஒடுக்கப்படும் உலக சமுதாயத்தைப் பற்றியும் நினைத்துப் பாடாதவன் கவிஞனாக இருப்பதற்கு அருகதையற்றவன்.

-மகாகவி. பைரன்

- வானைப்பார்த்து மதியைப்பார்த்து
  வையம் களிக்கப்பாடும் புலவர்
  கூனைப் பார்த்து குருடைப்பார்த்து
  கொள்கை இழந்தோர் வீழிக்கப்பாடு.

- கரவைக்கிழார்.

பொறுக்கி

# தாயகம்

வளமுண்டா
உன்
மண்ணில்?
வாழ்வாயா
தனித்து?
என்கிறாய்....

என
நாட்டின்
துயரங்கள்
பற்றி
என்னிடம்
பேசாதே.

பாலைவனத்தின்
இனிமை
பற்றி
ஒட்டகத்திடம்
கேள்.

# புரட்சி

மாடியில் இருந்து
துப்பினால்
குடிசையில்
விழும்.

குடிசையில் நின்று
துப்பினால்
மாடியே
விழும்.

# கண்ணோட்டம்

செருப்பைப்
பார்க்கையில்

நீங்கள்
அணிந்திருக்கிறவனின்
காலைப்
பார்க்கிறீர்கள்.

நான்
செய்தவனின்
கையைப்
பார்க்கிறேன்.

காசி ஆனந்தன்

உலகை ஆள்வது எண்ணங்கள். - ஜேம்ஸ் கார்பீல்ட்



# எனக்கு என்ர கிராமத்து வாசனை வேணும்...

**நான்** சொல்லுறது பொய்யில்லை; உண்மை. அப்ப எனக்கு உயர்கல்விக்கான அனுமதி கிடைச்சிருந்தவேளை, அப்பத்தான் அந்த இடப்பெயர்வு; மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வைச் சொல்லேல்ல; என்ர கிராமத்தை விட்டிட்டு ஓடின ஓட்டத்தைச்சொல்லுறன்.

எனக்கொரு பழக்கம் எந்த நாளும் காலையில 5.00 மணிக்கு எழும்பி படிக்கத்துடங்கியிடுவன். அண்டைக்கென்னவோ 4.00 மணிக்கே எழும்பிப் போட்டன் சரி, என்ன எழும்பியாச்சுத்தானே படிப்பம் எண்டு படிச்சிக்கொண்டிருந்தன். இரண்டு பக்கம் தட்டியிருக்கமாட்டன்! சட..சட..ச..ட....

எதிர்பார்த்ததுதான், தரையிறக்கம் நடக்குமெண்டு. ஆனா எங்களால் எங்கட மண்ணை விட்டிட்டுப் போகமுடியேல்ல. பாப்பம்....பாப்பம்... எண்டு இருந்தம். இப்ப எல்லாம் வாசலுக்கு வந்திட்டுது!

இனியொண்டும் செய்யேலாது: போகத்தான் வேணும். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உயிரைக் கூடக் குடிக்கும். ஷெல்கள் கூவி....வெடித்து; எங்க பார்த்தாலும் நெருப்புத்துண்டங்கள் பரவி பிரகாசிக்க மேலையிருந்தும் காதைச் செவிடாக்கும் விமானப் பேரிரைச்சல்.

தேசம் பதறிக்கொண்டிருந்தது. என்ன செய்யிறது எண்டு ஒண்டுமாகத் தெரியேல்ல. நாக்கு மேலண்ணத்தோட ஒட்டின மாதிரியிருந்தது. அம்மா எல்லாரையும் வெளியில வரச்சொல்லிக் கொண்டு கத்திக்கொண்டிருந்தா. வாறன் என்று செல்லக்கூட முடியல. தலைவரின்ற படம் சுவரில மாட்டியிருந்தம். எட்டிப் பிடிச்சன் ஆணியோடவே வந்திட்டுது. சத்தம் வந்துகொண்டிருந்த திசைக்கு எதிர்த்திசையில ஓடத்தொடங்கினம். ஆனா ஓடன ஓட்டத்துக்கு அதிக தூரம் நகர்ந்த மாதிரி தெரியேல்ல. அக்கம் பக்கம் ஆரையுமே காணேல்ல. எல்லாருமே ஓடிட்டினம். நாங்கள் தாமதிச்ச ஆக்களா இருக்கவேணும். எங்கட அப்பம்மா நடக்கவே கஸ்டப்படுவா எப்படி ஓடுறது.

அப்பம்மா "இனி என்னால ஏலாது. நீங்கள் போங்கோ ஓடித் தப்புங்கோ இந்தக் கிழட்டை என்ன செய்யப் போறாங்கள்" எண்டு தேற்றின இடத்தில நிண்டு பார்த்தம். எங்கட வீட்டுப் பக்கமாகத்தான் இருக்கவேணும். பெருத்த குண்டோசை... புகை மண்டலம்.... நில அதிர்வு.... கட்டடங்களில இருந்து ஓடுகளின்ர யன்னல் கண்ணாடிகளின்ர சிதறல்கள்....

அப்பம்மாவ எப்படி விட்டிட்டுப் போக முடியும். கடைக்குட்டித் தங்கச்சிக்கு 2 வயது அவள் வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்தாள்.

அப்பாமாவில எல்லோருக்குமே கொள்ளைப்பிரியம். பிள்ளை "பிள்ளை பயந்து போனால் நிற்காமல் கொண்டுபோ...." அப்பம்மா விரைவு படுத்தினார். அப்பம்மா அம்மாவைப் பிள்ளை எண்டுதான் சொல்லுறவா.



இந்தப் பிள்ளையார் கோயிலில அப்பம்மாவை விட்டிட்டுப் போறதைவிட வேறவழி தெரியேல்ல. அந்தக்கோயில் கோபுரம் மறையும்வரை திரும்பித் திரும்பிப் பார்த்து அழுதுகொண்டு போனம்.

அப்பம்மா பேந்து ஒரு வழியா எங்கலோட சேர்க்கப்பட்டது வேற கதை ஆனா இண்டைக்கும், எண்டைக்கும் என்னால மறக்க முடியாது. பயம் செய்த அற்பத்தனமா வருத்தும்.

எனக்கு ரொட்டி எண்டா நல்ல விருப்பம் எந்தநேரம் எண்டில்ல நினைவுவந்திட்டுது எண்டா உடனவேணும் அப்பம்மா செய்து தந்துப்போட்டுத்தான் அடுத்தவேலை பார்ப்பா. அவவுக்கு மேல கால் போடாம எனக்கு நித்திரை வராது அப்பம்மா வந்து சேரும்வரையில் ஊமையாய் அழுத அழுகை... அந்தவேதனை அனுபவமானால்தான் புரியும்.

அந்த நாள் அவலம்... அவமானம்... அற்பத்தனம்... இப்ப நினைச்சாலும் அருவருக்குது.

அன்னம் தண்ணி இல்லாம, அரை நாளிலேயே 20மைல் நடந்திருந்தம். நாங்கள் உயிரைப் பாதுகாக்க, ஊட்டி வளர்த்த உறவையும் இடையில விட்டிட்டு பாதுகாப்பான இடம்தேடி ஓடிக் கொண்டிருக்க அவையள் சத்தம் வாற திசையைநோக்கி ஓடிக் கொண்டிருந்திச்சினம்.

அனேகமானவர்களுக்கு என்ர வயதுதான் இருக்கும். அவையளப் பார்க்க எனக்குத் திராணியில்ல! வெக்கமா இருந்துது. கூனிக்குறுகினன். என்னில எனக்கே வெறுப்பாயிருந்துது. நானும் இவையள மாதிரி இருந்திருந்தா இப்பிடி ஓடி அவமானப் பட்டிருக்க மாட்டன்.

பக்கத்து வீட்டுக்காரர் வேலியடைக்கேக்க கொஞ்சம் தள்ளிற்றெண்டா விடுவமே! இப்ப என்னெண்டு எந்த எதிர்பார்ப்புமில்லாம விட்டிட்டு ஓடுறம்!

என்ர தவறு எனக்கு தெளிவா விளங்கிச்சு. தவறு உணரப்படுகையில் அது தரும் வேதனை கொடியது. எனக்கு வேர்த்துக்கொட்டிச்சு. எனக்கு புத்தி சொல்லி அனுப்பி வைச்சிருக்கலாமே என்று அவையளில கோபம் வந்துச்சு.

சீ.... அப்பா அம்மா எப்பிடிப் போ எண்டு சொல்லுவினம்... நானெல்லோ புரிஞ்சுகொண்டிருக்கவேணும். நான் சுக்கு நூறாய் உடைஞ்சு கொண்டிருந்தன். அண்டைக்கு எடுத்த தீர்மானம்தான்!

என்னால தினம் தினம் கூனிக் குறுகி அணு அணுவாச் சாகேலாது. ஒட்டுண்ணி மாதிரி... அவையின்ர நிழலில குளிர் காயுறது மாதிரி... அருவருப்பான பிராணியாய் இழிந்துவிட்டது மாதிரி... எப்பிடி எப்பிடியோ எத்தனையோ உணர்வுகளின் பிரளயம் எனக்குள்ள! இப்ப அப்பிடியில்ல இப்ப நினைச்சாலும் என்னை நினைக்க எனக்கே அதிசயமாயிருக்கு! ஏனெண்டா எனக்கு எல்லாத்துக்கும் பயம், இருட்டு, மனிசரோட கதைக்கிறது... எல்லாத்துக்குமே பயம். யூறினுக்குப்போக அந்த வயதிலையும் அம்மாவோடதான் போவன் இப்ப...

(19ஆம் பக்கம் பார்க்க...)

**எட்வின்**

# தமிழ் ஒரு பொற்சுரங்கம் தமிழிற்கு தீது நன்றோ...?

**தமிழீழம்** தனது விடுதலைக்கான போராட்டத்தில் வெற்றி இலக்கை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்ற இந்த இறுதிக்கால கட்டத்தில் நாம் எல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது நாம் அனைவரும் அறிந்துகொண்ட உண்மை. தன்னலமற்ற தன்மையும், பிறர் நலன் விரும்பும் பெருமையும், தன்னிகரில்லாத் தற்கொடையும், தளராத உரமும், விறல் மிக வீரமும், விறுக்கென்ற விரைவும் கொண்ட எம் வேங்கை மறவர்களின் போர்க்கள சாதனைகள் உலகின் விழிகளை அகல விரிக்கவைக்கும் இந்த வேளையில் தாய்மொழியாம் எம் தமிழ் மொழியை தரக்குறைவாய் நினைப்பதும், நாகரிகமற்ற மொழியாய்க்கருதுவதும் எம் மத்தியில் நாம் கண்கூடாகக் காணக்கூடியதொன்றாய் உள்ளது. ஏன் இந்த இழிநிலை? எம் மொழிக்கேன் இந்த அவல நிலை? என்பதைத் தமிழனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் சற்றுச்சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இழந்துவிட்ட எம் இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக தம் இளமைக்கால ஆசைகளை யெல்லாம் துறந்துதம் இன்னுயிரைத் துச்சமென மதித்துப் போராடிக்கொண்டிருக்கின்ற யதார்த்தத்தை உணராமல் எம் இனிய மொழியாம் தமிழை உதாசீனம் செய்து வாழ்வது தமிழின் மடமையல்லவா?

வண்டமிழ், தென்றமிழ், இன்றமிழ் என்றெல்லாம் போற்றப்பட்ட எம் மொழி தன்னுயர்வை இன்று இழந்து நிற்கின்றது என்றால், அதற்குக் காரணன் தமிழனே ஆவான். "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று முழங்கினார் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை. ஆனால், இன்றைய தமிழன் தன்னைத்தமிழன் என்று அடையாளப்படுத்திக்கொள்ளத் தயங்குகின்றான். "என்று மடியும் இந்த அடிமையின் மோகம்" என்ற பாரதியின் வினாவிற்கு இன்றே என்னும் விடையுடன் தமிழன் செயற்படுவானால் தமிழ் உருப்பெறும், உயர்வு பெறும் என்பதில் ஐயமில்லை. "தாய் மொழி தமிழன் ஒருவனுக்கு விழி போன்றது" விழி போன்ற மொழி எங்கும் எழுச்சி பெற வேண்டும். உதட்டளவில் தமிழ் என்னும் நிலை மாறவேண்டும். தமிழனது உணர்ச்சியெல்லாம் தமிழ் எனும் நிலை உருவாகவேண்டும். அப்போதுதான் எம் சமுதயம் மேனிலை பெறும். பேச்சிலும், எழுத்திலும் பிறமொழிச்சொற்களைக் கலந்து கையாள்வதால் தம்மை நாகரிகம் படைத்தவர்கள் எனக்கருதும் அறிவிலிகளாக எம்மவர் உள்ளமை பெரிதும் வருந்தத்தக்கது. அந்தளவிற்கு வறிய மொழியா? எம் தாய் மொழி. இத்தகைய கேடுகெட்ட நிலை மிகவும் இரங்கத்தக்கது. இப்படிப்பட்ட சனக்கூட்டம் உரிமைப் பெருவாழ்வை எய்தி வாழும் தகுதியுண்டா? என யாரும் கேட்டால் அது நியாயமான கேள்வியே.

1956ஆம் ஆண்டு சிங்கள இனவாத அரசால் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் உத்தியோகம் பெறுவதற்கு சிங்கள மொழியைக் கற்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் ஆங்கிலக் கல்வியும் அவசியம் என்ற அடிப்படையில் அதனையும் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், எம் மொழியைக் கற்றாலும் எமது உயிராகிய தமிழ் மொழியை நாம் மறக்கமுடியாது. "புத்தம்புதுமொழி படித்திடினும்- உன் இரத்தம் தமிழென எண்ணிவிடு".



இக்கூற்றின் உண்மையை நாம் உணராமலிருக்கமுடியாது. தீந்தமிழாய் தித்திக்கின்ற எம் மொழியின் கண்ணுள்ள இலக்கியங்களை வைத்து நோக்கின் எம்மொழி பொற்சுரங்கம் என்று கூறினும் மிகையாகா.

"எங்கள் தமிழது பொற்சுரங்கம்- அங்கே இருக்கும் இலக்கியம் பொற்குவியல். பகட்டாய் தெரிவதைத் தங்கமென்று- உன் பக்கம் இருப்பதை ஏன் மறந்தாய்"

தமிழின் துயர் துடைத்த கவிஞர் காசி ஆனந்தனின் உள்ளக் கிடக்கையிலிருந்து அவர் தமிழை எவ்விதம் போற்றினார் என்பது வெளிப்படுகின்றது. அதாவது, சிங்களக் காடையர்களான கூலிப் படைகள் கவிஞனின் கரங்களுக்கு விலங்கிட்டார்களே தவிர அவரின் உணர்ச்சிக்கு விலங்கிட முடியவில்லை. "தமிழ் உணர்ச்சி மடை திறந்த வெள்ளம் போல" பொங்கியெழ அவர்களின் விலங்கு காரணமாகியது. சிறையிலிருந்த காசி ஆனந்தனின் கவிவரிகள் கன்னித் தமிழின் மகிமையை எமக்கெடுத்தியம்புகின்றது. அதாவது, "பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும், எந்தன் கட்டுடல் தளர்ந்து கைகால் மெலிந்து கவலைகள் மிகுந்தாலும், வாழ்வு கெட்டு நடுத்தெருவோடுகிடந்து கீழ் நிலை உற்றாலும், மன்னர் தொட்டு வளர்த்த தமிழ் மொழியின் துயர் துடைக்க மறுப்பேனா?'

"இங்கு எந்தநிலை வந்தாலும், தமிழின் துயர் துடைக்க மறுப்பேனா?' என்ற அவரது வினாவானது உண்மைத் தமிழ் நெஞ்சங்களிற்கு உணர்வூட்டுவதாய் அமைகின்றது.

தமிழ்மொழி எக்காலத்திலும் சிதைவில்லாதது. எத்தனையோ மொழிகள் தமிழ் மொழியிலிருந்து தோன்றியபோதும் எம்மொழி எக்குறையுமின்றிப் பூரணக் கலசம் போல் பொலிவுற்றுத் திகழ்கின்றது. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்மூத்த மொழியாகிய தமிழ் மொழியின் வளம் குறையாமல் பாதுகாக்க வேண்டுமாயின் தனியொருவனால் அது இயலாதகாரியம். தமிழைப் பேசும் ஒவ்வொருவனும்,

(19ஆம் பக்கம் பார்க்க...)

**சி. சுலோஜினி**



# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

"தென்னை" எங்கள் மண்ணில் தனித்துவமான பொருண்மிய வளங்களில் ஒன்று என்பதை இங்கு வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

தினசரி அது எங்கள் வாழ்வுடன் தொடர்புபட்டது என்பதை விட எங்கள் பண்பாட்டுடன் இணைந்தது. அதனால் எங்கள் வளவுகளில் வளர்க்கப்பட்ட அத்தியாவசியமான மரங்களில் அது முதல் இடத்தைப் பிடித்தது.



பொருண்மியக்காரணங்களால் ஏராளமான ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்டு பெருந் தோட்டங்களாகின. வளர்ந்து உயர்ந்த தென்னைத் தோட்டங்கள் எங்கள் மண்ணுக்கு அழகு சேர்த்தன மாத்திரமல்லாது பொருண்மிய வளத்தையும் அள்ளித்தந்தன.

எனினும் கடந்த இரு பதாண்டுக்கு மேலான சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட தென்னை மரங்கள் பல லட்சம்.

ஆக்கிரமிப்பாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இடங்களில் தென்னைகள் அடியோடு அழிக்கப்பட்டதால். கூரை இழந்த வீடுகள் போல சோபை இழந்த வளவுகள் அதிகம்.

இத்கைய பின்னணியில் நாங்கள் தென்னை மீள் நடுகையினை அவசரமாகவும், அவசியமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

வீட்டுக்கு ஐந்து தென்னை மரங்களை உருவாக்குவதன்மூலம் வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்யவும் முடியும் என சொல்லப்படுகின்றது.

எனவே குறைந்த பட்சம் வளவுக்கு ஐந்து தென்னைகளையாவது நடுகை செய்து தென்னை வளத்தை மேம்படுத்துவோம்.

## உவர் நீர் தடுப்பு



யாழ். குடாநாட்டின் மத்தியில் வலி கிழக்குப் பிரதேசத்தின் எல்லைக் கிராமமாக வாதரவத்தையும்வடமராட்சிப் பிரதேசத்தின் எல்லைக்கிராமமாக கப்புதூரும் உள்ளன. இக்கிராமத்தில் உவர் நிலம் அதிகமாக காணப்பட்ட போதிலும் உவர் நீர் நிலைகளும் காணப்படுகின்றன.

குடா நாட்டில்பெரியதொரு நிலப்பரப்பை, நீர்ப்பரப்பை வீணடிக்கப்படுவதால்; இப பிரதேசம் உவர் நீரினால் காவுகொள்ளப்படும் போது; குடாநாட்டிற்கு உவர் நீர் அச்சுறுத்தல் ஏற்படும். கப்புதூர், வாதரவத்தைப்பகுதிகள் 1960ஆம் ஆண்டு 1970ஆம் ஆண்டு காலப் பகுதியில் நன்னீர்ப் பிரதேசமாக இருந்தன. ஆனால் இன்று இப்பகுதி உவர் நீர்நிலைகளையேகொண்டுள்ளன.

கரவெட்டி தெற்குப் பிரதேசம் உவர் நீராவதைக் காண முடிகின்றது. நாளடைவில் நன்னீராக இருக்கின்ற இடங்கள் தற்போது உவர்நீராக மாறிவருவதால் யாழ். குடா நாட்டில் நன்னீரைக் காணக்கூட முடியாத நிலை ஏற்பட வாய்ப்பாயுள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் கடலேரியை அண்மித்த பிரதேசங்கள் தற்போது உவர் நீராகவும், சற்றுத்தொலைவில் உள்ள பிரதேசங்கள் உவர் நீராகிக்கொண்டுவரும் பிரதேசங்களாகவும் உள்ளன.

குடா நாட்டு அபிவிருத்தி அடையவேண்டுமானால் உவர் நீர் அபாயம் நீக்கப்படவேண்டும் கடல் நீர்ஏரிகளையும், சரசாலை சதுப்பு நிலக் காட்டிலிருந்து ஆரம்பிக்கும் செம்மணிக்கடல் நீரேரி, முள்ளிச்சதுப்பு நிலக் காட்டில் இருந்து ஆரம்பிக்கும் தொண்டமனாறு கடல் நீர் ஏரிவரை முழுமையாக ஆராயப் பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

முள்ளிச் சதுப்பு நிலக் காடு, கப்புதூர் கண்டற்காடு என்பன. யுத்த இடப்பெயர்வினால் முற்றாக அழிக்கப்பட்டு தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக கண்டல் மரங்கள் தளிர்விடுகின்றன. இவற்றை இனி மேலாவது அழியவோ, அழிக்கவோ விடாது பாதுகாக்க வேண்டும்.

சதுப்பு நிலக்காடுகளில் இயல்பாகக்கூடும் வெளிநாட்டு உள்நாட்டுப் பறவைகள் வெடிச் சத்தங்கள் கேட்டதாலும், இப்பறவைகள் வேட்டையாடப்படுவதாலும் பறவைகள் தங்கிவாழ முடியாத நிலை. இதைத் தடைசெய்து இப்பகுதியைப் பறவைகள் சரணாலயமாக மாற்றம் செய்ய வேண்டும்.

உவர் நீர்த் தடுப்பின் முதற்கட்ட நடவடிக்கை நீர்த்தேக்கங்களையும், சதுப்பு நிலக்காடுகளையும் முழுமையாகப் பயன்படுத்துதல்.

வயல்களுக்கிடையே காணப்படும் நீர்த்தேக்கங்களையும் உவர்த்தடுப்பு அணைகள் மூலம் குளமாக மாற்றுவதனால் இதைததடுககலாம்.

மழை காலங்களில் மிதமிஞ்சிய நீரை வடிகால் அமைத்து வெளியேற்றல்.

கப்புதூர் வெளி நீர் வேலி வெளிகளில் காணப்படும் மேச்சல் தரைகளின் பரப்பளவை அதிகரித்து நல்ல புல்லினங்களை வளர்த்தல், சவுக்கு, தேக்கு போன்ற மரங்களை நடுகை செய்தல், உவர் நீர் நிலைகளில் இறால் மீன்களை வளர்த்தல்,

கடலுடன் கடல் நீர் ஏரி கலக்கும் இடங்களிலும் கோடை காலங்களில் கடல் நீர் உட்புகாமல் இருக்க அணை கட்டுதல் இத்திட்டங்களை அமுல்படுத்தும் பட்சத்தில் நல்ல பலனைப் பெறமுடியும்.

குடாநாட்டின் நிலத்தடி நீர் உவர் நீராவதை தடுக்க முடியாவிட்டால் மத்திய கிழக்கு நாடுகள் போல் அங்கே உள்ள மக்கள் நன்னீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.

**சிவகமலா**

யாழ் நகரில்

24 மணிநேர சேவையில்

**கூல் லெமனேற்றிங்**

உங்கள் தேவைக்கேற்ப அளவு முறையிலும், குறைந்த கட்டணத்திலும் தரமான முறையிலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

**மதி கலர்ஸ் ஸ்கிறீன் அன் ஒவ்(f) செற் பிறிண்டர்ஸ்**

**A4க்கு - 1.50சதம் மட்டுமே**

15/2, முருகேசர் லேன், நல்லூர். தொஇபேசி. 071 - 2346615

440 பருத்தித்துறை வீதி, நல்லூர். தொ.பேசி. 071 - 2382644

(3393)

படைப்பாளிகளிடமிருந்து
வெள்ளிநாதத்திற்கு
ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

- சிறுகதை
- பயண அனுபவங்கள்
- கவிதை
- கள அனுபவங்கள்
- கட்டுரை

என உங்களால் வெள்ளிநாதத்தை அலங்கரிக்க கூடிய வகையில் எழுதப்படும் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

நீங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

## 4 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்...



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 1974 - 12 - 02 | 1999. - 12 - 26 |

திதி:- 12.12.2003

**வீரவேங்கை மதிசுமன்**

முத்துராசா - தங்கேஸ்வரன்
(65 வீட்டுத்திட்டம் முட்கொம்பன், பூநகரி)

தமிழ் மண்ணை மீட்பதற்காய்
உயிர் நீத்த அண்ணா!
அழுத கண்கள் ஓயவில்லை
ஆறாய் கண்ணீர் சொரியுதண்ணா
நான்காண்டு சென்றதண்ணா
உன் நினைவு மாறவில்லை
உன் பிரிவால் கலங்கும்.

தகவல்:-
தம்பி M.அருண்
M.A.G

(3394)


தந்தை, தாய், சகோதரன்
மனைவி, பிள்ளைகள்.

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

**நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்**

**NORTHERN TECHNOLOGY(PVT)LTD**

NORTHERN TECHNOLOGY




- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.



(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

## எனக்கு என்ர...

எல்லாம் எங்க போச்செண்டு எனக்குத் தெரியா! நிமிர்த்துறதுக்காக எண்ட நினைப்பே என்ன நிமிர்த்தி நிக்குது

ஜெய்சிக்குறு ஜெயம் எண்டபோது நானும்தான் வா பார்க்கலாம் எண்டு வழிமறிப்புச் செய்தவன். ரவைகளின் உரசலுக்குள்ளையும், விமானக்குண்டுப் பொழியலுக்குள்ளையும் முன்னோக்கிப்போனேனே ஒழிய பின்நோக்கவில்லை. இடையிடையே அந்த நாள் ஓட்டம் நினைவில வர உத்வேகம் இன்னும் இன்னும் முன்னோக்கி உந்தித்தள்ளும்.

உலக தலைசிறந்த இலக்கியங்களில் ஒன்றான விடுதலைக்காவியம் ஹென்றிஷரியன் "பட்டாம்பூச்சி" படித்தவர்களுக்கு அதுபுரியும். அந்தக் காவியத்தின் கதாநாயகன் பட்டாம் பூச்சி சுதந்திர தாகம் கொண்டவன். எந்த மனிதனுக்கும் சுதந்திரதாகம் "அசுர பலத்தைக்" கொடுக்கும் அந்த மானசீக மனோபலத்தை ஆராலையும் எதனாலையும் தடுத்து நிறுத்தமுடியாது. அதுதான் எனக்குளையும் அன்று புகுந்து கொண்டிருக்கவேணும்!

இண்டைக்கு தலை நிமிர்த்தி நடக்கமுடியுது. உறுதியோட ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கமுடியுது உள்ளொளி தொடும் உணர்தல் வருகுது. அந்த ராத்மா தூய்மையாயிருப்பதாய் நிறைவாய், இலேசாய் இருப்பதாய்த் தோன்றுது.

ஆனா இந்த வாழ்வு இத்தனைக்கும் கடினமானதுதான். ஆரம்ப பயிற்சியில என்ர கை, கால், தோள் எல்லாம் பிஞ்சுது. ஏனெண்டா நான் வீட்டில அப் பிடித்தான் வளர்க்கப்பட்டிருந்தன். எதையும் நான் செய்யவேண்டியிருக்கேல்ல நான், சாப்பிடற சாப்பாட்டைக்கூட தயாரிக்கத் தெரியாத அசடாய் வளர்ந்திருந்தன்.

இப்பத்தான் மரத்துப் போய் கெட்டியாய் சொர சொரப்பாய் உழைக்கும் கரங்களாய் அவை. என்ர அனுபவத்தில சொல்லுறன். தேவைதான் மனுசனை புடம் போடுறது. என்ர மண் எனக்கு வேணும்! நான் பிறந்து வளர்ந்த கூடி ஆடிவிளையாடிய என்ர முற்ற மண்.... நான் அழகுபடுத்திப் பார்த்து ரசிச்ச என்ர வீடு... தினமும் முகர்ந்துகொண்டு திரியிற முற்றத்து மல்லிகை வீட்டைச் சுற்றிய வயல் வெளிகள். கற்பக தருவாய் காணி எல்லை காத்து நிற்கும் பனை மரங்கள்... அவையின்ர பழம் நல்ல ருசி! நான் ஊஞ்சல் கட்டி ஆடிய அந்த வேம்பு, அந்த ஆலமரம்... எல்லாம் எல்லாம் எனக்குவேணும்.

பூநகரி. ஒரு காலத்தில் பூநகர் என்று இருந்து நாளடைவில் திரிபடைஞ்சு "ரி"யாய் மாறியதாய் அப்பம்மா சொன்னவ. என்ன வளம் இருக்கேல்ல என்ர கிராமத்தில நிறைஞ்ச நெற்கும்பிகள், மீன் கும்பிகள், மணற்கும்பிகள்... தேங்காய் .... பனங்காய் குவியல்கள் 06 மாத உழைப்பில 06 மாத அருமையான வாழ்க்கை.

எத்தினை கனவுகள்; படிபடியெண்டு படிச்சு அம்மாவ அப்பாவ கண்கலங்காம வச்சிருக்க வேணும்! தம்பி, தங்கச்சியாக்களுக்கு முன்மாதிரியா இருக்க வேணும்! கற்றவை கொண்டு என் கிராமத்தை இன்னும் இன்னும் அழகுபடுத்தவேணும்!

எல்லாம் அண்டைக்குப் போச்சு! ஆனா என்ர மண்ணிருக்கு! அதில எல்லாத் தடங்களும் இருக்கு! அணுவைத்துளைச்சு அகிலம் சுற்றுற மாதிரி மண்ணைத் துளைச்சு, உணர்வுகள்! நீறுபூத்த நெருப்பா மறைஞ்சிருக்கு. என்ர மண்ணில கால்பதிக்க "தொட்டனைத்தூறும் மணற்கேணியா" உணர்வுகள் கிளரும். புத்துயிர்ப்புப் பிறக்கும் என்ர மண்ணின் நினைப்பே மனம் நிறைஞ்ச மகிழ்ச்சியை தருகுது எண்டா... பாதம் பட்டா... படும்! நிச்சயமா படும்!

அதிகமாக கதைக்க மாட்டாத என்னை அரசியல் பேச வைச்சதே அதுதான்! அதிர்ந்தே கதைக்காத என்னை அரங்குகளில் அவலம் சொல்ல வைச்சது அதுதான். எங்கட பூநகரியை வசதி வாய்ப்பில்லாத கிராமம் எண்டு சொல்லக் கேட்டிருக்கிறன். எந்த வசதியும் தன்மையையும் நான் உணர்ந்ததில்லை. நான் எங்க போகேல்ல. எல்லா இடமும்தான் போனனான் என் கிராமத்து வாசனை எங்கும் இல்லை. அதிகாலையின் அமைதியைக்கூட தொலைத்து விட்டு அவலப்படும் அவல வாழ்க்கையை எல்லாரும் நாடி ஓடுற நகரங்களில கண்டிருக்கிறன். கல்விக்கா கற்றலில் குறைந்தவர்கள்தான் ஆனா உலகப் பேரேட்டை அனுபவத்தால கற்றுக்கொண்டவர்கள். அறியாமை நிரம்பியவர்கள்தான்: எதிலயெண்ட குதுவாதில: அது அவர்களுக்கு தெரியாமலே போகட்டும். மூடி போட்ட மனுசரை நான் பார்க்கவிரும்பேல்ல. எனக்கு என்ர கிராமத்து வாசனை வேணும். அதுக்காகதான் எதையும் செய்யத்தான், நான் போறன்.

எனக்கு வேணும் எண்ட ஆத்மார்த்தமாக உணர்ந்தல் பலம் உணர்ந்தவர்களுக்குப் புரியும்.

"வானத்தில புல்லு முளைச்சா
மாட்டுக்கும் சிறகு முறைக்கும்"

கவிஞர் காசி ஆனந்தனின் வரிகள் பொய்யில்லை.

"பெற்றதாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே"

## தமிழ் ஒரு பொற் சுரங்கம்

அதாவது, தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட ஒவ்வொருவனும் இதில் விழிப்புடன் இருந்தால் தமிழும் வெளிப்புடன் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழ் என்றும் தன்னிலையிலிருந்து திரிவுபடாதது என்பதை மனோன் மணியத்தின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் சான்றுரைத்து நிற்கின்றது. அதாவது,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல் கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்து என்று பலவாயிடினும்-ஆரியம்போல் உலக வழக்கழிந்துதொழிந்து சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்ந்ததுமே"

உலகமே தமிழை மதித்துப் போற்றுகின்றவேளை, தமிழீழமதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நாங்கள் தமிழைப் புறக்கணிக்கலாமா? விலக்கி வைக்கலாமா? தமிழனாகப் பிறந்தவனே சற்றுத் தய்வுடன் நின்று சிந்திப்பாயாக! அமிழ்தினும் இனிய எம்மொழி, தேமதுரத் தமிழ்மொழி, தித்திக்கும் இன்மொழி "இன்னல்" உற்றுவாட நீதான் உலகெல்லாம் சுற்றிப் பெருமைபெற்றுப் பயனென்ன? நம் மொழி வாடி, வதங்கி விம்மல் உற்றிருக்க பிறமொழியைப் போற்றும் உன் செயல்தானென்ன? உலகத்திலுள்ள கலையில் வல்லவர்கள் எல்லோரும் மலைபோல் மதிக்கும் மாண்புறு மொழியாகிய எம்மொழி நம்மாலேயே நலிவைப் பெறுதல் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவனுக்கு வெட்கமில்லையா? பண்டைய தமிழ்க் கடல்களான செந்தமிழ் செல்வீர்கள் சீருடனும், சிறப்புடனும் காத்த நம் தமிழ் மொழியை நாம் நசுக்குதல் நன்றோ? தகுமோ? பேச்சிலும், எழுத்திலும் தமிழைப்பேணி மூச்சாய் மொழியைக் காத்திடவேண்டியது தமிழனின் தலையாய கடனல்லவா?

வீரமுரு வேங்கைகள் விடுதலை வீச்சோடு இனவாத அரசிடம் இருந்து எம்மண்ணை மீட்டெடுக்க வேண்டிய அரிய பணிக்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்திலும் கூட தமிழையும் காக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் நிற்கின்றார்கள். இதனை நினைத்துப்பார்க்கும் போது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். "தமிழ் மொழியின் முதல் எழுத்து எங்கள் தலைவனின் உயிரெழுத்து" என்ற அடிப்படைக்கருத்தை அகத்திற்கொண்டு உழைக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்போராட்ட இயக்கமானது ஆயுதம் தரித்து அரச கூலிப் படைகளோடு போர்புரிந்து எம் மண்ணைப் பாதுகாப்பதுமட்டும்தான். அவர்களது இலக்கல்ல, தமிழ் மொழியின் தாற்பரியம் உணர்ந்து அதனை வரம்பு மீறவிடாமல் கட்டிக்காத்துப் போற்றுதல், இன்னோரன்ன சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகள் போன்ற பல கோணங்களில் தம் பணியை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என்பதனை நாம் அறிவோம். தூய தமிழ் மொழிப்பயன்பாடு என்ற கருத்தைத் தமிழ் நெஞ்சங்களில் பதியவைத்து தெருக்கள் தோறும் செந்தமிழ் சொற்களை பிரயோகிக்கவைக்கின்றார்கள். அதுமட்டுமல்ல ஏழல், அகவை, வினைக்கொடை பணி அமர்த்துகை மடல் போன்ற பல தூய தமிழ்ச்சொற்களை அறிமுகப் படுத்திய செயல் மூலம் புலப்படுவது யாதெனில் வீரத்தின் விளைநிலமாகிய தமிழீழத்தில் தமிழ் மொழி தழைத்தோங்க வேண்டுமென்ற வேணவாவையே சுட்டிநிற்கிறது.

"செந்தமிழுக்குத் தீங்கு வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ,
பங்கம் விளைந்திடில் தமிழ் மொழிக்கே
உடற்பச்சை இரத்தம் சிந்திடுவோம்.
செத்தாலும் தமிழ் படித்துச் சாகவேண்டும்.
எந்தன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்."

என்ற பாரதிதாசனின் பாடலிலே தமிழ்ப் பற்றும், தமிழ் மீதுகொண்ட வேட்கையும் தாண்டவமாடுவதைக் கண்டுகொள்ள முடிகிறது. அன்று காணப்பட்ட தமிழ்ப்பற்றை இன்று காண முடியாமல் இருப்பது கவலைக்குரியது. சீரும் சிறப்புமிக்க செந்தமிழை, பேரும் புகழும் மிக்க பைந்தமிழை காக்க கைகொடுக்க வேண்டியது தமிழனின் பணியாகும்.

"உடல் மண்ணுக்கே, உயிர் தமிழுக்கே" பேச்சில் எழுத்தில் மட்டுமல்லாமல் செயலிலும் இருக்க வேண்டும். இதுவே தமிழ் ஆர்வலரின் பெருவிருப்பமாகும். பாவினிக்க வந்த தமிழை, எங்கள் வாழ்வினிக்க வந்த மொழியை நாங்கள் வலுவிழக்க விடமுடியாது என்பதை உண்மைத் தமிழன் ஒவ்வொருவனும் உணர வேண்டும். எனவே எம்மினிய தமிழைத தளரவிடாமல் எம் பேச்சிலும், மூச்சிலும் தமிழ், தமிழ், தமிழ் என்று சொல்லி தமிழை வளர்ப்போம், வளம் படுத்துவோம் என்று திட சங்கற்பம் கொள்வோம். தமிழைக்காப்போம் என்பதில் உறுதி கொள்வோமானால் மலரப்போகும் தமிழீழத்தில் தமிழ் மணம் வீசும், தமிழின் புகழ்பரவும், தமிழ்ச் சமுதாயம் தலைநிமிர்ந்து நிற்கும். தமிழ் மொழியும் தமிழ் மண்ணும் எமது தேசியத் தலைவரின் இருவிழிகள். மண்ணின்றி மொழியில்லை - மொழியின்றி மண்ணில்லை" இந்த உண்மையை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து கொண்டு செயற்படவேண்டும். தமிழீழத்தின் விடியலுக்கு தமிழ்மொழி மிக மிக மதிக்கப்பட்டுப் போற்றப்படுதல்வேண்டும்.

'நம் தமிழில் நாகரிகமில்லை என்று. நவில்கின்றீர் நாணமின்றி
நம்தமிழில் நாகரிகமில்லை - நம் தாய்க்கே
உடையில்லை என்பதுண்டோ"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -47



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் -47**

..................................................

..................................................

..................................................

..................................................

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -46



க.இரத்தினசிங்கம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

## பரிசுக்குரிய வரிகள்

போரின் கொடுமைத்துயரால் சொந்த
ஊரில் உள்ளதெல்லாம் இழந்து வந்த
ஊனம் ஏதும் இல்லாத உழைப்பாளி நீ
வானம் பொழியுது வருந்தாதே வாழலாம் தொழில் செய்து.

## பாராட்டுக்குரிய வரிகள்

*மனை இழந்து மனையாள் இழந்து - எறி*
*கணைகளிலிருந்து தப்பி வந்து*
*எச்சில் உணவருந்தி வயிறு கழுவ - உனை*
*எய்தவன் எரிந்திட வேண்டாமோ?*

வ.சுதன்,
புளியங்குளம்.

*பச்சை வயல்களெல்லாம்*
*பாதுகாப்பு வலயத்தினுள் போச்சு*
*பிச்சை எடுப்பதே - நாளும் என்*
*பிழைப்பானதாச்சு.*

ம.பாவேந்தன்,
விசுவமடு.

*புரிந்துணர்வில் ஊர் சென்றும்*
*வீதியோர வாழ்வுதான் - எனது*
*ஊர், வீடு, வளமான மண் எல்லாம் - இப்போ*
*அன்னியனின் உயர் பாதுகாப்பு வலயமாம்.*

ச.சதாகரன்,
முல்லைத்தீவு.

*உறவுகளே! உங்களில் ஒருவனிங்கு,*
*ஊரிழந்தேன், உறவிழந்தேன்,*
*ஒரு வேளை சோறிழந்தேன்,*
*தெருவோரமே என் மாளிகை.*

பி.ரேவதி,
கிளிநொச்சி.

*தெருவோரம் யாசிக்கும் தமிழ் மகனே - ஐயா*
*உமது உடல் ஊனம் என்றேல் உள்ளம் ஊனமா?*
*இது ருவாண்டா தேசமல்ல - இது கரிகாலன்*
*உமக்காய் மூதாளர் பேணலகம் திறந்துள்ளார் பாரும்.*

ம.கௌசிகா,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



வையகத்தில் 1979-02-19

தெய்வத்தினுள் 2001-12-05

## செல்வி. அகல்யா திருச்செல்வம்

திதி.12.12.2003

கருவறையில் குடியிருந்து எம் வாழ்க்கைக்கே கருவானாய்
உருவமதில் அழகு கொண்டு பேரழகி தானானாய்- உன்
திருவுருவம் தான் மறைந்து ஆண்டு இரண்டே ஆனாலும்
மருகுதம்மா எம் மனது தாயே உன்பிரிவை எண்ணி,
இல்லறத்தில் இணைந்திட்டு இன்மகவை ஈன்றெடுக்க
எவ்வளவோ கற்பனைகள் எம்மனதில் பூத்ததுண்டு
அவ்வளவும் காதலனின் எதிர்ப்பால் மாண்டதுவோ?
இவ்வுலகம் இனிக்கவில்லை நீ இல்லை என்பதனால்
இமைகளிலேஉறக்கம் இல்லை, நாவினிலே சுவையும் இல்லை
சுமைகளினால் இதயமதில் இன்பமென்றசொல்லுமில்லை
நமையெல்லாம் நடப்பிணமாய் ஆக்கிவிட்டஅகல்யாவே
இமைக்கிற கணப்பொழுதும் அகலவில்லை உன் உருவம்.

"உன் ஆத்மா சாந்த அடைவதாக"

தகவல்:-
பாசமுள்ள அப்பா திருச்செல்வம்,
அம்மா கலைவாணி,
அண்ணா அன்பழகன்,
தம்பி அமலன்

D.8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

[3386]




இஸ்ரேலியப் பிரதமர் பெரசுக்கு எதிராக அராபிய அமெரிக்கர் நடத்தும் போராட்டம்.




அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தால் வடிவமைக் கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்டநிறைகுறைந்த இராணுவச்சீருடை. (மேலே)




பொஸ்ரன் பகுதி வீதியில் தனது காரின் மேல் படிந்துள்ள பனியை அகற்றும்பெண்.


வெள்ளைப்புலியின் பிள்ளைப்பாசம் இது. நெதர்லாந்திலுள்ள மிருகக்காட்சிச்சாலையில் உள்ள நீனா என்ற வெள்ளைப்புலி இரு குட்டிகளை ஈன்றுள்ளது. இவற்றுக்கு றிக்ஸி, மக்ஸி எனப் பெயரிடப்பட்டுள்ளது.



பாசம்



ஆசிய யானையுடன் விளையாடும் ஆபிரிக்க யானைக் குட்டிஇது. டெல்லி மிருகக் காட்சிச் சாலையில்



உண்மையில் இவர் இப்படித்தான் தான் என்று ஏமாந்துவிடாதீர்கள், இது கணனியின் விந்தை.


அழகன் பதிப்பகம்
கணனி முறையில், சகல விதமான அச்சு வேலைகளுக்கும் குறித்த நேரத்தில் செய்துகொள்ள நாடுங்கள்.
யாழ்சாலை, கிளிநொச்சி.


## கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் கிளிநொச்சி

### பொன்விழா

### பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல்

காலம்:-14-12-2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணி
இடம் :-வித்தியாலய மண்டபம்

நாட்டின் அனைத்துப்பாகங்களிலும் உள்ள எமது பழைய மாணவர்கள் அனைவரும் இம் முக்கிய கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


பழைய மாணவர் சங்கம்
கிளி/வட்டக்கச்சி ம.வி


SUMEE
SM கோல்ட் ஹவுஸ்
இல: 46A ,தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.
காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
(சி-8817)






DAIDO
உங்களின் சிறந்த தெரிவுகளுக்கு எங்களின் காட்சியறைக்கு வாருங்கள்!
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்
நாயகி கட்டடம்,
பரந்தன் சந்தி அருகாமை,
யாழ்சாலை,
கிளிநொச்சி.
சி வ கு ரு
கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்.
(சி-8818)
SM Graphics





EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது ரோல்ஸ் ரொய்ஸ் இயந்திரத்தின் ... பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் - 021-2223891,021-2226297, 074 512666, 011-2360291,0712-348888,0712-349999, 011-2360290,
e-mail- jaffna@expoavi.com
இல... முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை
C-8540







இப் பத்திரிகை... ...தம் பணிமனையில் 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.